# புரவலன்

வெள்ளியங்காட்டான்

இரா. நளினி

1/ 52 அரசமர வீதி,

ஆவராம்பாளையம், கோவை – 6.

# புரவலன்

வெள்ளியங்காட்டான்

குமணன் பதிப்பகம்
ஆவரம்பாளையம் சாலை, பீளமேடு அஞ்சல்
கோவை-641 004

○ புரவலன்

காவியம்

○ உரிமை

ஆசிரியர்க்கு

○ வெளியீடு

குமணன் பதிப்பகம்
பீளமேடு
கோவை — 641 004

○ விற்பனை உரிமை

விஜயா பதிப்பகம்,
6, ராஜவீதி
கோயமுத்தூர் 641 001

○ அச்சகம்

சிந்தாமணி அச்சகம்
கோவை-641 004
போன் : 87566

○ முதற்பதிப்பு

ஆகஸ்டு 1984

○ விலை ரூ. 10/—

# பதிப்புரை

நீல வானில் நின்று நிலவும் இயற்கைச் சக்திகள் ஒன்று கூடிச் சத்தியத்தை நிலவுலகுக்கு அனுப்பும் போது வாழ்த்தி வழங்கிய வார்த்தைகளிவை :

'இங்குள்ள அனைத்துப் பொருள்களின் பிராண சக்தியாக உள்ள சத்தியமே! நிலவுலகம் உன் வரவை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. நீயின்றி அங்கு மக்கள் அமைதியாக வாழும் பாங்கில்லை. அமைதியில்லாத வாழ்வு ஆபத்தானது என்பது நீயும் அறிகுவை.

உன்குரலில்தான் நீதி நிலை கொண்டுள்ளது; அன்பு அரும்பி மலர்கிறது. இன்பம் இரண்டறக் கலந்து இதயம் கமழ்கிறது. ஆகவே எங்கள் அனைவரையும் விடச்சத்தியமாகிய உன்னுடைய அவசியம் மக்களுக்கு இன்றியமையாதது. உன்குரல் அந்தி சந்தி இடைவிடாது அங்கு ஒலித்துக் கொண்டே இருப்பதாக! வானத்துக்குச் சூரியன் போல் மக்கள் இதயத்தில் நீயும் குடிகொண்டிரு! அவர்களுடைய மனம் வாக்கு காயங்களில் நீ சதா காலம் எண்ணமாயும் சொல்லாயும் செயலாயும் ஒளிமயமாக வெளிப்பட்டுக் கொண்டிரு! என்று.

அன்று பூமிக்கு வந்து சேர்ந்த சத்தியம் பல்லாயிரம் ஆண்டு காலம் அவ்வாறே நின்று நிலவிற்று. சமத்துவம், சகோதரத்துவம், சுதந்திரம் ஆகிய மூன்றும் மக்கள் வாழ்க்கைக்கு அடிப்படைகளாகி மாண்பும் மகிழ்ச்சியும் மல்கி மலர ஏற்றத் தாழ்வின்றி அனைவரும் இன்பமாக வாழ்ந்தனர்; உலகில் அமைதி நிரம்பி வழிந்தது.

மக்கள் வாழ்க்கைக்கு மேலும் அத்யா அவசியமான மூலாதாரச் சக்திகள் மூன்றுள என்பர் அறிஞர். அவையாவன:

அறிவு, ஆளுமை, துய்ப்புறல்!- இதனையே சத்து, சித்து ஆனந்தம் என்றும் பண்டைய ஆன்றோர் வழங்குவர். நடைமுறையில் மக்கள் மனங்களில் பதிந்திருந்து செயல்பட்டிலகிய இவ்வுண்மைகள் காலப்போக்கில் மெல்லத் தேயவிடப்பட்டன; சுயநலம் அங்கங்கே தலைதூக்கலாயிற்று. கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்பது மக்கள் கொள்கையாயிற்று.

இந்தக் காலகட்டத்தில் மக்கள் முப்பிரிவினராகி விட்டனர் என்று அறிஞர் கூர்ந்தறிந் துரைத்தனர் 'சத்வ, ரஜஸ், தமஸ்' என்று மக்கள் ஒழுகு முறைகளைக் கொண்டு பெயர்களும் சூட்டப்பட்டன.

சத்தியத்தை அடிப்படையாகக் கொண்டது சாத்விகம்; பொருளை அடிப்படையாகக் கொண்டது ரஜஸ்; அறியாமையை அடிப்படையாகக் கொன்டது தமஸ்.

மக்கள் வாழ்வு வழிதவறி விட்டதையறிந்து சாத்விகம் வருந்திற்று. பாலில் நீர் கலந்தது போல, மெய்யில் பொய் கலந்து பொதுநலத்தில் பொத்தல் விழுந்து விட்டதைக் கண்டு சரிப்படுத்தச் சாத்விகம் பெருமுயற்சி எடுத்துக் கொண்டது. மனிதனுக்கு மனிதன் பாதுகாப்பு என்பதனை மறக்கக் கூடாது என்றது; வலுத்தவன் இளைத்தவன் மேல் ஆளுமை செய்தல் கூடாது என்றது; அறிவு, பொருள், உழைப்பு எல்லாருக்கும் பொது என்பதை மறக்க வேண்டாம்' என்றது; ஒளியிலிருந்து இருளுக்குச் செல்ல வேண்டாம்; அறிவை ஆசைக்குப் பலியிட வேண்டாம்' என்றெல்லாம் பன்னிப் பன்னிக் கூறிக் குமைந்தது. ஆயினும் பொத்தல் அடைபடவே இல்லை; ருசி கண்ட பூனை உரியுரியாய்த் தாவிச் சட்டி பானைகளை உருட்டி உடைப்பது போலப் பழக்கம் பலப்பட்டு நாடு பாழாகத் தொடங்கிற்று.

எனினும் சாத்விகத்தின் வாயில், 'சத்தியம் சத்தியம்' என்று பின்னும் ஒலித்துக் கொண்டு தான் இருந்தது. ஆயினும் அதில் ஆளுமை இல்லை; வீரிய மில்லை; ஆயினும் என்ன?

சத்தியத்தின் சக்தி பெரிது. நெருப்பு எரிந்தவிந்து தணலாய்ச் சாம்பல் முடியநிலையிலும் அதன் சுடும் தன்மை இருப்பதியல்பே யன்றோ? இன்றும் அது அவ்வாறேபேசிக்கொண்டுதானுள்ளது.

கள்ளத் தனத்தை உள்ளத்தில் ஒளித்துக் கொண்டுள்ள இராஜசும், கழுத்தறுப்புக்குக் கைக்கூலி வாங்கும் தமசும் அசட்டுத் தனமும் அச்சமுமாகி ஒரு நாள் வந்து சத்தியத்தைச் சந்தித்தன; 'எல்லாம் வல்ல சத்தியமே உனக்கு வெற்றி உண்டாகுக!' என்று கூறி வணக்கம் செய்தன. 'சாத்விகத்தை நேசிப்பதுபோல் கருணை கூர்ந்து எங்களையும் நேசிக்க வேண்டும் என வினயமாக வேண்டிக் கொண்டன. உடல்நலம் ஒன்றே பேணி உளநலம் அறவே அற்ற அவையிரண்டும் சத்தியத்தை நோக்கிக் கெஞ்சுங்குரலில் மேலும் ஒருவரம் அருளுமாறும் யாசித்தன; தெய்வமே ஆன சத்தியமே! எங்கள் உள்ளங்களில் உன்னை நிரந்தரமாக வைத்துப் போற்றிக் கொண்டிருக்க இயலவில்லை; எங்கள் மனம், அறிவுரத்தைப் போதுமான அளவு ஏனோ பற்றிக் கொள்ள மறுக்கிறது. மனது செம்மைப்படாத இடத்தில் தெய்வமாகிய நீ குடிகொள்ள மாட்டாய் என்றும் நாட்டில் வதந்தி. எங்களுக்குப் பிறப்பும் இறப்பும், வாழ்வின் பயனும் பற்றித்தெளிவுற யாரும் விளக்கவே இல்லை. ஆசைப்பட்டதை அடைந்து அனுபவிக்க முயல்கிறோம். கூடவே இன்னவெனத் தெரியாத கவலைகள் நோய்கள் எம்மை ஆட்கொள்ளுகின்றன; அச்சத்திற் குள்ளாகிறோம். எங்கள் வாழ்வே இருள்மயமாக உள்ளது. ஆனதன் காரணமாய் உன்னை ஊர்ப்பொது இடத்தில் வைத்துப் பூசிக்க விரும்புகிறோம். இவ்வாறு செய்ய மேலான உன் அனுமதி எங்களுக்குத் தேவைப்படுகிறது என்று கசிந்துருகிக்கண்ணீர் மல்க நின்று கை கூப்பி வணங்கின.

எதார்த்தமான சத்தியம் இவ்வேண்டுகோளை ஏற்று இரக்கம் காட்டி 'ததாஸ்து' என்றது.

சத்தியம் எந்த ஒரு மனிதனுக்கும் சொந்தமானதன்று அது உருவமுடையதும் அல்ல. அது அறிந்து அடைவது.

வழிபாடு செய்வதன்று என்று உணராத ரஜசும்தமசும் உச்சி குளிர்ந்து உள்ளம் குளிர்ந்து முகமலர்ச்சியோடு விடை பெற்றுக் கொணடன.

ஒரு சில நாளில் உருவமற்ற சத்தியத்திற்கு உருவ முண்டாயிற்று. ஊர் மன்றில் மேடைக் கோயில் எழுந்தது. கொட்டுமுழக்குக் கும்பாபிசேகம் -எல்லாம் கோலாகலமாக நடைபெறத் தொடங்கின.

சுருங்கக் கூறின் சத்தியம் அல்லது பிர்மம் சிறைப் படுத்தப் பட்டாயிற்று. சத்தியம் என்ற பெயர் சாமி என்று மாற்றமடைந்தது.

உலகம் இதற்குப்பின் கண்ட மாற்றம் என்ன? பின்பும் அதேபழய குருடிக்கதை தான்; உடலையும் உயிரையும் கண்ட மனிதன் தன்னுள் ஒரு உள்ளம் இருப்பதும், உள்ளம் உண்மைக்காகவே உள்ளது என்பதும் உணராதபோது அச்சமும் கவலையும் வம்பும் வழக்கும் பொய்யும் வஞ்சனையும் பார்த்தினீயப் பூடாய் வளர்ந்து பாரைப் படுநாசப் படுத்திக் கொண்டிருப்ப தறியாது வேதனை பாடல்களாய் பண்ணி னிமையோடு வெளிப்படலாயிற்று.

'சாவிலிருந்து என்னைச் சாகாமைக்கு அழைத்துச்செல்; இருளிலிருந்து என்னை ஒளிக்கு அழைத்துச்செல், நரகத்தி லிருந்து என்னைச் சுவர்க்கத்துக்கு அழைத்துச் செல்' என்று.

உள்ளமிருந்தும் உணராத இந்த மக்களை சுவர்க்கத்துக்கு யார் அழைத்துச் செல்லவுள்ளனர். குருடனைக் குருடன் எங்கு அழைத்துச் செல்ல இயலும்?

அன்றிலிருந்து இன்று காறும் இவர்களுக்குப் பொழுது புலரவும் இல்லை; பொற்கோழி கூவவும் இல்லை. எனினும் கோவில்கள் தோறும் இந்தக் கூக்குரல் மாத்திரம் ஓயா தொலித்துக் கொண்டே உள்ளது.

கையும், கல்லும் கத்தியும் ஆயுதமாக இருந்ததுபோய் அணுவையும் ஐட் ரஜனையும் ஆயுதமாக மாற்றிக் கொண்டு மக்கள் தம்மைத் தாமே இன்று கொன்று கொள்ள முனைந்து உள்ளனர். ஆயினும் ஆராய்ச்சியுள்ள மனிதன், விளைவுகளை எண்ணிப்பார்க்கும் மனிதன் இந்த நிலைக்கு எப்படி 'ததாஸ்து' கூற இயலும்?

'தாளுடா விடினும் தன் சதையாடும்' எனும் வழக்குச் சொல் உண்மையல்லவா? ஆகவே சாத்விகத்தின் மனோ நிலையும் சகோதரர்களின் அறியாமையின் அழிவைக் கண்டு வருந்தி ஒரு நாள் வலிய வந்து உரைக்கவும் செய்தது.

அருமைத் தம்பிகளே! நமது வயிறு பசிக்கிறதெனின் நாமேதான் உணவு அருந்த வேண்டும்; நமது உடல் வலிக்கிறதெனின், அதற்கும் நாமேதான் மருந்தருந்த வேண்டும். நமக்காகப் பிறர் இதனைச் செய்ய இயலாதே!

அசத்திலிருந்து சத்துக்குச் செல்ல வேண்டினும், இருளிலிருந்து ஒளிக்குச் செல்ல வேண்டினும் நம்மைப் பிறர் யாரும் அழைத்துச் செல்ல முடியாது. தட்டுத் தடுமாறிக் கொண்டேனும் அவற்றை நாடி நாமேதான் செல்ல வேண்டி உள்ளது.

முதலில் நம்மிடமுள்ள எல்லா விதமான - பொய் பொறாமை, சூது, சுயநலம், வம்பு, வழக்கு முதலிய— அசத்துக்களை அறவே கூட்டிக் குப்பை மேட்டில் கொட்டித் தூயவராவோமாயின் நாம் வெகு எளிதாகச் சத்துக்குச்சென்று சேர்ந்துவிடுவோம்; அங்கேயே ஒளியும் காண்போம்; ஒழுங்கும் அழகுமாகிய சு + வர்க்கம் = சுவர்க்கம் அங்கேதான் இருக்கிறது, நிரந்தரமாக நாமும் அங்கு, அமைதியாக ஆனந்தமாக வாழலாம், என்றது.

'அண்ணா! நீர் அடிகளார் வாக்கை யறியீரானீர்; குருவின் வாக்கைக் கொள்ளீரானீர். வைகுந்தமும், கைலாயமும் நம் வீட்டு வாயிலில் இல்லை; இவைகள், நம் கண்காணாத

நெடுந் தொலையில் உள்ளதாம். சத்தும் ஒளியும் சாகாமையும் அங்கே தான் நிலைகொண்டுள்ளன என்று நாங்கள் கேள்வி மூலம் அறிந்துள்ளோம். இது பொய்யாக இராது' என்றன ரஜசும் தமசும்.

விளியற்றவனைப் பார்த்துக் கழி எத்தகையதென வினவின் தொடுமுணர்வின் துணையால் அவன் சரியான விடை அளிக்கவும் முடியும். ஆனால், கிளி எத்தகையதென வினவின் கீழும் மேலும் பார்ப்பான்; பேந்தப் பேந்த விழிப்பான்; அன்றேல் தனக்குத் தெரிந்ததை உளறிக் கொட்டுவானன்றோ?

உடன் பிறந்த பாசம் சாத்விகத்தைப் பின்னும் பேசுமாறு செய்தது.

'பிரம்ம மேதய, மது மேதய: பிரம்மமேவ மதுமேதய பிரம்மம் புத்தியின் தாரணைச் சக்தியால் அடையப் படுகிறது. ஆனந்தம் புத்தியின் தாரணைச் சக்தியால் அடையப் படுகிறது பிரம்மமே ஆகிய ஆனந்தம் புத்தியின் தாரணைச் சக்தியால் அடையப்படுகிறது' என்கிறது உபநிசத்து.

காமம், வெகுளி, மயக்கம் இம்மூன்றும் நம்முடைய உட்பகைகள். உள்ளத்தை மாசு படுத்தி நம் வாழ்வைப் பாழ் படுத்திவைப்பவைகள் இம்மூன்றும்தான். அனுபவஅறிவாகிய உண்மையே இந்த உட்பகைக்குச் சரியான மருந்து. எனவே நம் உள்ளம் தூய்மையாயின் அங்கே உண்மை ஒளி வீசும்.

இந்த உண்மையை வேண்டித் தொழுது பிற ஒன்றின் பால் அல்லது பிறர் ஒருவரிடமிருந்து கடைச்சரக்குப் போலப் பெற்றுக் கொள்வதும் அன்று. எந்த ஒரு மனிதனுக்கும் சொந்தமானதும் அன்று. இதற்கு உருவமும் நிறமும் கிடையாது. பெறற்கரிய பேறு-அறிந்து அடையும் ஆனந்தம்! மனிதனை மகானாக்கக் கூடிய இந்த உண்மையை எந்தக்குருவும் எந்த அடிகளாரும் எந்த ஒரு மனிதனுக்கும் கொடுக்கவும் வாங்கவும் இயலாத ஒன்று.

சத்தியத்தின் இருப்பிடம் தூய உள்ளம்; சத்தியந்தான் பிரம்மம்! இதுவே ஆனந்தநிலே; இதை நீங்கள் ஏன் அறிந்து கொள்ளாது துன்புறுகிறீர்கள்? என்று கேட்டது சாத்விகம். 1

இல்லே அண்ணு! நாங்கள் கேள்விப்பட்டது இதற்கு நேர் மாருக உள்ளது. பக்தி ஒன்றுதான் நம்மைப் பகவானிடம் அழைத்துச் செல்லுமாம்! ஆழ்வார்களும், நாயன்மார்களும் மக்கள்நலன்-பிறப்பின் பயன் பெற நேர்பாதை அமைத்துள்ள னராம்! அதன் பெயர், பக்தி மார்க்கம் என்பதாம் என்றது ரஜஸ்; ஆம் அதில் என்ன சந்தேகம், அதுவே ராஜமார்க்கம் என்றது தமஸ்!

'அருமைத்தம்பிகளே! நானறிந்த அளவில் உபநிசத்துக் களின் வழிகாட்டுதல் தான் மிகச்சரியான பேதங்களற்ற உலக அறிஞர்கள் உளம்மகிழ்ந்தேற்றுக் கொள்ளக் கூடிய, வம்பும் வழக்கும் வழிமறிக்காது துன்பமும் துயரமும் தொடர்ந்து வராத சுவர்க்கவழி.' 'மனேமய ப்ராண சரீர நேதா ப்ரதிஷ்டதோ அன்னே இருதயம் சந்நிதாய; பிரம்மம், மனேமயமானது உயிரையும் உடலேயும் இயக்குவது. அன்னத்தை உண்டு வளரும் உடலே இருப்பிடமாய்க் கொண்டு இருதயத்தில் வாசம் செய்கிறது, என்கிறது உபநிசத்து. அதிபூதம், அதி தெய்வம், அதியாத்மம்—ஐந்து பூதங்களின் ஐந்து சக்திகளின் அளவான ஒன்றிப்பின்பிரதி உருவமே உடலும் உயிரும்; உள்ளத்திற்காக அமைந்துள்ள பாத்திரமே உடலும் உயிரும். உள்ளத்தைத் தூய்மையாக்கின் அதுவே பிரம்மம் உறையுமிடம். பிரம்மம் நமக்குப் புறத்தே இல்லே. அது ஒரு பொருளும் அன்று, கோரிப் பெறுவதும் அன்று.

பக்தி நம்மை நப்பாசையில் கொண்டு விட்டுவிடும். ஆடலும் பாடலும் அவனேக் காட்டமாட்டாது. கடைசியில் ஏமாற்றத்துக்கு, மரணபயத்துக்கு ஆளாக வேண்டி நேரிடும்; நிம்மதி பக்தியினுல் கைகூடாது.

'பரோடா பாங்குப் பணமே என் பைக்கு வந்து விடு; சென்ட்ரல் பாங்குச் செல்வமே என்னைச் செழிப்படையச் செய்' என்று ஒரு கோடி உருப் போட்டாலும் உபயோகமில்லை.

உறுதியாக நான் இதனைச் சொல்கிறேன். ப்ரம்மவிதாப் னோதி பரம்—பிரம்மத்தை அறிந்தவன் பிரம்மமாகிறான் என்னும் சொல் பொய்யன்று. அந்தப் பிரம்மம் 'சத்தியம், ஞானம், அனந்தம்' என்ற மூன்று வகையில் வெளிப்படுவது.

இதுதான் தன்னைத் தானறியும் நிலை; 'தன்னையறிந்தவன் தலைவனை யறிந்தான்' என்பது மறுக்க முடியாத கருத்து. இந்தத் தெளிந்த கருத்தையே, 'சித்தமிசை குடிகொண்டு சித்தமறியா திலகும் திவ்ய தேசோமயம்' என்று நமது தமிழ் செய்யுள் ஆணித்தரமாகச் சுட்டிக் காட்டுகிறது. இந்தத் தெய்விக உண்மைக் கருத்து தெரிந்திருந்தும் இதை ஒதுக்கிவிட்டு மாறாக வேறு கூறுவது நம்மை நாமே ஏமாற்றிக் கொள்வதாகும்.

மக்களைத் துன்பத்தில் ஆழ்த்தித் துதிசெய்ய வைக்கும் சூழ்ச்சியே ஆகும். கோபதாபக் கொடுமைகளைப் புரிய வைத்து கற்சிலைகளைப் பூசிக்கச் செய்து புலனை மாய்ப்பதாகும்' என்றது சத்வம். இது நிற்க,

இதற்கு மூலகாரணமானவர் யார்? இது ஏன்? எதற்காக? இந்தச் சிலைக் கடவுளை வைத்துச் சேவித்து தேசம் அடைந்த பயன் யாது? என்று அறிஞன் சிந்தித்துத் தெளிய வேண்டிய கால கட்டத்தில் இன்று நாட்டு நடைமுறையும் உள்ளது. மக்கள் மனத்தில் இன்று மலினம் நிலையாகக் குடி கொண்டு கொட்டும் முழக்கும் செவியைச் செவிடாக்குகிறது.

மிகப் பெரிய இக் கீழ்நோக்கிப் பாதையைக் காட்டி முதன்முதலில் மக்களை யழைத்துச் சென்ற அந்த மாமனிதனை நமக்கு அடையாளம் காட்டுகிறது ஈசா வாஸ்யோப நிசத்து 41-ம் பக்க அடிக்குறிப்பு.

'இவ்வுபநிசத்தில் எட்டு மந்திரங்களில் சொல்லிய விசயம் கீதை முதல் ஆறு அத்தியாயங்களிலும், பின் எட்டு மந்திரங்களில் சொல்லிய விசயம் நடு ஆறு அத்தியாயங்களிலும், முடிவில் இரண்டு அத்தியாயங்களில் சொல்லிய விசயம் கடை ஆறு அத்தியாயங்களிலும் விவரிக்கப்பட்டுள்ளன

( — கூர நாராயணர் )

இப்பொழுது கீதையின் தாய் ஈசாவாஸ்யோபநிசத்து என்று நாம் அறிகிறோம்.

உபநிசத்து நமக்குச் சுட்டிக் காட்டும் பிரம்மம் 'அகம் பிரம்மாஸ்மி' — நானே பிரம்மமாயுள்ளேன்' என்பதாகும்.

இது தன்னையறிந்த நிலை; ஒவ்வொருவரும் சத்தியத்தை அறிந்து வாழ்க்கையில் மேற்கொண்டொழுகத் தூண்டும் நிலை; உலகில் அமைதியும் ஆனந்தமும் நின்று நிலவச் செய்யும் தெய்விக நிலை.

கீதை காட்டும் நிலை நம்மைப் போன்ற ஒருதாயின் வயிற்றில் பிறந்த ஒரு மனிதனை வணங்கச் செய்யும் நிலை, உருவ வழிபாட்டுக்கு இது அடித்தளம் அமைக்கிறது. ஒழுகு நிலைக்குரிய சத்தியம் எனும் சாலையில் ஒரு சிவப்புத்துணியைக் கட்டி, கரடு முரடான பயனற்ற புதிய வழியில் செல்லுமாறு கட்டளையிடுகிறது. சுருக்கிக் கூறின் கீதை நம்மை திசை தப்பச் செய்து வைக்கிறது.

'ருதம் சத்தியம் பரப் பிரம்மம்' எனும் உபநிசத்துக்கு மாறு கூறுகிறது. எரியும் திருவிளக்கை அணைத்து இருள் பரவச் செய்கிறது.

ருதம் — விவகார உண்மை; உலகில் காணும் ஒழுங்கும் அழகும்; சத்தியம் — உலகின் ஒழுங்குக்கும் அழகுக்கும் அடிப்படையான, பாரமார்த்திக உண்மை. இதனையே 'சத்தியம் சிவம் சுந்தரம்' என்றும் குறிப்பிடுவர் ஆன்றோர்.

ஒழுக்கமே அறம். இளமைக்கும் முதுமைக்குமாக 'இல்லறம் துறவறம்' என்று இரு கூறாக்கி வள்ளுவம் தொன்று தொட்டு அறநெறியைப் பறைசாற்றிக் கொண்டிருப்பது தமிழ் நாட்டில் தான்; தமிழ் மக்கள் அறிந்தொழுகுவதற்காகத் தான்.

தர்மம் ஏவ அதோ அந்தி: தர்மோ ரச்சதி ரச்சிதிக: என்று உபநிசத்தும் இதையே உபதேசம் செய்கிறது. தருமத்தை நீ கொன்றால் தருமம் உன்னைக் கொல்லுகிறது. 'தருமத்தை நீ காத்தால் தருமம் உன்னைக் காக்கிறது.' என்பது இதன் பொருள். மேலும் இதனைச் சுருக்கித் 'தருமம் தலை காக்கும்' என்று தமிழ் நாட்டுப் பட்டி தொட்டிகளெல்லாம் முழங்கிக் கொண்டிருந்ததையும் என் இளமைப் பருவத்தில் நான் அறிந்துளேன்.

ஆராய்ச்சி உண்மையான இந்த அரும் பெரும் சத்தியமும், அறமும் இன்று யார் அபகரித்து கொண்டனர் நம்மிடமுருந்து? யாரிடம் நாம் பறிகொடுத்தோம்?

சத்தியமும் அறமும் தன்னைத் தான் அறியும் நிலை; இவை மனிதனை தெய்வமாக்க வல்லவை; வாழ்வில் அமைதியும் ஆனந்தமும் உண்டாகக் காரணங்களானவை.

கீதை உபநிசத்துக்கு மாறாக 'சகுணப் பிரம்மம்' என்றும் நிர்குணப் பிரம்மம் என்றும் பேரிட்டு, 'பார்த்த சாரதி நின் பாதமே கதி' என்று நம்மைப் பாடிப் பரவச் செய்கிறது. சத்தியஸ்ய சத்தியமான ஆன்மீகத்தை அடிமைப் படுத்துகிறது இதற்குப் பக்தி என்றும் பேரிடுகின்றது. 'பக்தி' என்ற சொல் அடிமை எனும் பொருள் தரும் சொல்! இட்டுக் கட்டிய சொல்; உபநிசத்தில் காணாத சொல்.

வேத வியாசன், உருவ வழிபாட்டிற்குக் காரணமாகக் கீதையை பாரதத்தில் புகுத்துகிறான். உபநிசத்துக் கருத்துக்கு மாறாக, உலக விவகாரப் பாரமார்த்திக் உண்மைகளுக்கு மாறாகக் கூறிச் செல்கிறான். புனரபி ஜனனம் புனரபி மரணம்

சம்பவாமி யுகே யுகே போன்ற பொய்கள் உபநிசத்தில் கிடையாது. ஒருமுறை தான் ஒருவன் பிறக்கிருன், வாழ்கிருன், மறைகிருன் என்பதற்கு வேண்டிய நிரூபணங்கள் உபநிசத்தில் உள்ளது. நமது முன் பிறவி நம் தாய் தந்தையர், நமது மறு பிறவி நம் பிள்ளைகள்; என்பது உபநிசத்தின் தெளிவான கருத்து.

பகவத் கீதையின் அடியொற்றி அத்வைத, துவைத, விசிஷ்டாத் துவைதங்கள் ஒன்றன்பின் ஒன்ருய்த் தோன்றி நாட்டிற்குத் துயர மூட்டிற்று. கோவிலும் குளமும் கொட்டும் முழக்குமாகச் சைவமும் வைணவமும் குடியேறிப் பக்தியும் பசலையுமாய்ப் பரிணமித்தன. எங்கள்சாமி பெரியது; உங்கள் சாமி சிறியது போன்ற சச்சரவுகள் சண்டைகள் சிறியதும் பெரியதுமாய் முளைத்து முற்றத் தொடங்கின, இந்தப் பிரித்தாளும் சூழ்ச்சியால் நாடு நலிவுற்றது.

'ஓமித் யேதந்' — ஓம் என்பது ஒரு அச்சரம்; 'ஏதத் த்யேவாச்சரம் ப்ரம்மம்' ஏதத் த்யேவாச்சாரம் பரம்' — இந்த அச்சரமேஅபரப்பிரம்மம்; இந்த அச்சரமே பரப்பிரம்மம் என்கிறது உபநிசத்து. ஓம் என்ற அச்சரத்தின் பொருள் நான் என்பதே. ஓம், அகம், பிரணவம், பிரம்மம் ஆத்மா, கடவுள் என்பன ஒருபொருள் பலசொல். உபநிசத்தின் மகத்தான இந்த உண்மையை மறைத்து, வேதவியாசர், சங்கரர் ராமானுஜ மாத்வர்கள் ஏன் உருவ வணக்கங்களுக்கு மக்களைக் கூட்டிக் கொண்டு செல்லவேண்டும்? வைணவ சைவக் கோழிச் சண்டைகளை நாட்டில் மூட்ட இவர்களுக்கு யார் அதிகாரம் கொடுத்தவர்?

'அரியதிகன் அரனதிகன் என்று சொலும் அறிவில்லோர் பரகதி சென்றடைவரிய பரிசேபோல் — எனக் கம்பனைப் பாட வைக்கும் அளவு நாடு ஒற்றுமை கெட்டது என்பது பொய்யாகாதே.

இரண்டாம் இராஜ ராஜ சோழன், 'எந்த ஒருநிலையிலும் ஒரு வைணவனுக்குச் சைவன் ஒட்டுமுறவுங் கொண்டு உதவி

ஒத்தாசை செய்யக்கூடாது என்று கல்வெட்டுச் சாசனம் செய்து வைத்தான் என்ருல் இது சைவ வைணவப் பகைமையின் உச்சகட்டமல்லவா? 'ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்' என்ற பழமொழிப்படி இதற்குப் பிறகுதானே முஸ்லீம் படையெடுப்புகளனைத்தும், மற்ற அந்நிய படையெடுப்புகளும்; அடுத்து நாடும் அடிமையாயிற்று. நாமும் சுதந்திரம் இழந்தவாரனேம்.

உபநிசத் காலத்தில் வித்தையை நாடி வந்த பிரம்மச் சாரிக்குக் குரு முதலும் முடிவுமாக விவரித்து விளக்கி அனுப்பி வைக்கும் உபதேசம் 'அகம் பிரம்மாஸ்மி' — நானே பிரம்ம மாயுள்ளேன்; 'தத்துவமசி' — அதுவே நீ என்பவை தானே! ,அயம் ஆத்மா பிரம்மம்; பிரக்ஞானம் பிரம்மம் என்பனவும் பண்டைய வேதாந்த கால உபதேசங்கள் — மகா வாக்கியங்கள் என்பது மறுக்க முடியாத உண்மைகளே யன்ரே?

சத்தியம் அடிப்படையாய் ஞானம் அனந்தம் வெளிப் படையாய் பிரம்ம ஞானம் எனும் இதனை அறவே கைவிட்டு அல்லது — மறைத்துவிட்டுச் சங்கரரும் ராமானுஜரும் 'ஓம் நம சிவாயம்' 'ஓம் நமோ நாராயண' என்று மாற்ற என்ன அவசியம் ஏற்பட்டது? நெருப்பும், நீருமாகிய (ருத்திரன் நாராயணன்) பூத வணக்கத்திற்கு மக்களை ஏன் உள்ளாக்க வேண்டும். மக்கள் ஆன்மீகத்திற்கு அருகதையற்றவராயினரா? தன்னைத் தானறியும் தன்மையில் நல்லது இல்லை; நெருப்பும் நீரும் தான் மக்களுக்கு இன்றியமையாதது என்று தீர்மானித் துச் செய்த பூசணிக்காயைச் சோற்ருல் மறைத்த செயலா?

'அத்யத் தபோ தான — மார்ஜவ மகிம்சா சத்ய வசன மிதி' — தவம், தானம், நேர்மை, அகிம்சை, சத்தியம் ஆகிய இவ்வைந்தும் நாம் வாழ்க்கையில் மேற்கொண் டொழுக வேண்டிய இன்றியமையாத பண்புகள் என்பதை இவ்வாச் சாரிமார்கள் அறிந்திருக்கவில்லையா?

மனிதனை மகானகச் செய்ய வல்ல இவ்வைந்து பண்பு களையும் கோர ஆங்கீரசர், தேவகி புத்திரனகிய கிருஷ்ணனுக்கு

உளங்கொளக் கூறித் தெளிவித்தார் என்று பேசுகிறது சாந்தோக்கிய உபநிசத்து. இது இவ்வாறிருந்தும் ஒரு சாதாரணக் கிருஷ்ணனை வேதவியாசன் பரமாத்மாவாக்க வேண்டிய அத்தியா அவசியம்தான் என்ன? மக்கள் அந்த அளவுக்கு என்ன தவறு செய்தனர், ஜடத்தை வணங்க வைத்து இவ்வாறு தண்டனை யடையச் செய்வதற்கும்.

இந்த வேதவியாசரும் ஆச்சாரிமார்களும் யாராக வேனும் இருக்கட்டும். உபநிசத்துக் கருத்துகளுக்கு மாருகப் பூதப் பிரேத வழிபாடுகளைக் கொண்டுவர இருந்த அவசியம் ஒன்று உபநிசத்துக்களுணர்த்தும் சத்தியத்தைப் (பிரம்மத்தை) புரிந்து கொள்ளாதவர் எனவேண்டும். இஃதன்றெனில் விப்பிரார்தம் வயிறு காயாதவாறு செய்த சூழ்ச்சியாக இருக்க வேண்டும். ஆம்! இவ்விரண்டி லொன்று உண்மையெனவே வேண்டும்.

இதை நிரூபிக்க, ஒரு மேற்கோள் இங்கு இன்றியமை யாதது. 'ஓம் பூர்ணமத பூர்ணமிதம் பூர்ணாத் பூர்ண முதச்யதே பூர்ணஸ்ய பூர்ண மாதாய பூர்ண மேவா வசியஸ்தே. என்பது ஈசா வாஸ்யோப நிசத்தின் முதல் சூத்திரத்துக்கும் முதல் சூத்திரம். இதன் தமிழ் உரை: ஓம் அது பூர்ணம்; இதுவும் பூர்ணம். பூர்ணத்திலிருந்து பூர்ணம் உதித்துள்ளது. பூர்ணத்தி லிருந்து பூர்ணத்தை எடுத்தும் பூர்ணமே எஞ்சி யுள்ளது என்பதாம்.

உரையாசியர் இதற்கு மேலும் ஒரு சிறிய அடிக்குறிப்பும் கொடுத்திருக்கிறார் (அத) அது-பிர்ம்மம்; (இதம்) இது-உலகம் பூரணமாகிய உலகத்தைக் காட்டிலும் புர்ணமான பிரம்ம பாவனையை அறிந்தால் பிரம்மமே எஞ்சியுள்ளது என்றும் பொருள் கொள்ளலாம், என்று.

என் உள்ளம் தெளிவுபட இது துளியும் உதவுமாறில்லை. இதற்கு மேலும் ஒரு குறிப்புரை. 'பூர்ணமே எஞ்சி நிற்கிறது — ஒரு பொருளினின்று ஒரு பகுதியை வேறு படுத்தினல் எஞ்சி

நிற்பது முழுமை இழந்த ஒரு பகுதியாகத்தானிருக்கும் என்பது கணித சித்தாந்தம். ஆனால், பரம் பொருள் இந்தக் கணித நூல் நியதிக்கு அடங்காது. (உபநிசத்து பலகணி — ராஜாஜி)

என்றும் உள்ளது. எனக்கு இதுவும் நிறைவு அளிக்க வில்லை. இதற்கு மேல் இன்னும் ஒரு அடிக்குறிப்பு: 'ஈசா வாஸ்யம்' — ஈசுவரன் அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் நிறைந்திருப்பதால் பொய்யான உலகும் மெய் போன்று தோற்றமுடையதாயிற்று. (பூர்ணஇதம்) என்றும் காணப் படுகிறது.

ஒரு முறைக்குப் பன்முறை இவற்றைப் படித்தும் நான் எதையும் அறியாதவனாகத் தான் இருந்தேன். காலம் வீணாகிக் கழிந்து கொண்டிருந்தது.

ஒரு நாள் காலை; கீழ்வானில் செம்பருதி தோன்றி வெண்கரங்களை விரித்துக் கொண்டிருந்தது. என் முன் சற்று எட்ட ஒரு அழகான பசுவும், கன்றும் கட்டப்பட்டிருந்தன. இதயத்தில் எந்த ஒரு நோக்கமும் இன்றி நான் அவற்றைப் பார்த்துக் கொண்டிருந்தேன். உள்ளத்தில் பட்டென்று — ஆம், எனக்கு இதுகாறும் புலப்படாமலிருந்த அரிய உண்மை ஒன்று புலப்படத் தொடங்கிற்று.

'ஓம் பூர்ணமத: — பசுவாகிய அது பூர்ணமானது; பூர்ண மிதம் — கன்றாகிய இதுவும் பூர்ணமானது. பூர்ணாத் பூர்ண முதச்யதே — பூர்ணமாகிய பசுவிலிருந்து பூர்ணமாகிய கன்று உதித்துள்ளது. பூர்ணஸ்ய பூர்ண மாதாய பூர்ண மேவா வசிஸ்யதே — பூர்ணமாகிய பசுவிலிருந்து பூர்ணமாகிய கன்றை எடுத்தும் பூர்ணமாகிய பசு எஞ்சி யுள்ளது. ஓ! இது எத்தகைய புதையல்! ஈடு இணையற்ற — அறியாமை இருளை நீக்க, என் எளிய உள்ளத் துதித்த இளங்கதிரோனனைய அற்புத அறிவுப் புதையல்!

நூற்றுக்கணக்கான நூல்கள், ஆயிரமாயிரம் கவிதைகள், லட்சக்கணக்கான தேனினும் பாலினும் இனிய அருந்தமிழ்

சொற்கள் வெற்றிடமின்றி நிறைந்து கிடந்த என் இதயத்தில் அப்போது ஏற்பட்ட என் உள்ளுணர்வை வெளிப்படுத்துவதற் கேற்ற சொற்கள் காணுத நிலையில் நான் தயங்கினேன், தவித்தேன் என்று தான் கூறவேண்டும். ஆம்! அற்புதம் இது.

காலம், பருவம், இயக்கம், அதி பூத, அதி (சக்தி) தெய்வ, ஒட்டுறவுகளிலிருந்து தோன்றும், உடலுமுயிரும் மாகிய அதியாத்மப் பிறப்பு இயங்குதிணை நிலைத்திணையென வுள்ள அனைத்துச் சீவராசிகளின் தோற்றம் தம்மைத் தாமே படைத்துக் கொள்கின்றன; காத்துக் கொள்கின்றன; எந்த ஒரு கடவுளின் தலையீடும் இதில் இல்லை என்ற பேருண்மையும் இதிலிருந்து தெளிவுற்றது.

உயிர் வருக்கத்தின் பிறப்பு, வாழ்வு, இறப்பு நிலைபாடு களின் உண்மை இதுவாயிருக்க உபநிசத்துக்களின் தமிழ்உரை யாசிரியர் இதையுணராமல் ஏன் வானையும் நிலத்தையும் இணைத்துக் காட்ட வேண்டும்? மூதறிஞர் ராஜாஜி ஏன் பரம் பொருளையும் கணித சித்தாந்தத்தையும் இழுத்து முடி போட்டுக் காட்டவேண்டும்?

ஒன்று மக்களைத் திசைமாற்றும் மனோ நிலை! இஃதன் றெனில், 'காணு தான் காட்டுவான் தான் காணுன்' என்னும் குறட்பாவுக்கு இவர்கள் சரியான எடுத்துக்காட்டு என்று தான் கொள்ளவேண்டும்.

ஆன்மிக நிலை, அச்சமற்ற நிலை மிகமிக உன்னதமான நிலை! 'ஆத்மார்த்தே ப்ரதிவீர் தியஜெத் — ஆத்மாவுக்காக ஒருவன் தன்னைத் துறக்கவும் துணிகிருன்; உண்மையான ஆன்மிக வாழ்வு உருவ வழிபாடு செய்வதன்று; தொழுவதும் தோத்திரம் செய்வதுமன்று. எல்லாம் வல்ல — எல்லாமும் ஆன சத்தியத்தில் இரண்டறக் கலந்து விடுவதுதான். பிரம்மத் தை அறிந்ததன் பிரம்ம மாகிருன்' என்கிறது பிரு. உபநிசத்து

சகுணப் பிரம்ம (விக்கிரக) ஆராதனை செய்பவர்கள், 'அஜ்ஞானமாகிய இருளில் ஆழ்பவர்கள்; அசுர சுபாவ

முடையவர்கள்' தம்மைத் தாம் அறியாமல் இறப்பதால் தற்கொலை செய்து கொண்டவர்களுக்கு ஒப்பானவர்கள் என்கிறது ஈசா வாஸ்யோபநிசத்து. இஃதிருந்தும் இந்த விக்கிர ஆராதனை நிலைக்கு மக்களை இழுத்து வந்து தம்மைத் தாமறிந்தொழுகும் ஆத்மிக நிலையை மறைத்துமறக்கவைத்துத் தற்கொலை செய்து வைப்பதற்கு வழிவகுத்தவர்கள் அத்வைத, துவைத, விசிஸ்டாத்துவைத ஆச்சாரியர்கள் அன்றெனில் வேறெவர்?

கழிந்த அண்மைய ஆண்டொன்றில் ஞான, பீட பரிசு பெற்ற வி. ச. காண்டே கரின் யயாதி 'நாவலில், பிரகஸ்பதி யின் மகன் கஜன் வாயிலிருந்து யயாதியின் காதில் பாய்கிற மந்திரம் இது. 'ஆத்மா வா அதி மந்தவ்ய: ச்ரோதவ்ய: ஆத்மா வா அதி நிதித்யாச தவ்யா.' இதன் பொருள்; அடே மனிதனே ஆத்மாவின் அழைப்பைக் கேள். ஆத்மத் தியானமே மேலானதென்று அறிந்து கொள்; அதையே பிரம்மமென்று நம்பு' — என்பதாம். உண்மை இதுவே அன்றோ?

உலகாயதம், வைசேடிகம், நையாயிகம், சாங்கியம், மீமாஞ்சை, வேதாந்தம் எனும் தரிசனங்கள் ஆறு என்று அறிகிறேன். மற்ற ஐந்து தரிசனங்களையும் வாதப் போரில் வென்று வெற்றி பெற்றது வேதாந்தம் — உபநிசத்து. இவ்வாறிருந்தும் இவ் வருமையான — ஒப்புவமையில்லாத உபநிசத்துக் கோட்பாட்டை விலங்கிட்டுச் சிறையிலடைத்து விட்டு, வேதாந்த மதம் அல்லது வைதிகமதம் என்ற சொல்லை 'இந்துமதம்' எனப் பெயரிட்டு மதம் எனும் சொல்லுக் கடிப் படையான கொள்கை கோட்பாடுகள் இன்னதெனக் கூறுது நாளும் பொழுதும் கும்பிடுவ தொன்றே போதுமெனத் தேவாரத் திருவாசகத் திவ்யப் பிரபந்தங்களை பட்டாசுக் கட்டு வரிசைகளைப் போல் அடுக்கி வைத்துப் படித்துப் பாடிப் பசனை செய்வித்துச் சைவ — வைணவப் பக்த கோடிகளென மக்களைத் தட்டிக் கொடுப்பது நேர்மையா? நீதியா? 'அயம் ஆத்மா பிரம்மம்' என்ற அதர்வ வேத மகா வாக்கியத்துக்கும் பொருத்தமானது தானா? என்று கேட்கத் தூண்டுகிறது,

இன்றைய சாவுச் செய்திகள் கற்பழிப்புச் செய்திகள் தாலிச் சரடுகள் தங்கச் சங்கிலி பிக்பாக்கெட் திருட்டுச் செய்திகளை ஏந்திக் கொண்டுவரும் நாளிதழ் ஏடுகள்.

1980 செப்டம்பர் திங்கள் 'கஸ்தூரி' என்ற கன்னட மொழிப் பத்திரிக்கையில் நான் படித்துத் தெரிந்து கொண்ட செய்தி இது:

பாரத யுத்தம் முடிந்து வந்த கிருஷ்ணன் காந்தாரியைச் சந்திக்கிறன். காந்தாரி பேசுகிறள்:

'கிருஷ்ணு! நான் எத்தகைய பேரழகியாயிருந்தேன் தெரியுமா? எங்கள் காந்தார நாட்டுமலைப்புறத்துச் சாரல்களில் துளியும் குறை கூற இயலாத படிகம் போன்ற நீர் நிலைகளின் அருகில் நின்று கொண்டு என்னை நானே பார்த்துப் பிரமித்து விடுவேன். தோழிகள் என்னுடைய அழகில் மயங்கி என் எதிர் காலக் கனவுக் கதைகளைப் பின்னிக் காட்டுவார்கள். அந்தோ! அங்கேயே முற்றிமுடிந்து போயிற்று என் பேரழகு! அதற்குப் பிறகு நான் என்னைப் பார்த்துக் கொள்ளவில்லை. என்னைப் பார்த்துப் பரவசப்படும் பர்த்தாவும் வாய்க்கவில்லை. இது விதி வசமன்று; வீட்டுமனின் படைப்பலம், யுத்தம் வந்தால் மக்கள் வீணுக மடிய நேரிடுமே என்ற இரக்கம் மிகுதியால் என்தந்தை தன் மகளாகிய என்னைக் இக்குருடனுக்குத் தாரை வார்த்துத் தர வேண்டி நேரிட்டது.

பிறகு என்ன வேண்டியிருந்தது. அன்றே நானும் கண்ணிருந்தும் குருடியாய் அத்தினபுரியின் அரசியானேன். 'சீக்கிரம் கருப்பவதியாகிக் குழந்தைகளைப் பெற்றுக் கொடு' என்று அடிக்கடி வீட்டுமனின் கெடுபிடி கூச்சல் காதில் விழுந்து கசந்து கொண்டே இருந்தது.

நானே கண்ணிருந்தும் குருடியானவள். தாலி தரித்தவனை அரசனே பிறவிக் குருடன். இந்த நிலையில் நான் கருத்தரிப்பது எவ்வாறு? அரண்மனை சிரித்தது; அந்தப்புரம் பரிதவித்தது.

கடைசியில் இந்தக் குருடனுக்கு அரண்மனைத் தாசி ஒருத்தி என்னைப் பற்றி அறிவுறுத்தினளாம். தனக்கு என்று ஒரு மனைவி இருந்தது பிறகுதான் இவனுக்குத் தெரிந்ததாம்.

பிறகு நானும் குழந்தைகளைப் பெறத் தொடங்கினேன், ஒன்றுக்குப் பின் ஒன்ருக! அதே காலகட்டத்தில் அரண்மனைத் தாசிகளும் இந்தக் குருடனைக் கூடிக் குழந்தைகளைப் பெற்ருர்களாம்; எல்லாம் சேர்ந்து நூறு குழந்தைகள் என்கிருர்கள். யார் கண்டார்கள் இந்தப் பன்றிக்குட்டிகளின் கணக்கை?

ஆனல் என் உதிரத்தில் உதித்த குழந்தைகள் மட்டும் பதினன்கு. அதன் பின் ஒரே ஒரு பெண் குழந்தை!

கன்னட பாரதக் கதை இவ்வாறிருக்கத் தமிழ் பாரதக் கதையில் கனவில் கூடக் கருதமுடியாத—நம்ப முடியாத, 'மண்தொட்டிகள் உதிரத்தைக் குழந்தைகளாக்கிச் சரியாக ஒரு நூறு பேர்களை வெளிப்படுத்திற்று' என்று உள்ளம் உறுத்த அறிவு அருவறுக்க எழுதி ஏமாற்றியதேன்? வேத வியாசனது தெய்விகப் பேராற்றலை ஒன்றுக்குப்பத்தாக்கி வெளிச்சம் போட்டுக் காட்டத்தானே? இத்தகைய பெரிய பெரிய பொய்கள் பொருத்திப் புகலும் மகா பாரதக்கதை புகாத இந்து மதத்தினர் வீடு ஒன்றுண்டோ? அறிஞர் ஆராய வேண்டாமா? சிந்தனையாளர், புலவர் பெருமக்கள், எழுத்தாளர் இதனை எண்ணிப் பார்க்க வேண்டாமா?

'முக்கியத்துவம் உண்மைக்கு மட்டும் உரியது; பொய்மைக்கன்று' என்பது எல்லா மக்களுக்கும், எல்லா நாட்டினருக்கும் பொதுவான அறமல்லவா?

'சைத்தான் அரசாள ஆரம்பித்தால் சத்தியம் தங்குமிடம் காணது தடுமாறித் தீரும் என்பது தமிழ் வல்லுனர் அறியாத ஒன்றல்லவே!

'தத்யத்—தத்—சத்ய—தஸெள ன ஸதித்யே,'—அந்தச் சத்தியம் எதுவோ அதுதான் இந்த ஆதித்யன் (சூரியன்) என்கிறது பிரு. உபநிசத்து.

சூரியனில்லாத நாட்டில் இருள் மூடிக் கொண்டிருப்பது போலச் சத்தியமில்லாத நாட்டில் அறியாமை மூடிக்கொண்டிருக்கும் என்று விதந்து கூறவேண்டியதில்லையே!

தமிழ்மகா பாரதத்தில் மகா மகாப் பொய்கள் கலப்படம் செய்ததோடல்லாமல் இராமயாணத்திலும் வேண்டியதற்கு மேலும் மகாப்படு பொய்களைக் கலப்படம் செய்துள்ளனர். 'பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம்' என்ற முறையில் இங்கு ஒரு நிகழ்ச்சியை எடுத்துக் கூறிவிடுகிறேன்.

கௌதம முனிவனின் மனைவி அகலிகை. அகலிகை பெண்ணுக்குரிய எல்லா அழகுகளையும் பெற்று மிகமிகப் பேரழகியாகத் திகழ்ந்தாள். இந்த அழகு இரண்டு கண்களை உடைய தேவேந்திரனைப் பைத்தியமாக்கிச் சுண்டியிழுத்தது. அணியிழை தன்னோர்க்குத் தானே மருந்து' என்பது தேவேந்திரன் படிக்காமலிருந்திருப்பானா?

ஒரு சிறிய தந்திரம்; கௌதமன் ஏமாற்றப் பட்டான் நேரம் கைகூடிற்று, நோயும் தீர்த்துக் கொண்டான். ஆயினும் என்ன? திருட்டுத்தனமாகப் பாலை குடித்து விட்டு வந்தது பூனை. வாசலைக் கூட்டிக் கொண்டிருந்த வீட்டுக்காரி அதைப் பார்த்து வாருகோலால் மொத்தினாள் என்பது போல, கௌதமன் பார்வையில், அவன் அகப்பட்டுக் கொண்டான், 'அடே பாவீ! நீ எதை நாடி இந்தக் குடிசையில் புகுந்தாயோ அதுவே உன் உடல் முழுவதும் ஆகுக! என்றான். மானக்கேடு; வெளியே தலை காட்ட முடியாத சரியான தண்டனை தான் தேவேந்திரனுக்கு.

ஆனால் அகலிகை பாவம் அப்பாவிப் பெண்தான்; ஆனால் முனிவன் கோபம் சில்வான மானதல்லவே! 'நீ கல்லாகிக் கிட' என்றான். அவளும் கல்லாக மாறி விட்டாள். இது நாடறிந்த கதை. கம்பன் அகலிகைப் படலம்; வாரியார் வாய் வழங்கிய ரசனைமிக்குப் பரவசம் பண்ணிய பிரசங்கம்; இதை யார் அறியாதவர் நம் அருமைத் தமிழ் நாட்டில்?

இந்தக் கதையைப் பக்திச் சுவை சொட்டச் சொட்டப் பருகாவிடின் பக்தர்கள் கண் உறக்கம் காணுமா? பாவம் பரிகாரமாகுமா?

ஆனல் தேவேந்திரனுக்கு 'ஆயிரங் கண்ணன்' என்று பெயர் உண்டானதற்குக் காரணம் இந்தக் கதை தான் என்று கம்பன் சொன்னலும் சரி, வாரியார் சொன்னலும் சரி, வையகம் முழுவதும் கூடிச் சொன்னலும் சரி, இது உண்மையாகாது. தேவேந்திரனுக்கு ஆயிரங்கண் ஆன அக்கதை முற்றிலும் வேருனது. எதார்த்தமானது என்றும் நம்பலாம்.

சாணக்கியனது அர்த்த சாஸ்திரம் (கன்னடம்) தேவேந்திரனைப்பற்றிச் சொல்லுவது இது 'தேவேந்திரனுக்கு ஆயிரம் ரிசிகளுடன் கூடிய ஒரு மந்திரி சபை இருந்தது. உலகத்தில் நடை பெறும் நல்லதும் பொல்லாததுமான எல்லாச் செய்திகளையும் அவன் அவர்களால் உடனுக்குடன் தெரிந்து கொள்ளுவான். ஆனதனல் அவனுக்கு இருந்தது இரண்டே கண்தானெனினும், 'ஆயிரங்கண்ணன்' என்று மக்களால் பெயரிடப்பட்டுச் சிறப்புற்ருன்' என்று கூறப்பட்டுள்ளது.

இந்திரன் கதை இவ்வாறதில் இருக்க இராமயாணத்தில் இந்திரனல் கெடுக்கப்பட்ட அகலிகை முனிவனல் கல்லாகி ராமன் கால் தூசினல் பழய அகலிகையானது எவ்வாறு? இந்த மகத்தான பொய் எதற்காகத் தமிழ் இராமயாணத்தில் வந்து புகுந்தது? ராமனைத் தெய்வமென்று மக்கள் நம்பும்படி இட்டுக் கட்டிய படுகேவலப் பொய்ச் சூழ்ச்சியைத் தவிர வேறென்ன?

'இதிகாசம், எனும் சொல்லுக்கு சதுரர்கராதியில் இரண்டு பெயர்கள் பொருளாகக் கொள்ளப்பட்டுள்ளது. ஒன்று மகா பாரதம்; மற்ருென்று இராமயாணம். இவ்விரு இதிகாசங்களையும் ஆராய்ச்சி என்னும் புடமிட்டுப் பார்க்கும் பொழுது உண்மை குன்றியளவும் பொய்மை குருடுமலையளவு மன்ருே காணக் கிடக்கிறது.

ஐயகோ! என் அருமைத் தமிழகமே! இவ்விரண்டு இதிகாசங்களையும் கசக்கிப் பிழிந்து சாறெடுத்து உளம் நிறைந்து வழியப் பருகினும் எந்த வித ஊட்டச் சத்தும் அதில் கிடையாதே! வெறும் இனிப்பு ரசம் இது. பருகினவனுடைய ஆத்மா படுநாசமடையச் செய்வது தவிர வேறு பயன் இம்மி அளவும் காண இயலாதே! நம்மை இவைகள் அடிமைகளாக்கி ஆள வுள்ளதன்றி ஆற்றல் சால் மக்களாக மாற்ற வல்லதல்லவே! இலக்கியம் என்னும் சொல்லுக்குரிய பொருள் அணுவளவும் இல்லாத இவைகள் இலக்கியமாவதெவ்வாறு?

'இலக்கியம்' எனின் இம்மாதிரியான வெற்றுப் பொய்க் கடவுள்கதைகளன்று. மனிதப் பண்புகளைப் பாத்திரங்களில் பெய்து பல்வேறு நிகழ்ச்சிகளாக்கி இயக்கிக் காட்டி மக்கள் புலன் கொளச் செய்து ஆன்மிக நெறி கூட்டும் நூல்கள், பற்றுக் கோடாகஅமையும் நூல்கள் தாம் இலக்கியம்.

தேற்றத்திற்கு ஒரு சில எடுத்துக்காட்டுகள் : நட்டார் மனின் நிலவளம், ஆஸ்கார் ஒயில்டின் சிறிய குயிலும் சிவப்பு ரோஜாவும், விக்டர் யுகோவின் வீரனின் தியாகம், வி. ச. காண்டேகரின் மனோரஞ்சிதம், சரத்சந்திரரின் விஜயா, புறநானூறில் வரும் 'களிறு பொரக் கலங்கும் கழல் முள் வேலி' போன்ற பற்பலபாடல்கள்! இன்னும் இது போன்றவைகள் தான் இலக்கியம். உத்வேக மூட்டி அரைகுறை மனிதனை முழு மனிதனாக்கி, முழு மனிதனைத் தேவனாக்கவுள்ளவை!

என்னுடைய இந்தக் கருத்துக்கள் முழுவதும் நானறிந்த அளவில் மிகச் சரியானவை என்பதற்கு ஆதாரமாக மேலும் ஒரு எடுத்துக்காட்டு இங்கு தேவைப்படுகிறது.

அண்மையில் நாடு முழுவதும் போற்றும் தத்துவஞானியும் மதிப்புக்குரியவருமான பாரத இரத்தினம் ராதாகிருஷ்ணன் எழுதிய ஆங்கில நூலின் தமிழ் மொழி பெயர்ப்பு — இந்தியாவின் இதய ஒலி என் கைக்குக் கிடைத்தது. நான் அதில் நிறைய எதிர்பார்த்தேன், கடோப நிசத்தோ, தைத்ரியோப

நிசத்தோ என்னைப் போன்றவர் கற்றுத் தெளிய வேண்டி இந்தியாவின் இதய ஒலியாக்கி வெளிப்படுத்தியிருப்பார் என்று என் இதயம் எண்ணி மகிழ்ந்தது.

ஆனால், ஏமாந்தது. அவர் பேராசிரியராகவும், உலகத்திலுள்ள அனைவரும் மாணவர்களாகவும் கருதித்தான் அவருடைய கருத்துக்கள் அதில் ஒலித்தன.

'ஸ்ரீகிருஷ்ணபகவான், புத்தபகவான், நபிநாயகம் இயேசு கிருஸ்து என்றும், பகவத்கீதை, திரிபிடகம், குர்ரான், பைபிள் என்றும் எடுத்துக் கொண்டு பாடம் நடத்துகிறார் இவர். இவரளவு இல்லையெனினும் நானும், என்னைப் போன்றுள்ள இன்னும் பலரும் இவர்களைப்பற்றியும் இந்த மத நூல்களைப்பற்றியும் ஓரளவு தெரிந்தவர்களே ஆவோம்.

ஆகவே, இந்தியாவின் மிகப் பிரபலமாக ஒலித்த இந்த இதய ஒலியை என்னால் ரசிக்க இயலவில்லை. இதற்கு நேர் மாறாக 'விளிப்புணர்வு பற்றிய விளக்கங்கள்' என்ற நூல் கிடைத்தது. ஜே. கிருஷ்ண மூர்த்தியின் சொற்பொழிவுகளை அடிப்படையாகக் கொண்டது இது. இவர் கூறுகிறார்:

'எவ்வளவுதான் கல்வியறிவு பெற்ற பெரும் அறிவாளியாகத் திகழ்ந்தாலும் தன்னைத் தான் அறியாத ஒருவன் அறிவற்ற முட்டாளே ஆவான். தன்னைத்தானே அறிந்து கொள்வதுதான் கல்வியின் நோக்கமாகும். பகவத்கீதையையோ, உபநிடதத்தையோ திருக்குரானையோ, பைபிளையோ ஒருவர் மேற்கோள் காட்டலாமெனினும் அவர் தன்னைத்தான் அறிந்து கொள்ளவில்லையெனின் அது கிளி ஒன்று சொன்னதைத் திருப்பித்திருப்பிச் சொல்வதை ஒக்கும். ஆனால், ஒருவர் தன்னைப்பற்றிக் கொஞ்சமேனும் அறிந்திருப்பாரானால் அங்கே அபாரமான புதிதாய்ப் படைக்கும் செயற்பாடு திகழ்கிறது.

'சிறியதில் பெரியது அடங்காது; தனி ஒருவன், கட்டுண்டு துயரத்தில் மூழ்கி, தோல்வியுற்ற ஒரு அற்ப ஆசாமி

தன் குட்டித் தெய்வங்களை வழிபடுவதிலும், சின்னஞ்சிறு பரம்பரைப் பழக்க வழக்கங்களைப் பின்பற்றுவதிலும் மன நிறைவு கொள்ளும் சிறிய ஆள். ஆனால் மனிதன் என்பவனோ உலக வாழ்வின் நலம் அனைத்திலும், குழப்பம் அனைத்திலும் கருத்தும் கவலையும் கொண்டவன்'.

'கடவுளென்றோ, உண்மை யென்றோ, மெய்ப்பொருளென்றோ அல்லது அதனை வேறு எப்பெயர் கொண்டு அழைத்தாலும் சரி, அத்தகைய பொருள் ஒன்று உண்டா என்ற கேள்விக்கு விடைகூற, நூல்களாலோ சமய குருமார்களாலோ, தத்துவ மேதைகளாலோ ஒரு பொழுதும் முடியாது. நீங்களேதான் அதற்கு விடை கண்டு பிடிக்க வேண்டும். அதனால்தான் ஒருவன் தன்னைத்தான் முதலில் அறிந்தாக வேண்டும். தன்னைத்தான் அறிவதே மெய்யுணர்வைப் பெறுவதற்கு முதற்படியாகும்'.

சமூக மதிப்பினைப் பாராட்டும் எந்த மனிதனாலும் எல்லையற்ற அளவிடற்கரிய அந்த மெய்ப்பொருளை அணுக முடியாது. உண்மை, பாதைகளற்ற ஒரு பிரதேசமாகும். எப்பேர்ப்பட்ட சமயங்களினாலும் இதனை அடைய முடியாது' இத்தகைய கருத்துக்களை இவர் அள்ளி அள்ளி இறைக்கிறார்.

இராதாகிருஷ்ணனும் ஒரு மேதை; ஜே. கிருஷ்ணமூர்த்தியும் ஒரு மேதை; ஆயினும் ஒரு மேற்கோள் மனிதனை இலக்கிய புருசனை இவர்கள் படைக்கவில்லை. படைக்க முயலவும் இல்லை; ஆனால் சரத்சந்திரர் 'விஜயா' என்ற தம் புத்தகத்தில் 'நரேந்திரன்' என்ற ஒரு ஆதர்ச-உதாரணப்புருசன், மெய்ப்பொருளை—கடவுளை — தன்னைத் தானறிந்த ஒரு மகா புருசனை ஒரு ஏழைப் பிராமண வாலிபனைச் சித்தரித்துக் காட்டுகிறார்; அச்சமற்ற, ஆளுமைத்திறன் மிக்க—எந்த நிலையிலும் மனம் நொந்து மறுகாத, தியாக உள்ளமுடைய, படிக்கும் மக்களாகிய நாம் நிலையாக நெஞ்சில் வைத்து நேர்ந்து பின்பற்ற வேண்டிய, எண்ணம் சொல்

செயல் எனும் மூன்று இடத்திலும் தூய்மை துலங்க நரேந்திரன் எனும் பாத்திரத்தைப் படைத்து இயக்கிக் காட்டுகிருர். ஆம் சரத் சந்திரர் ஒரு இலக்கிய கர்த்தா!

அன்புசால் புலவர் பெருமக்களே! இங்கு நம் கணியன் பூங்குன்றனாின் 'தீதும் நன்றும் பிறர் தர வாரா நோதலும் தணிதலும் அவற்ரோ ரன்ன' என்ற வரிகளைச் சற்று உற்று நோக்குங்கள். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' சிந்தித்துப் பாருங்கள், சாதலும் புதுவதன்றே வாழ்தல் இனிதென மகிழ்ந்தன்று மிலமே முனிவின் இன்னுதென்றலும் இலமே! அவ்வளவும் ரத்தினச் சுருக்கமான உபநிசத்துக் கருத்துகள். சுவர்க்கம் நரகம் இரண்டும் நம் கையில் தான் உள்ளன. எந்த ஆண்டவனும் புற உலகில் இல்லை; என்பது இந்தப்பாவின் வரிகள் உறுதி செய்கின்றன.

நாம் அடிமைகள்; நாம் விடுதலை பெறவில்லை; சமூக மத பொருளாதார ரீதியாக ஒரே முறையை ஆயிரமாயிரம் ஆண்டுகளாகத் திரும்பத் திரும்பச் செய்து வருகிரேம். நமது அடிமனத்தில் எவ்வித மாற்றமும் இல்லை. நாம் நவீன அரக்கர் கள், என்கிருர் ஜே. கிருஷ்ணமூர்த்தி 'நம்மை நாம் அறிவது உலகத்தோடு நமக்குஇருக்கும்உறவை அறிவதாகும்' என்கிருர் இவர். 'தனிப்பட்ட ஒருவரது பிரச்சினையே உலகப் பிரச்சனை' என்பதும் இவர் கருத்து.

'தீதும் நன்றும் பிறர்தரவாரா' போன்ற சில வரிகளின் விளக்கம்தான் என்னுல் இயற்றப்பட்ட 'புரவலன்' என்ற இந்தத் தொடர்நிலைச் செய்யுள் நூல். நூலாராய்ச்சியில் விருப்பு வெறுப்பற்ற நடுநிலைப் புலவர் பெருமக்கள் நாடு மொழி, கலைப்பற்றுடன் கூடிய அறிஞர் பெருமக்கள் என்னுடைய புரவலனைச்சந்தித்து அவன் சொல்வதைக் கேட்டு ஆராய்ந்து பார்ப்பார்களாக! நாம் ஒரு தடவையே பிறக்கிரேம், ஒரு தடவையே வாழ்கிரேம், ஒரு தடவையே சாகிரேம். நம்முடைய வாழ்வு வெறும் சாப்பாட்டு வாழ்வாக

இருக்க வேண்டாம். உண்மைக்காக வாழ்ந்த வாழ்வாக — அமர வாழ்வாக அது அமையட்டும். நாடு கீழ் நோக்கி வழி தவறிச் சென்று கொண்டிருக்கிறது.

ஆம்! நாமும், நம் சந்ததிகளும் இருளிலிருந்து ஒளிக்கு, அசத்திலிருந்து சத்துக்கு, தூக்கத்திலிருந்து விழிப்புக்கு வழி கண்டு வந்து தீரவேண்டும்.

ஆன்மிகமே தெய்வம்; ஆத்மாவே ஆண்டவன்; 'திக் பலம் சத்திரிய பலம்; பிரம்ம தேசோ பலம், பலம்! என்பது ரிசிவாக்கு. ஒரு அரசனது சதுரங்க பலம் மிகச்சிறிய அளவு நிலத்தை வெல்ல வல்லது. பிரம்மதேஜஸ்—ஆன்மீகப் புகழ் பலம் தான் உண்மையான பலம்; இது இந்த அகிலத்தையே வெல்ல வல்லது.

இறுதியாக ஐந்து சிறிய வார்த்தைகள் அக்நிர்மே வாசி ச்ருத; வாக் இருதயே. இருதயம்மயி; அகம் அமிர்தே; அமிர்தம் பிரம்மணி; – (உள்ளத்தில் உண்மை உளதாயின்) என் வாக்கு ஒளிமயமானது; வாக்கு இருதயத்தில்; இருதயம் என் உடலிற்குள் ; (உடலும் உயிருமாக உள்ள) நான் அமிர்தத்தில்; அமிர்தம் பிரம்மத்தில்!

நமக்கும் பிரம்மத்துக்கும் உள்ள தொடர்பு இது. நம் எதிர்கால மக்களின் உளத்தில் நாம் ஏற்றி வைக்க வேண்டிய திருவிளக்கு இது; நாம் அறியத் தவறியது இது; நமக்கு அறிவிக்காமல் ஆரியரால் மறைக்கப்பட்டது இது! 'பாருக்குள் ஏது இதுபோலொரு நூலே' என்ற சொல்லை உண்டாக்கியது இது. 'அகம் பிரம்மாஸ்மி— நானே பிரம்மமாயுள்ளேன் என்ற சொல்லின் பொருள் இது. தெய்வத்தை அறிந்து அடைந்த நிலை இது.

பிரம்மத்தை அறிந்தவன்—பிராமணன்; ஆத்மாவை அறிந்தவன் அத்திகன். ஆத்மா, பிரம்மம் கடவுள் என்பன ஒரு பொருள் பல சொல். பிறப்பினால் எவனும் பிராமணனாக

மாட்டான், திருநீறும், திரு மண்ணும் நெற்றியில் இட்டுக் கொண்டதனால் மட்டும் ஒருவன் ஆத்திகனாக மாட்டான் 'வித்வான் லிங்க வர்ஜ்ஜித:' 'வித்வான் அடையாளங்க ளில்லாதவன். ஆகையால் தர்மத்தை அறிந்தவன்' என்கிறார் ஆதிசங்கரர்.

இதையறிந்து கொள்ளும் போது—உளங்கொண் டொழுகும் போது மனித சமுதாயம் வாழ்ந்ததாகும். பேத மற்றதாகும், உயர்வு தாழ்வற்ற சமத்துவ — சகோதரத்வ சுதந்தர மக்களாக நம் அடுத்த சந்ததியேனும் ஆன்மிகராகி வாழ்ந்தவராவார்கள்; ஆம், இதுவே உண்மை:

'சத்யமேவ ஜயதே; நான் ருதம்.

வணக்கம்
ஆக்கியோன்

*சிலபிழைகள் சீர்தூக்கா தன்பும்; செறிவும்*
*சிலகுறைகள் சீர்தூக்கா தென்பர்;— நிலவுலகில்*
*எந்த ஒருபிழையும் எந்த ஒருகுறையும்*
*சிந்தச்சீர் தூக்கிடும் மெய்!*

— *வெள்ளியங்காட்டான்*

# புரவலர்

## இயல்பு

காலையைக் காணுங் கால் செங்
கமலமாய் மலர்ந்தென் னுள்ளம்,
மாலையைக் காணுங் காறும்
மௌனமாய் மனையில் குந்திச்
சோலையிற் காணுஞ் சுத்தச்
சுதந்திரக் குயில்போல் சோரா
தாலையிற் காணுங் கன்ன
லமிழ்தெனக் கவிதை யாப்பேன்.

நோன்றுதன் வயிறு வாய்த்து
நுடங்கிடை நோயுந் தாங்கி
யீன்றதாய் மகவை யேந்தி
யினைநகி லமிழ்த மீந்து,
தோன்றலாய்த் துலங்க வைக்கத்
துணையாகி வளர்ப்ப தொப்ப
ஏன்றபா வனைத்தும் நூலா
யினைத்திலங் கிடச்செய் வேனே!

எல்லையே யில்லா தெங்கும்
ஏற்புறக் கமழும் நல்ல
முல்லையை முனைந்து நோக்கும்
முறையறி வினைஞ ரைய்நா
னல்லையே பகல்செய் தென்ன
அவனியி லொளிர வைப்பேன்,
'இல்லையிந் நாளுக் கொப்பிட்
டியம்புதற் கினியொன்' றென்றே!

சென்றுய ரியயத் துச்சி
சேர்பவன் செயல்பட் டாங்கே,
ஒன்றிய வுளத்தி னோடு
மொதுங்கிய துணை ரா ஞூரார்,
'மன்றிய லோரான்; மக்கள்
மாண்போரா' னெனுஞ்சொ லென்னைக்
குன்றியாய்க் குறைக்க வுற்றும்,
அமையாம லமைதி கொண்டேன்.

'எப்பற்று மிலரா யொன்றி
யியல்புட னிருமை யாய்ந்து
துப்புற்றுத் துலக்கு வோர்தாம்
தொழத்தகுந் தூயோ' ரென்று
செப்புற்ற செஞ்சொல் தின்று
சிந்தையிற் செரிக்கா தார்க்குத்
தப்புற்ற தறியச் செய்து
தடங்காட்டும் தக்கோர் தான்யார்?

சுருக்கமா யுரைக்குங் கால்தம்
சுயநலம் குறிக்கோ ளாகிச்
செருக்கினைப் பெருக்கும் செல்வம்
சேர்த்திடும் செயலே செய்து
தருக்கரா யிருப்போர் கம்சொல்
தள்ளியே தனித்துத் தங்கி
யுருக்கமா யொன்றி னேன், நான்
உண்மைக்குப் புறமா காதே!

வானுற வளர்ந்திங் குள்ள
வாகையங் கோட்டில் வாய்த்த
தேனிரு லெய்தித் தென்பாய்த்
தின்பது தெரியா வூரில்,
'தானுறு தரமோ ராத
தரித்திர' னென்று தாழ்த்தி
ஏனுற வினரு மென்னை
யிகழ்ந்தன ரெனநா னேரேன்!

வாசிக்க வாழ்ந்தேன், வாய்மை
வசமாக்கும் நூல்கள் வாங்கி;
நேசிக்க நேர்ந்தேன், நேர்மை
நெறிமுறை நிலைபா டொன்ற;
யோசிக்க வுரைத்தே னோயா
துணர்ந்ததை யுற்றார்க் கேனும்
காசுக்கு வழிகா ணாத
கவிஞனு யுள்ளோன் நானே!

காலத்தைக் காசுக் காகக்
கரைத்திடும் கல்வி யாக்கி,
ஞாலத்தின் நலத்தை நாடி
நலமோர்ந்து பொலம கற்றிச்
சீலத்தைப் பேணச் செல்வர்,
செத்தபின் சீவன் சென்றம்
மூலத்தைக் காணும் மார்க்கம்
மொழிந்திட விரும்பு கின்றார்!

தெள்ளிய தமிழைத் தேர்ந்து
தேசத்தின் மாசைத் தீர்த்தற்
கொள்ளிய தேனீ யொப்ப
வுழைக்கின்ற கவிஞ னூரில்
பிள்ளைகள் சோற்றுக் கேங்கப்
பெற்றவ ளாற்றற் கேங்க
எள்ளியே வொதுக்கு கின்றார்,
இதயமொன் றில்லா தோராய்!

தரணியில் தமிழ்வல் லோர்தாம்
தம்மிடம் வருகை தந்தால்
கருணையைக் கண்ணில் காட்டிக்
கடமையைக் கையில் காட்டி
வருணனைத் தளித்துக் காத்த
வள்ளல்கள் வரலா றெல்லாம்
பரணியி லிட்ட டைத்தார்,
பாரின்று பாரா வாறே!

பொற்பாலே புலமை யெய்திப்
புகழீட்ட முடிந்த தேனும்,
விற்போலும் புருவத் தென்மான்
வெறுமையை விரட்ட வேண்டி
அற்போலு மிதயச் செல்வ
ரகத்தினை யணுகற் கெண்ணின்,
கற்போலு முள்ளம் நீரில்
களிமண்ணைக் கரையு தின்றே!

# இல்லாமை

குடதிசை மறைந்த வெய்யோன்
குணதிசை பிறந்தும் கூட
வடதிசை வைகி டாதும்,
வழுவித்தென் திசைவ ராதும்
நடுதிசை நடந்த தொத்து
நல்குர வெம்மை நாளும்
கெடுதிசெய் தெரித்த துண்ணக்
கேள்வர கும்கிட் டாதே!

மாரியெய் தாத பாரும்
மாட்சியெய் தாத பேரும்
ஏரியெய் தாத வூரும்
ஏற்றமெய் தாத வாறே,
சீரையெய் தாதார்க் கில்லை
சிறப்பென்ப தறிந்து மென்மான்
நேரமெய் தாமுன் நின்று
நெஞ்சழிந் துதிர்த்தாள் கண்ணீர்!

சானுக்கு முழத்தைச் சார்த்தின்
சரிபாதி யாதல் சான்றாய்,
ஆணுக்கும் பெண்ணுக் கும்ஆண்
டைந்து,பத் தான எங்கள்
மாணிக்க மனைய மக்கள்
மனம்மாழ்கி மகிழ்ச்சி மாய்ந்தாங்
கூணுக்கு முடைக்கு முள்ளம்
உடைந்துருக் குலைந்தா ரோர்க்குள்!

பழங்காலப் பாவல் லார்க்குப்
பாரி, ஆய், காரி, ஓரி,
மழுங்காம லளித்துக் காத்து
மாண்புற்ற மண்ணி லின்று
முழங்காலிற் சுமையை முக்கி
மூச்சொடு தூக்கு வோரைத்
தழுங்கால மாகி வந்தின்
றறிஞனில் புகலா யிற்றே!

'நல்லவ ரெனவே யாரும்
நாட்டிலின் றில்லை' யென்று
சொல்லுவ தொல்லா தன்றே?
சுவருக்காம் மண்சோ தித்துக்
கல்லுவோன், கனவில் கூடக்
காணாத புதையல் கண்டு
புல்லுவோ னயின் போற்றிப்
பூசிக்கப் படுவ துண்டே!

இடியென இயங்கி மின்னி
யிலங்கும்வான் முகில்பெய் தாலிப்
படியினைப் பசுமை போர்த்துப்
பல்வேறு வடிவு வண்ணச்
செடியெனத் தோன்றும்; சென்று
சிரத்தையாய்த் தேடச் செய்தால்,
இடையினிற் 'றுளசி' யொன்றங்
கினிமையாய்க் கமழ்வ துண்டே!

பருப்பில்லா, அரிசி யில்லாப்
பகலிலும் பகையில் லாதாள்,
வரப்பில்லா, வாய்க்கா லில்லா
வயலிலே பயிராய் வாடிச்
சிரிப்பில்லா முகத்தின் முன்னென்
சிந்தையைத் திறந்து காட்டி,
விருப்பில்லா துரைத்த சொல் 'நான்
வேற்றூர்போய் வருவே' னென்றே.

மூச்சொன்றக் கேட்டா ளிச்சொல்;
முகஞ்சிறுத் துறுக ணுற்றுப்
பேச்சின்றிப் பீதி யெய்திப்
'பெண்மையி னியல்பிஃ' தென்ன
மீச்சென்ற புதர்மேல் பெய்து
மிஞ்சிய மழைநீர் காற்றின்
வீச்சொன்றச் சிந்திற் றென்ன
விழிநீரை வழிய விட்டாள்.

''அன்னை நீ யிரண்டு மக்கட்
கருமந்தத் துணையெ னக்கும்!
தென்னையின் தேவை தண்ணீர்;
தெளிகளன் தெவிட்டாத் தேனே!
என்னை நா னறிவேன்; ஏந்தி
யிதயத்தி லெனைவைப் பாருண்
டுன்னை நான் காப்ப தின்றென்
னுயிர்காப்ப தொப்ப தன்றோ?

வினைவிட்டுப் பிரியா தென்றும்
வீட்டினில் விளக்கை யேற்றி,
உனைவிட்டுப் பிரியா தொன்றி
உவக்கும்நம் மக்க ளோடும்
எனைவிட்டுப் பிரியா துள்ள
இன்பமே! இல்விட் டேகல்
தனைவிட்டால் நான், நம் வாழ்வே
தடம்விட்டுத் தவிக்கு'' மென்றேன்

# கல்வி

வரவின்றிச் செலவொன் றில்லை;
வனப்பான வைய கத்தில்
சரிவின்றி மேடொன் றில்லை;
சங்கிலித் தொடர்பிஃ தென்ன
இரவொன்றிப் பகலு மொன்றி
இயங்கும்நா ளெனவே நாங்கள்
பிரிவின்றி யிருந்து வாழ்ந்து
பெறும்பயன் பிறர்க்கே யன்றோ?

கற்றது கேட்ட தன்றிக்
கருத்தினிற் படியக் காணப்
பெற்றது பேணி வைத்துப்
பெறுவது பிணைத்தா ராய்ந்து
மற்றது மறையா வாறு
மக்களுக் குரைத்து மாறு
யுற்றது பெருமை யொன்றே!
உள்ளது வறுமை யொன்றே!

கோழைவாழ் வாகு முண்மைக்
கோட்பாடு கொள்ளார் வாழ்வு;
ஏழைவாழ் வாகும் திண்மை
இதயத்தி லில்லார் வாழ்வு;
தாழைவாழ் வாகும் தண்மைத்
தயவிலாத் தனிகர் வாழ்வு;
வாழைவாழ் வாகும் வண்மை
வரகவி வாழும் வாழ்வே!

சுகத்தினிற் சுவையு ருதும்,
சுதந்திரம் துலங்கும் தூய
முகத்தினில் முனிவு ருதும்
முறையாக நூல்க ளாராய்ந்
தகத்தினை யாட்கொண் டுள்ள
அறிவினைக் கவிதை யாக்கிச்
சகத்தினிற் சாவை வென்றேன்
சத்தியக் கவிஞ னேகாண்!

அஞ்சுவோன் றனைக்கண் 'டப்பா!
ஆண்மையோ டிருநீ' யென்றும்,
வஞ்சகன் றனைக்கண் 'டந்தோ!
வருந்துவா யினிநீ' யென்றும்,
கஞ்சனை 'உன்னை நீயே
கடையனாய்ச் செய்தா' யென்றும்,
விஞ்சிய கவிஞ னன்றி
வேறெவன் சொல்ல வல்லோன்!

மாயிரு ஞால மக்கள்
மகத்தான வாழ்வு காணத்
தாயினும் பரிவு கூர்ந்து
தக்கவை யெடுத்துக் கூறித்
தீயவை யின்ன தென்னத்
தெரிவிக்கும் கவிஞன் தானே
ஆயினு மதனைப் பற்றி
ஆணவ மகத்து ளானே!

பூத்திடும் முல்லை போன்று
புனைவுறைச் சொல்லைக் கோத்து
யாத்திடும் கவிதை யாலிவ்
வகிலத்தைக் கமழ வைத்துக்
காத்திடச் செய்ய வல்ல
கவிஞனைக் காணார்! கல்முன்
கூத்திடு கின்றார், கூடிக்
குவலயத் தியல்போ ராதார்!

சுறவெனு மாறு சுற்றிச்
சுகந்தரற் குற்ற சொந்த
மறவனை மறுத்து, மாறாய்
மகவினைப் பெற்றுக் கொஞ்சக்
குறவனைக் கூடற் கேங்கும்
குணமிலாக் குமரி யொப்ப,
அறிவினை யொதுக்கிக் காசில்
ஆனந்த மெதிர்பார்ப் பாரே!

திணையுற்ற குறிஞ்சி, முல்லை
திகழ்ந்திடும் மருதம், நெய்தல்
துணையுற்றுத் தொழிலு முற்றுத்
தொய்வின்றித் துய்ப்பா ரேனும்,
'இணையற்ற கல்விச் செல்வம்
இவர்களுக் கில்லை' யென்றால்,
புணையற்று நதியுற் றுங்குப்
போக்கற்றுப் போவா ரன்றோ?

மலையாய கடலு மாய
மண், மனை மாடா டெல்லாம்
நிலையாய செல்வ மேனும்,
நெஞ்சார நினைத்துப் பார்த்தால்
கலையாய செல்வம்,- கற்ற
கட்டைவிட் டகலாச் செல்வம்
தலையாய தென்னத் தக்க
தவச்செல்வ மன்றோ கல்வி!

# செல்வம்

ஒன்றுகள் பத்தாய், நூறு,-
யொருலட்ச மெனவு யர்ந்தால்
தொன்றுகள் தொலைந்து தோற்றம்,
துணி,மனை- புதுமை யொன்றி,
நன்றுகள் நலிய, நாட்டின்
நாயகர் தாமாய், நாளும்
மன்றுகள், கோவில் மாலை,-
மகத்துவ மனிதர்,- மற்றே!

கண்பனி யுகுக்கத் தம்முன்
கையேந்தி நிற்போ ருள்ளம்
புண்படப் புன்சொல் சிந்திப்
புறம்போக்கிப் புனித ரான
நண்பரை யொதுக்கி, யொன்று
நல்லோரை நலித்து, நாட்டில்
பண்பினைப் பயமு றுத்திப்
பணிவித்தல் பணக்கோட் பாடே!

தேசினில் திளைத்து வாழும்
தேற்றம்தேய் பிறையாய்த் தீர,
ம்ாசெனக் கழித்த தெல்லாம்
மனத்தினிற் கொழிக்க வைத்'தெம்
மீசனே காப்பீ ரெம்மை',
யெனவேத்தி யிரைஞ்சு வார்போய்க்
காசெனுங் கயிற்றி னல்தம்
கழுத்தினை யிறுக்கிக் கொண்டே!

'ஈசனே' யென்னுஞ் சொல்லுக்
கேற்பதோர் பொருள்கா ணார்க்கைக்
காசினுக் காகக் கல்லில்
கடவுளைப் படைத்தோர், மக்கள்
நேசமா யிருந்து வாழ்ந்த
நெறிகட்கு நேர்மா றுக்கி
நாசமே செய்தார், நாடு
நலன்,பொல னறியா வாறே!

சிவனைக் காணார் சென்று
சிவனைப்போய்க் காண்ப தெங்கே?
நோவன செய்து, நொந்து
நோன்புகள் நோற்பர்; நோற்கத்
தேவனெங் கே?யென் றால்நாவ
திடுக்கிட்டுத் திகைத்துத் தேரிச்
'சாவின்பின் சொர்க்கம் சென்று
சாமியைக் காண்ப' தென்பர்.

'கீதையைப் படித்தால் போதும்;
கேட்டாலும் போதும்; கேட்ட
பாதையில் பயிலோம்; பண்ணும்
பாவனை போது' மென்று
பேதையைப் பெருக்கச் செய்து
'பெருமைக்குக் கடைக்கா' லென்னும்
மேதையைச் சீர ழிக்கும்
மேதினி யாயிற் றின்றே!

ஊருற்று முடமை யுற்றும்
உற்றார்க் குதவா தோம்பிப்
பாருற்றுப் பழிக்க வாழும்
பயனற்ற பலபேர் பாவம்!
பேரற்றுப் பிணிக ளுற்றுப்
பிணமாகிப்- பிறவொன் றின்றி,
வேரற்று மரமும் வீழ்ந்து
விறகாகி வெந்த தற்றே!

'சாதிகள் ஈசல் கள்போல்
சகத்தினில் வளர்க! சாரும்
தீதுகள் தெரியா தாரைத்
தின்றுதேக் கிடுக! தேரிப்
போதக லாமுன் தெய்வப்
போதனை புரிக! அன்றேல்,
நீதிகள் நிலைத்திங் கென்னை
நீக்கிடு' மெனுமாம் நீசம்!

'நற்றிணை புறநா னூறே
தலந்தரத் தக்க' தென்னும்
சொற்றுணை கொண்டு நானும்
சுதந்திரத் தமிழர் வாழூர்,-
விற்றுணை கொண்டு வீரன்
வீட்டைவிட் டேக லொத்தென்
இற்றுணை யின்றி விட்டின்
றேகிடற் கெண்ணு கின்றேன்.

அஞ்சிய பெடைய முங்கால்,
அகலன்றி லாய்நா ளுற்றி
வஞ்சியை விட்டுச் செல்லும்
வருத்தமே வரவாய் வந்திங்
கெஞ்சிய இரவே எங்கோ
ஏகிடல் செலவா யெண்ணித்
துஞ்சிய பொழுதும் நெஞ்சைத்
துன்பமாய்த் துளைத்த தன்றே.

# தவிப்பு

உள்ளத்திற் குவப்பை யூட்ட
வொண்கதி ருதிக்கும் போது,
புள்ளொத்துப் புகழ்ந்து போற்றிப்
புலரியைப் பாடும் போது,
கள்ளொத்துக் கசியக் கன்னிக்
கமலங்கள் மலரும் போது,
வள்ளத்தில், தேனைய் நான்பொன்
வண்டெனப் பருகும் போதே!

என்னுடல், அதில்நேர் பாதி
இவளுட லெனவே யெண்ணும்
பொன்னுடல், புனல்பூப் போன்ருள்,
புலவனென் புலனப் போதில்
மன்னிடல் மாறு மாருய்
மனங்கொள வந்தாள், மாந்தத்
தன்னிட முள்ள தெல்லாம்
தனித்துத்தந் தனுப்பு தற்கே!

'கழியிலே கமலம் கண்டு
கருவண்டு கொண்ட' தென்னும்
விழியிலே முத்தும் வீழ்த்த
விரும்பினுள் போலும்! வீற்று
மொழியிலே முழுதும் சொல்லி
முடியாதின் றெனவே, முன்பென்
வழியிலே வந்து வாய்த்தாள்,
வறுமையைச் சுமந்து வாழ்ந்தே!

'''வளமான வனத்து தித்து
வறண்டகான் புகுந்து வாடும்
இளமா'னென் றிரங்க வுற்றேன்
இதயத்தி லிலங்கு மீவே!
'குளமான தில்ல' மென்னக்
குவளைக்கண் ணீர்கொட் டாதே!
உளமான தளி;வாழ் வொண்பூ
வொப்பென வைப்பே'' னென்றேன்.

''கார்நிலை யற்று, வானம்
காய்கின்ற காலத் தேரி
நீர்நிலை யற்று நின்ற
நெய்தலாய் நமது மக்கள்
சீர்நிலை யற்றுச் சேர்ந்து
சிந்துங்கண் ணீர்கா ணைநீர்,
பார்நிலை பற்றிப் பாடும்
பாட்டைப்பா ராட்டா''... ரென்றே,

குவளையில் மதுகூர்ந் தென்னக்
கோலங்கொள் விழிநீர் கொள்ளப்
பவளத்தில் படிந்த முத்தாய்ப்
பல்லிதழ் பதியப் பாவம்!—
எவளையென் னிதயத் தேற்றி
எழில்விளக் கெனவைத் தேனோ-
அவளையே றிட்டுப் பார்த்தென்
அகமனல் மெழுகா யிற்றே!

பன்னூறு வண்ணப் பூக்கள்
பயனூர்ந்த மணிவண் டாய்நான்,
மின்னேறு போன்றென் நெஞ்சில்
மேலாண்மை மேவப் பெற்றேன்;
'முன்னேற முடியு மென்று
மொழிகின்றேன்; முறையோ ராதார்
சொன்னூறு சிந்தி னும், நீ
சுயத்தன்மை யிழந்தி டாதே!

அகிலாகிக் கமழாக் கூந்தல்
அமிழ்தே! யுன் அகத்தை யாற்று!
பகலாகி யுளத்திப் பாரில்
பாதிநாள்! பைந்த மிழ்பா
புகலாகி யுளது! போற்றிப்
பொருளீவோ ருளர்! நான் போய்ப்பொன்
முகிலாகி வருவேன், துன்பம்
முழுவதும் தவிர்த்தற்'' கென்றேன்

''கங்குலில் மதியம் போன்ற
கனித்தமிழ் சங்க நூல்கள்
எங்கணும் கண்கா ணதே
இருட்டறைக் குள்ளிட் டேகி,
'அங்கதன் தூதோ, அன்றேல்
அருச்சுனன் தவமோ,—ஆற்றின்,
தங்கமும் வயிர முந்தான்
தரும்,வாரித் தமிழ்நா டின்று!

பாரியைப் படிப்பில் கூடப்
பாராத பாரில், பாழும்
சேரியின் செழிப்பிற் காகச்
சிந்திப்பார் சென்று ரென்றால்,
யாரையு மையு றும்பொய்
யாத்திகம் மலிந்த ஊர்க்குள்,
ஏரியைக் காணு நீராய்
ஏமாற்ற மடைவீ'' ரென்றாள்.

# தெளிவித்தல்

'''நுண்ணறி வொன்ற நோற்று
நூறுநூல் பயின்ற போதும்,
பெண்ணறி வென்ப தென்றும்
பேதமைத்' தெனவே பேசும்
மண்ணுறு மனிதர் கூற்றை
மறுக்கவே இயலா தென்னக்
கண்ணுறு காட்சி யாகிக்
கலங்குதல் தவிர்க, கண்ணே!

முயல்களைக் கொன்று தின்றே
மூப்புற்ற முட்காட் டோநாய்,
வெயில்களைப் பறுதல் வேட்டு
விரிமலர்க் காவை மேவித்
துயில்களைந் துறும்ப சிக்குத்
துப்பாக நோக்கிற் றேனும்,
மயில்,கிளை மீதிற் குந்தி
மாங்குயி லிசைமாந் தும்மே!

வானத்தில் நிலவை வாரி
வழங்கிடும் மதிபோல், வையம்
ஞானத்தி லொளிர நாடி
நல்லவை நவின்ற போதும்,
ஈனத்தி லிதயம் வைத்தோர்
எதிர்த்ததை யிகழ்தல் மெய்;தன்
மானத்தில் மனது வைத்தோர்
மகிழ்ந்ததைப் புகழ்தல் மெய்யே!

வேதனை வெறுமை, வீட்டில்
வேரொடுங் களைய வேண்டின்
சோதனை செய்வ தன்றிச்
சூக்கும மினிவே றில்லை!
போதனை புரிந்து போதைப்
பொன்னுக்கும் புதிய சக்தி
சாதனை செயநான் செல்வேன்
சமர்த்தாகி யிருநீ சார்ந்தே!

தேக்காகத் திமிசே யாகத்
தெளிந்தநன் மரத்தைத் தேடிப்
போக்காகப் பொருந்தின் குந்திப்
பொம்மைகள், பொலியச் செய்து,
சோக்காகச் 'சிவன்மா லெ'ன்று
சொல்லியே விற்போ ஞெப்ப,
வாக்காகச் சொற்கள் கோத்து
வண்டமிழ் கவிதை யாத்தே,

உழுதலைத் தவிர்த்து விட்டோ
ருழவனு முழைப்பி லூற்ற
வழுதலைப் பறித்துச் சென்று
வாணிகம் செய்வ தொப்ப,
எழுதலைத் தவிர்த்து நானின்
றேகுவே னினிநீ யிங்கே
அழுதலைத் தவிர்த்து மக்கள்
அகங்காத்துக் கொண்டி ரு''ன்றேன்.

எச்சுக்கு மட்டு மென்றும்
இடங்கொடா எழில ணங்கென்
பேச்சுக்கு மறுபேச் சின்றிப்
பெரிதோர்ந்து கேட்ட பின்பு,
நீச்சுக்குப் போதா நீரில்
நிலைமாறி வீழ்ந்தெ ழுந்'திம்
'மூச்சுக்குப் பழுதின்' றென்று
மொழிதலாய் முறுவ லித்தாள்.

சுகத்தினை மலர்த்த வுள்ள
சுடர்க்கொடி சோகம் நீங்கி
முகத்தினை மலர்த்திப் பூத்த
முறுவலை யுண்டு நானென்
அகத்தினை மலர்த்த, ஆரா
அன்பினுக் குரிய ராயெம்
மிகத்தினி லுதித்த மக்கள்
எழில்முகம் மலர்ந்த தன்றோ

தாயாகத் தந்தை யாகத்
தம்மருங் குழந்தை யொன்று,
வாயாகி வயிறு மாகி,—
வாந்தியைச் செய்த வாறே
நோயாகிப் படுக்க நேர்ந்தால்
நொந்தோராய் நுவல்வர் குந்தி:
'சேயாக மாறிற் றெங்கள்
சீவன்தான் வந்திங்' கென்றே.

கடலையே யொத்துற் ரோர்,கண்
கலங்கியே கதறி னும்நான்
'உடலையே விட்டுச் செல்லும்
உயிரெ'ன வூரை விட்டின்
றிடலையேற் றிருக்கும் வள்ளல்
இருப்பிட மடுத்தி ரந்தெம்
குடலையே குதறிக் கொல்லும்
கொடும்பசி தடுக்கச் செல்வேன்.

மாமர மலர்ச்சி மாந்தி
மகிழ்வுறுங் காலை, மல்கத்
'தாமரை தளைய விழ்ந்து
தாரையாய் மதுவார்த்' தென்னப்
பாமுறைப் படி,தேன் பாகாய்ப்
பரவசப் படும்பண் பாடக்
காமுறு மரங்கை விட்டுக்
கவிக்குயில் கடக்கப் போமோ?

கல்லொத்துங் கனியை யொத்தும்
கருத்துகட் கிணக்கங் காணற்
கெல்லொத்து மிலங்கா நிற்கும்
என்மன மிசையு மேனும்,
வெல்லத்தை விட்டுச் செல்ல
விரும்பாத ஈயா யின்றிவ்
வில்லத்தை விட்டுச் செல்லற்
கெனதுகா லிசையுங் கொல்லோ!

# தலைக்கொள்ளி

'யோகரா யும்மைச் செய்வ
தாழ்வினை' யெனவே வோதி,
மூகராய் நம்மை மாற்றும்
மூர்த்திகள் தமையுண் டாக்கிப்
'போகராய்ப் பொலிய வேண்டின்
பூசிப்பீ' ரெனப்போ திக்கும்
நாகரா சய்ய னால்நான்,
நாத்திகப் பட்டம் பெற்றோன்.

நாட்டிலே நலம்நா டாத
நாகரா சன்வந் தின்று,
'கேட்டிலே கேடுண் டாக்கும்
கெட்டநாள் நவமி' யென்னக்
காட்டிலே கடுவாய்க் கூவல்
காதுற்ற புல்வா யாயென்
கூட்டிலே வுயிரா னாள்; 'ஓ
கொடுமையே! அந்தோ!' என்றாள்.

''ஆரணங் காகி வந்தென்
அகங்கொண்ட அன்பே! அஞ்சேல்;
தோரணந் துலங்கக் கட்டித்
தூமலர் தூவித் தொக்குப்
பூரண கும்பங் கொண்டு
போற்றினும், பொய்மெய் யாமோ?
'காரண மின்றி யென்றும்
காரிய மில்லை' கண்ணோ!

மெய்யர்தாம் மேவு மூரில்
மேம்பாடு மிஞ்சும்; மீறிப்
பொய்யர்தாம் புகுந்த வூரில்
பொல்லாங்கு மிஞ்சும்; போதத்
துய்யர்தாம் தோன்று மூரில்
தோழமை மிஞ்சும்; தோதாய்
அய்யர்தா மடைந்த வூரில்
அறியாமை மிஞ்சிற்'' றென்றேன்.

'பணங்கூட வில்லை யப்பா!
பாங்கற்ற பருவம்; பார்த்தால்
மணங்கூடத் தோல்லை' யென்று
மறுத்தும், கை மாற்று செய்து
'குணங்கூடும் முல்லை சான்ற
குலமகள்; கொள்க! கோரும்
கணங்கூடுங் கால' மென்றென்
கல்யாணம் முடித்தா ரப்பா!

ஆனது நன்றென் றேமற்
றன்றென்றே நவிலா தின்று
கானது கடந்து செல்லுங்
கலைமாறைய்க் கலங்கிக் காலம்
போனது பற்றி யுள்ளம்
புழுங்கிடப் போவேன், போதின்
தேனது தெவிட்டும் போதும்
தெவிட்டாத தமிழும் தேர்ந்தே!

புரக்குங்கை யொன்றன் றென்னைப்
புகழ்ந்துபொன் தந்த போதும்,
'இரக்குங்கை யாகா தென்கை
யீயுங்கை' யென்றேன் நின்று.
சுருக்குங்கை யாகிச் சொந்தச்
சுகுமாரி சோகம் தீர்த்தற்
கிருக்குங்கை யிடுங்கைக் குக்கீ
ழேற்குங்கை யாயிற் றின்றே!

நூலாய்ந்து நுவலும் போதும்,
நுவன்றதை யெழுதும் போதும்,
மேலோய்ந்தும் மிடுக்கோ யாத
மேதகு மிதயம் மேவிச்
சேலாய்ந்து கொண்ட கண்ணொன்
சிற்பத்தின் சிறுமை தீர்க்கக்
காலோய்ந்து நோகச் சென்றென்
கையேந்த லாயிற் றன்றே!

# புறப்பாடு

புறப்பட்டுப் போனேன், பொய்யாப்
புலமையால் பரிசில் வேட்டுப்
பிறப்பிட்ட மானம், வீரம், —
பிறவெலாம் பின்னின் றேங்கக்
குறிப்பிட்ட இடமூர் கூடக்
கூருத நிலையில், கொண்ட
சிறப்பிட்ட தமிழே யென்னைச்
சேரிடம் சேர்க்கு மென்றே!

சீரிழைத் திருந்த வீட்டில்
சீவனை யிருத்திச் சேர
வேரிழைத் திருந்து நீண்ட
விரிதலைப் புளியன், — வெய்யோன்
நேரிழைத் திருந்து காய்ந்தால்
நிழல்தர நேர்ந்த சாலை
பாரிழைத் திருந்த பாங்கில்
பையவே நடந்தேன் பார்த்தே!

கூட்டத்தை விட்டுக் கூட்டில்
குஞ்சுகட் கிரையைக் கொள்ளும்
நாட்டத்து நாரை யாய்நான்,
நல்லதோர் குளமாய் நல்லூர்த்
தேட்டத்தில், தெளிந்து சென்று,
தித்திக்கும் தமிழ்கேட் பித்தோ
ரோட்டத்தில் பரிசுங் கொண்டிங்
கூருற்றுண் டுவப்பித் தற்கே!

விருத்தனே, விடலை யோ, நோய்
வேதனை தீர்க்க வேண்டித்
‘திருத்துவா’ னெனவே தேர்ந்து
தேகத்தைக் காட்டின், நாட்டு
மருத்துவன் மலர், வேர், வித்து, —
மற்றவும் மண்ணில் தேடும்
தரத்தினி லொருத்த னாய்நான்
தயங்காது நடந்தே னன்றே!

ஆராத, ஆாவ மூட்டும்
அரும்பொரு ளனைத்துங் கொண்டு
கோராத விதமாய்க் கோரிக்
கொண்டாடும் கோவைக் குப்போய்ப்
பாராத கண்பாழ்; பார்த்துப்
பயன்படும் பொருளை வாங்கித்
தீராத கைபா' ழென்றும்
தெருக்கூடிப் பேசு தின்று!

'ஆவியை யரிதிற் காக்கும்
அருமருந்' தெனவே ஆய்ந்து,
காவியம் களிக்கப் பாடிக்
காசினி நெறியைக் காட்டிப்
பாவியைத் திருத்தும் நல்ல
பாவல னன்றிப் பாரில், .
கோவையைக் குறைசொல் வோர்யார்?
குலவிடும் மனிதர்க் குள்ளே!

பாங்கேயோ, பண்போ,—பார்க்கும்
பார்வையிற் படிந்தி ராத
காங்கேயக் காளை யன்ன
கருப்பையன், கடையில் குந்தி
மாங்காயு மன்றே! மற்றம்
மட்டையு முரிக்கா நெற்றுத்
தேங்காயை விற்கத் தேர்ந்த
தெருவில்நாய்க் கேது சோலி?

மஞ்ஞைக்குப் போர்வை தந்த
மாண்டகு பேகன் மானப்
பஞ்சைக்குப் பசியைத் தீர்க்கப்
பரந்தவான் முகில்கள் பையப்
புன்செய்க்குப் பெய்து! மிஞ்சும்
புதுமழைப் புனல்வந் துற்றால்,
நன்செய்க்கும் நல்கும் ஏரி
நலன்காணப் போய்நான் நின்றேன்

# கோவைக்குளம்

பயிரெனச் செடிபுற் பூடு,
பனை,தென்னை, வாழை யென்னச்
செயிரென லின்றி யன்றில்,
சிரல்,கிளி, குயில்,மா டாடாம்
உயிரென வொன்றி, மக்கள்
உவக்குமிவ் வுலக முய்தல்,
பெயரின முகில்சூழ் வானம்
பெய்வதின் பெறும்பே றன்றோ?

'அல்லையே பார்த்துப் பார்த்தலை
தலுத்துவான் விட்டு வந்திங்
கொல்லவே, வுடுக்க ணங்கள்
உலாவிய தெனவே' மீன்கள்!
அல்லியே குவளை, யாம்பல்,
அரவிந்த மலர்கள் பூத்தோ
ரெல்லையே யில்லா இன்பம்
ஈவதிவ் வேரி யன்றோ?

வானாகி வழங்க, வாங்கி
வையகம் காக்கும் நீரில்,
ஊனாகி உடலை யோம்பும்
உயிர்களுக் குணவா கும்பொன்
மீனாகி மிளிரும்! மீனை
மிடுக்காகப் பிடித்து நுங்கிக்
கோனாகி நிற்கும் கொக்கும்!
குடியாகி யலையும் வாத்தும்!

வெளுப்பவர் சிலபேர் சட்டை,
வேட்டிகள்; விரும்பி நீரில்
குளிப்பவர் சிலபேர்; கோலக்
குவளைக்கண் குமரி மாரைக்
களிப்பவர் சிலபேர் கண்டு!
கரைமீது வருவோர் காணா
தொளிப்பவர் சிலபேர், வெட்க
முள்ளவ ருடலை நீர்க்குள்!

மண்ணில்நன் முல்லை யீயும்,
மகத்தான நறும ணத்தை!
கண்ணியற் கரும்பு மீயும்,
கவிதைபோ லினிக்குஞ் சாற்றை!
தண்ணிய கதலி யீயும்
தரமான கனிகள்! தாங்கித்
திண்ணிய தென்னை யீயும்
தேனெனத் திகட்டாத் தேங்காய்!

'எனதுன' தெனுஞ்சொல் லின்றி
யிணைந்திருந் திவைக ளீயும்
கனிதனைக் கரும்புச் சாற்றைக்
காய்தனைக் கலந்த ருந்தி,
இனிதென மணமுந் துய்த்தே
இன்பமுற் றிருந்து மீயா
மனிதனைச் சுமந்திம் மண்ணே
மானக்கே டுற்ற தன்றோ?

போவது வருவ தற்றும்
புலவர்பா ராட்டும் வாழ்வுக்
'கீவது தவிர்த்து வேறொன்
றில்லை'யென் றிவைகள் வாழ
நோவது செய்து நொந்து
நூறுபேர் 'பாவி' யென்னச்
சாவது சரியா? சற்றும்
சகத்தியல் பறியா தோரே!

ஏமுற இயம்பு வேன்நான்:
ஏறுமா றின்றி யென்றும்
தாமுறு மனிதத் தன்மை
தளையவிழ் மலர்தா னாகக்
காமுறுங் கவிஞர், தம்மைக்
காண்பவர் கருதிக் கேட்டால்
நாமறுக் காம லீதல்
நாடெலாங் காண்ப? தன்றோ

பாரிக்கு முவமை கண்டான்
பைந்தமிழ்ப் புலவன்; 'பண்பில்
மாரிக்கொப் பானன் பாரி
மாநிலத்' தென, நான் மற்றிவ்
வேரிக்கோ ருவமை காணேன்;
எழிலாக இலங்கு மேரிக்
கோரைக்கு முவமை காணேன்
குவலயந் தனிலின் றென்றே!

'மாடியே மச்சே,—யாகி
மக்களும் மகிழ்ச்சி மல்கக்
கூடியே குலவுங் கோவை,
குளமிதை முடியாய்க் கொண்டு
நீடியே நிலைக்க' வென்றென்
நெஞ்சினில் நினைக்கும் நேரம்,
ஓடியே வந்த தங்கோ
ரொப்பிலாக் குதிரை வண்டி!

## சந்திப்பு

பாரியார் பரிந்து கேட்ட
பைந்தமிழ் பழுதென் றெண்ணிப்
பூரியார், வடையார், தோசைப்
புரவலர் புகழ்ந்து போற்றும்
வாரியார் வடித்துத் தந்த
வைகுந்தத் தமிழை வாங்கிச்
சேரியார், — செல்வார் போலும்
சேமிப்பைச் சிந்தா தின்றே!

மூடிலாப் பெட்டி வண்டி;
முதல்தரக் குதிரை; மூண்ட
பாடிலான்; படிறில் லானிப்
பதிவந்து பெயர்வான்; பார்த்தால்
ஈடிலான்; நிறுத்தி யெட்டி
யிறங்கிவந் தென்முன் நின்றான்,
'நாடிலா நாத' னென்ன
நானங்கு நிற்ப தாய்ந்தே!

''காய்ந்துபோய்க் கிடந்த கம்பங்
காட்டிலே, கால்வாய்த் தண்ணீர்
பாய்ந்துபோ மாறாய் நானும்
பார்க்கிறேன்; வணக்கம், ஐயா!
ஓய்ந்துபோ யுள்ளீ ரின்றிங்
கொருவரா யொன்றி நின்றே;
ஆய்ந்துபார்க் கின்றீர் போலும்
அழகான குளத்தை யாழ்ந்தே!

கங்கையைக் காணா ரேனும்
காதினில் கேட்டோ ருண்டு!
சங்கையே யில்லை; சாற்றின்
சமதர்மக் கவிஞர் தாமே!
உங்களை யறிந்தோ ரிந்த
உலகினிற் பலபே ருண்டு!
எங்களை மறிந்தோ ரில்லா
திருப்பவ ரெனைப்போன் றாரே!

அமுதென இனிக்கு முங்கள்
அருந்தமிழ்க் கவிதை மூலம்
சமதர்ம மதனைக் கேட்டுச்
சரிவர அறியு மாவல்!
எமதருஞ் சுற்றம் சூழ
இருந்துநீ ரியம்பற் கின்றே
வுமதுளங் கனிந்தெம் மூருக்
குவந்தெழுந் தருள்க'' வென்றான்.

புன்சொல்லைப் புடைத்தொ தூக்கிப்
புவியினைப் பொலிவிக் கின்ற
நன்சொல்லை நாடிக் கொள்ளும்
நல்லவன்; நவிலா நின்ற
தன்சொல்லின் தரம்தாழ்த் தாத
தமிழ்மகன் தனைநா னின்றிங்
கென்சொல்லி வாழ்த்த லென்றே
எண்ணினே னிறும்பூ துற்றேன்!

'சங்ககா லத்து நூல்கள்
சங்கநூ லெ'ன்ப தொப்ப,
அங்கங்கட் கழகுண் டாக்கும்
அணிகல னக்கற் கின்றிப்
புங்கனூர்த் தெருவில் வீழ்ந்து
புழுதியிற் கிடந்த போதும்,
தங்கமென் றூல்தங் கம்தான்
தரமதில் தாழ்ந்தி டாதே!

தாடியும் முடியும் தாங்கித்
தவசியின் தரமாய்த் தக்க
நாடியே நயக்கப் பாடும்
நலமுறு தமிழின் மாட்சி,—
தேடியே கால்கள் தேயத்
திரிந்தநன் மருந்து வீடு
கூடியே காண்ப தொக்குங்
கோலமா யிருந்த தன்றே!

''தப்பறத் தாழ்வு நீங்கத்
தமிழாய்ந்து தறுகண் தாங்கி
ஒப்பற, வுண்மை யோர்ந்துன்
உளமொளி வயிர மாக!
செப்புறி னென்து சிந்தைச்
சிக்கறச் சென்று சேரும்
துப்புறு முனது பேரூர்
துலக்குக தூயோ'' யென்றேன்.

''ஒண்டுறை யுதித்த லர்ந்த
ஒள்ளிய நளினத் தேறல்
உண்டுறை வண்டு போல்நா
னுமதரும் கவிதை யோர்வேன்;
கொண்டுறை கிறவெம் மூர்,பேர்
குறிப்பெலாம் கூறு வேன்;நீர்
திண்டுறை வண்டி யேறத்
திருவுளம் கொள்க!'' என்றான்.

''உனையழைத் தோரே னார்பேர்
உணரேன்;மற் றுரையா டாதேன்,
பனையழைத் 'துன்வீ டன்றில்!
பரிந்துவந் திரு'வெ னல்போல்,
தினையழைத் 'தெனைநீ கொய்து
தின்னுக கிளி!'யெ னல்போல்,
எனையழைத் தேக நீயின்
றியம்புவ தேற்கு'' மென்றே,

உருளுமவ் வண்டிக் குள்நான்
உட்கார வுவந்து ஊரத்தான்:
'இருளுமப் பொழுதங் கேற்க
இருந்தநற் பொருள்கண் டுள்ளம்
மருளுமோர் மகவும் கொள்ள
மாதாவை யழைப்ப தொப்ப,
அருளுமவ் வனைத்தும் நீரெம்
மகத்திருந் தளித்தற்' கென்றான்.

ஒருமருங் கிருந்தாங் கோடும்
ஊர்தியா லுவந்த என்கண்,
'திருமருங் கிருந்த தென்னத்
திகழும்நெல் கரும்பு தென்னை,
இருமருங் கிருந்தி லங்கும்
எழில்மிகு காட்சிக் கேற்ப,
வெருமருங் கிருந்த வேலி
வெளிதாண்ட விரும்பிற் றன்றே!

ஓட்டாம லோடா நின்ற
ஒப்பற்ற குதிரை, வேகம்
கூட்டாது, குறைத்தி டாது;
'குவலயக் கோட்பா' டொன்றப்
பாட்டாகப் பாட வந்த
பாவலன் திருவாக் கால்பா
ராட்டாகக் கூடு' மென்னும்
ஆர்வத்தி னுக்கம் போலும்!

மாந்தளிர் மேனி மாதர், —
'மங்குல்நீண் டொன்றிற்' றென்னுங்
கூந்தலி லணிந்து கொள்ளும்
குணங்குறைந் திருந்தும், கோவில்
போந்துள பொம்மைக் கன்மேல்
பொருத்துதற் கஞ்சிப் பூக்கள்
தேன்துளி விழிநீர் தேக்கித்
தேம்பிடும், அரளி வேலி!

'வருபவர், செல்வோர் வாணாள்
வழியிலே கழிய வையத்
தொருபுறம் வேரை யூன்றி
யுரிமையாய் வாழ்வ தோரார்;
பரிபவம்! படியார் நம்மைப்
பார்ப்பது' மெனவே பைய,
'மறுபுறம் திரும்பிற்' றென்னும்
மதமருக் கள்ளி வேலி!

'வில்லெனும் புருவம்; வெற்றி
வேலெனும் விழி; வெய் யோன்வீழ்ந்
தல்லெனும் குழல்; நன் முல்லை
யரும்பெனும் பல், மா னன்னார்,
'கல்'லெனச் சிரித்துத் தம்செங்
காந்தள்கை விரல்கொண் டிங்கே
'நில்'லென நட்ட பேரேன்
நீக்கினீ' ரெனும், நெல் நின்றே!

'புரவுள்ளிப் புழங்கும் காலம்
போயிற்று; பொய்மை போற்றி
வரவுள்ளி வாழும் காலம்
வசதியாய் வாய்த்த' தென்றே,
கரவுள்ளிக் கழங்கம் பூண்டார்
கண்படக் கூடா தென் றம்
மரவள்ளிக் கிழங்கும் மண்ணில்
மறைந்தன போலு மங்கே!

'துரும்புநீ! பூத்துக் காய்க்காய்!
தூ'வெனத் தூற்றி னும், நான்
விரும்பவே மாட்டே னிந்த
வில்வம்போல் வீணாய் வாழ!
அரும்பியு மணியா காப்பொன்
னரளியைப் போலும் வாழேன்;
கரும்புநா னிரும்பா லென்னைக்
கசக்கினு மினிப்பே' னென்னும்!

'கருத்துமாய்க் கண்ணாய்க் காத்துக்
காலமோர்ந் துழுது நட்டுத்
திருத்தமாய்க் களையும் தீர்த்துத்
திளைக்கநீர் பாய்த்துத் தீனன்,
பருத்தியாய் விளைத்தான்; பாவி,
பணம்பண்ணிக் கொழுத்தா' னென்றே
வருத்தமாய்க் 'காகா' வென்றோர்
வாயசம் வைத தங்கே!

''புத்தியே யற்ற வாழ்வாய்ப்
புறவுவாழ் வுற்ற' தென்று
கத்தியே கால மெல்லாம்
காதினைத் துளைக்கும் காக்கைச்
சித்தியே சுதந்தி ரத்தைச்
சீவனாய் வைத்துக் காக்கும்
சத்தியா' மெனச்சா ரங்கம்
சங்கீதம் பயின்ற தங்கே!

கொறியாடு குனிந்து குள்ளக்
கோரையும் அறுகும் மேய,
வெறியோடு விலகி வேறாய்
வெள்ளாடு வேலி மேல்கால்
நெறியோடு வைத்து நின்ற
நிலையிலே தளிராய்த் தின்று
மறியோடு மகிழ்ந்து போதல்
மறக்கவே இயலாக் காட்சி!

காடெனத் திரிந்து நாளும்
காலாற மேய்ந்து வாழும்
ஆடெனப் பேரொன் றாயும்,
அவற்றிடைப் பிறப்பு பேதம்
நீடினும், நேசம் நீங்கா
நெறிமுறை நிலையை யெண்ணிப்
பாடினும் படிப்பா மென்றே
பரவசப் பட்டேன், பார்த்தே!

'ஏடுபெட் டிக்குள் ளேறின்,
இருளித யத்தி லேறும்;
பாடுபெட் டிக்குள் ளேறின்,
பசிவயிற் றில்பாய்ந் தேறும்;
நாடுபெட் டிச்குள் ளேறின்,
நலிவேறு;' மெனற்குச் சான்றாம்
வேடபட் டியைவிட் டேறி
விரைந்ததன் றருமை வண்டி!

# வருநர் போநர்

வண்டியும் வகையாய் வந்து
வாய்த்ததன் றெனக்கு! வாழ்த்தைக்
கொண்டஇத் தோழன் கொள்ளக்
கோட்பாடு கூறு தற்கென்
மண்டையும் மலர்ந்து முல்லை
மணங்கூட்டு மெனவே, ''நண்பா!
உண்டுறை கிறவுன் னூர்பேர்
உரைக்கும்போ தூற்ற'' தென்றேன்.

''வான்கொண்ட நீரை வாங்கி
வைக்கின்ற வைய மெல்லாம்
தான்கொண்ட போதும், 'தக்க
தலைமைசால் கோட்பா டொன்றத்
தேன்கொண்ட தமிழ்வல் லோரைத்
தேடாரின் தேட்டம், தேரா
மீன்கொண்ட தூண்டில் வாழ்வாய்
மீளார்பட்' டென்பர் மேலோர்!

அம்புவிக் களிப்ப தற்காம்
அருஞ்சுனை யருவி யுண்டு;
தும்பிகள் சுவைத்துத் துய்க்கத்
தூமலர்த் தருக்க ளுண்டு;
கொம்புகாய், கனி, தேன் கொண்ட
குன்றுண்டு; குடிகொள் ளற்குக்
கெம்பனூ ருண்டங் கையா!
கிளைஞரோ டிணைந்துய் தற்கே!

அட்டுக்கல் லருவி! ஆஆ!
அழகிய லமைப்பஃ தையா!
பட்டுக்கற் பாறை மேல், நீர்
பளிங்காகிப் பாயும்! பாரோர்,
எட்டுக்கல், பத்துக் கல்,—ஏன்
எங்கெங்கோ—இருந்து வந்தோர்
மட்டுக்கல் லாராய்த் தம்மை
மறந்தும்நீ ராடு வாரே!

ஊருக்கென் றுதவ வொட்டி
யுள்ளதோர் குள்ள ஏரி!
பேருக்கலை தேரி; வேறு
பேறுபெற் றறியா வாறே.
காருக்குக் கோபம் மூண்டு,
கண்கெட மின்னிப் பெய்யும்
நீருக்கோ ரிரவு நேர்ந்து,
நிலமாகும் மறுநாள் போதே!

நீரோடு நிழலும் நேர்ந்து
நிலைத்திட நெடுநாள் தொட்டெம்
மூரோடு முறவா யுள்ளோர்க்
குவகையுண் டாக்கற் குற்ற
நேரேடு, கொய்யா அத்தி,—
நினைக்கநா நீர்சு ரக்கும்
சீரோடு, 'சோலை' யென்றும்
செப்புதற் கொன்றுண் டங்கே!

'உன்செய லென்று ரைத்தற்
கொன்றுமிங் கில்லை சாமி!
என்செய லன்றி' யென்ன
ஏரெரு தெல்லா மீட்டி,
வன்செயல் புரியார் வைகி
வாழ்வொன்றி வாழு மூரில்
புன்செயே வுளது, சுற்றிப்
புகராடை புனைந்த தொத்தே!

ஆடில்லா அகமொன் றில்லை;
அழகான காளை, கன்று,
மாடில்லா மனையொன் றில்லை;
மயக்கறக் கூவும் கோழிக்
கூடில்லாக் குடிலொன் றில்லை;
குறையில்லா திருந்தும், கொள்ளும்
ஏடில்லா வீடா யென்றும்
இசையில்லா துளதெம் மூரே!

கவருத லறியார்; வீணைய்க்
காலமும் கழியார்; காட்டில்
துவரையை விளைவித் துத்தம்
துணிவினைத் துலக்கு வோராய்,
அவரையை விளைவித் துத்தம்
ஆற்றலை அறிவிப் போராய்,—
எவரையு மெளிதில் நப்பும்
இயல்பின ரெம்மூ ராரே!

இல்வண்ணா மிலங்கச் செய்ய
இருக்கின்ற புன்செய்க் காட்டில்,
சொல்வண்ண மெனவே சோளம்
சுவர்ணம்போல் விளைந்த தாயின்,
நல்வண்ண மரைத்து நாளும்
நாமதைக் களிசெய் துண்டால்
கல்வண்ண மாகும் மேனி;
கனிவண்ண மாகும் ஞானம்!

மருந்தென வுணவ ருந்த
மறுப்பவர், மற்றம் மண்ணின்
கருந்தினை யாய்ந்து குற்றிக்
காரிகை கைப்பாங் காக,
'விருந்தெ'ன வந்தோர்க் கென்று
விடியல்சிற் றுண்டி செய்தலை
தருந்திடப் படைத்தா லார்வுற்
றமிர்தமென் றுண்பா ரையா!

கொங்குறை குன்றாய்க் குன்று
கொண்டுறை யூரா யூரில்
செங்கதி ரொளியைச் செய்யச்
செறிமுகில் துளியைச் செய்யச்
சங்கையை மட்டும்—சாமி,
சமயத்தி—லறச்செய் யாத
லிங்கைய னையா என்பே
ரிலங்குவே னினிச்செய் தென்றன்.

# [illegible]

கருத்தலை யொலிக்கும் கன்னிக்
கடல்தமிழ் குளித்துக் கற்ருேர்,
தெரித்தலைத் தெளிந்து முத்தாய்த்
தேடுவர்; இவனைத் தேரின்,
வருத்தலைப் பற்றி யெண்ணு
வாய்மையன்; வயிரம் வாரிப்
பொருத்தலைப் புரிவான் போலும்,
பொன்மனச் செம்மல் போன்றே!

'உனதென வுளத்திற் கொண்டிவ்
வுலகில்நீ யுயர்க' வென்றே
தனதுதாய் தரிக்கத் தந்த
தறுகணும் தயவும் தள்ளி,
மனிதனை மனிதன் மாய்க்கும்
மார்க்கத்தில், மாண்பு மிக்க
புனிதனைக் கண்டென் னுள்ளம்
புலரியாய்ப் பொலிந்த தன்றே!

உள்ளுவ தெல்லா மூரின்
உயர்வுக்கா யுள்ளு வோனைத்
தெள்ளிய தமிழில் தேறுைத்
திருக்குற ளியற்றித் தந்த
வள்ளுவ னிருந்திவ் வாருேர்
வாய்ப்புறின் வாழ்த்தி, 'வா'வென்
றள்ளியே யணைத்துக் கொள்வா
'னருமந்த மகன்நீ' யென்றே!

'பாருண்டு; பதிபாங் குண்டு;
பாட்டாளி மக்க ளுண்டு;
நீருண்டு நிலமுண் டேனும்
நெஞ்சுநேர் நிலையில் லாமல்,-
பேருண்டு பண்ணுங் கொல்லோ
பேதமை பெருகிப் பேராப்
போருண்டு பண்ணுங் கொல்லோ—
பொருளுண்டு பண்ணு வோர்க்கே!

'மேரீச ஞெடுமென் மாதர்
மேலெடுத் தெறிபந் தென்னப்
போரீச ஞய ரக்கன்
போந்தெடுத் தெறிந்து, பொன்ற
மாரீசன் தனைம யக்கும்
மாயமா ஞக்கி, மற்றப்
பாரீசன் ராமன் தேவி
பார்த்திடப் பணித்தா' னென்னும்,

ஆரியப பொய்க ளாலும்
அழிப்பதற் காகா வாருய்ப்
பாரியற் பண்ணைப் பன்னிப்
பரவசப் படுத்தும் பண்டைச்
சீரியல் தமிழர் நூல்கள்
செவியுறச் சிந்திக் கின்ற
நேரிய னெனஎன் நெஞ்சம்
நிரைவுற நேர்ந்த தன்றே!

''செயலினில் பயிர்செ ழித்துச்
செறிவொடு கதிர்கள் முற்றி,
வெயிலினில் காய்ந்து திர்த்த
வெண்ணெலை யரிசி யாக்கிக்
கயலெனுங் கண்ணை ரட்டுக்
'கவின்மலர்ச் சோறெ'ன் றுண்ண,
வயலெனற் கிலைபோ லும்நும்
வளம்மிகு பதியி'' லென்றேன்.

''குரவுகள், கொடிகள், கொண்ட
குன்றிடைக் குளுமை கூர்நல்
லருவிக ளாகக் கண்ட
தன்றிமற் றருகி லண்டிக்
குருவிகள் கூடிக் குந்திக்
குடிக்கவோர் குளங்கொள் ளாதே,
தரவுக ளாய்நெல் கொண்டு
தழைக்குமூர் தானிஃ'' தென்ருன்.

சாற்றவே, செவியை யச்சொல்
சாருமுன் கண்ணூர் சார்ந்தே,
ஆற்றவே இயலா வாறென்
னகமுறும் வறுமை நோயை
மாற்றவே வந்து வாய்த்த
மருந்தென மனமு மெண்ணப்
''போற்றவே பொலிக! நும்மூர்
புகழோங்கிப் பூப்போ'' லென்றேன்.

'விண்ணைவிட் டகல்வேன், வண்டே!
விடியல்காண் பளவும் வீற்றுத்
திண்ணைவிட் டகலா தென்றன்
தேவிசெங் கமலம் தேரப்
பண்ணைவிட் டகலாப் பாடல்
பாடுக பரிந்தெ'ன் பான்போல்,
கண்ணைவிட் டகலும் வெய்யோன்
கவின்மலைத் தலைக்கண் நின்றான்.

# ஆடும் மாடும்

சிகரத்தைச் சேர்ந்தி லங்கும்
செங்கதி ரெனவே சீராய்
நகரத்தை விட்டு வந்த
நாங்களு மூரைச் சேர,
அகரத்தோ டாகா ரம்போல்
ஆடுமா டணுகி மேய்ந்து,
துகிரொத்தும், மணி,முத் தொத்தும்,
தொடர்ந்துவந் தடுத்த தாரே!

நீப்பதற் கின்றி நின்ற
நிலத்தில்நீ ரொன்றச் செய்து,
'தோப்பது, துரவி தெ'ன்று
துப்பாகத் தோற்று வித்துப்
பூப்பது பொருந்திக் காய்த்தும்,
'போதாதே' என்னும் நம்மைக்
காப்பதற் கெனத்தம் வாணாள்
கழிப்பதிம் மாடா டன்றோ?

சொலணாததி வாழ்வோ ராகச்
சுவைவைத்து நாவில் தம்மைக்
கொல்வித்து வாழ்வோ ராகக்
குடித்தன வுறுப்பாய்க் கொண்டு,
பல்வித்தும் முளைத்த புன்செய்ப்
பதவலைப் பால்செய் தீயும்
'செல்வத்துள் செல்வ' மென்னச்
சிறந்ததிவ் வாடும் மாடே!

பயிரெனப் பண்ணு தற்கும்
பாங்காக வுதவி பண்ணிச்
செயிரென வின்றிச் சேர்ந்த
செவிலியாய்ப் பேணத் தீம்பால்,
தயிரென, நெய்மோ ரென்னத்
தரும்பசு மாடா டின்றி
யுயிரென வோம்பும் வாழ்வில்
உவப்பொரு துளியுண் டாமோ?

நாவினுல் கெட்டோ ருண்டு;
நாட்டினை நாடா தாண்ட
கோவினுல் கெட்டோ ருண்டு;
கொள்கையில் லாது பாடும்
பாவினுல் கெட்டோ ருண்டு;
'பதவலைப் பாலாய்ப் பண்ணும்
ஆவினுல் கெட்டோ ருண்டெ'ன்
றகிலத்தில் பகர்ந்தா ருண்டோ?

ஆற்றுக்கால் கழனி, தோப்பென்
றமைந்திட விலையா ஞலும்,
ஊற்றுக்கால் படிகை, பள்ளம்
உள்ளவூர்ப் புறத்தைப் பார்த்தால்,
'ஏற்றுக்கால் துரவு தோட்டம்'
என்னுமா றேற்ற மெய்த,
மாற்றுக்கால் கோலிக் கொள்ள
மனிதர்கள் மறந்தார் போலும்!

மறிசெல்லும் வழிக ளெல்லாம்
மலர்ச்செடி கொடித்தேன் மாந்தி
வெறிசொல்லி ஞிமிறி சைக்கும்
விளைநில மமைந்தும், வீணய்க்
குறிசொல்லு வோர், கோ டங்கிக்
குருமார்கள் கோவில் கொண்டு,
நெறிசொல்லு வோர்நே ராத
நிலைமைஎன் பட்ட தங்கே!

நலங்காண வேண்டு மென்னும்
நப்பாசை நாட்டத் தில்நாம்
குலங்காண வேண்டா துள்ள
கூலியாட் களையும் கூட்டி,
நிலங்காண நீர்செய் வித்து
நேர்ந்தொன்றிக் கலந்து வாழ்ந்து
பலங்கான வேண்டும், நாரே
பாங்கான கயிரு மாறே!

# அறிமுகம்

ஊருற்ற குதிரை யுள்ளம்
உவப்புற்று நிற்க வூரார்,
'யாருற்ற' தென்றாங் குற்றார்க்
கறிமுகப் படுத்தி நண்பன்:
'பாருற்ற பருதி சாயப்
பரவும்பா ழிருட்டில், பைய
நேருற்ற பிறைபோல் நேயர்
நெஞ்சுற்ற கவிஞர்,' கண்டீர்!

'பாவலன் பாடா துள்ள
பாட்டும்பாழ்; பாட்டைப் பன்னி
நாவலன் நவிலா துள்ள
நயமும்பாழ்; நலமாய் வாய்த்தும்
காவலன் காவா துள்ள
காடும்பாழ்; கட்டி யோட்டும்
ஏவலன் இல்லா துள்ள
ஏரும்பா' ழென்றான், நண்பன்.

வலையோட்டி, வனத்தில் வாழும்
வனப்பான புள்ளி மேவும்
கலையீட்டி வரக்கண் டார்ப்போல்
களிப்புக்கோர் கரைகா ணாதே,
'நிலையூட்டி நெகிழ்ந்த நெஞ்சை
நேர்செய்யும் கவிஞ' ரென்று
தலையாட்டி, வியப்புற் றோராய்த்
தம்மைத்தாம் மறப்போ ரானார்!

''பாய்நாடிப் படுக்கப் பண்ணிப்
பலமெலாம் பறித்துக் கொள்ளும்
நோய்நாடி மருந்தும் தந்து
நோன்மைய ராக்க நோற்கும்
தாய்நாடி வரல்போல் வந்து
தமிழூட்டும் கவிஞர் தம்சொல்
வாய்நாடிப் பருக வாரீர்
வைகறை வண்டா'' யென்றான்.

உழுதுவந் துற்ற மாட்டின்
உடல்நலி வுணர்ந்தோம் பாதே
பழுதுவந் துற்ற தோர்ந்தோர்
பணிந்திடப் பரிந்து பார்த்துத்
தொழுதுவந் துற்ற தோழன்,
'துலங்கும்வான் மதியாய்த் தோன்றும்
பொழுதுவந் துற்ற தல்லிப்
பூவெதிர் புகநா' மென்றான்.

வண்டுவிட் டிறங்காக் கூந்தல்
வளர்பிறை நுதலி, வாழைத்
தண்டுவிட் டிறங்காப் பூப்போல்
தன்கையைக் கூப்பித் தாங்கும்
திண்டுவிட் டிறங்காப் பாயைத்
திண்ணையில் விரித்தாள் தேசைக்
கண்டுவிட் ''டறங்காத் துன்னில்
கமலமாய்க் கமழ்க!'' வென்றேன்.

மிஞ்சிற்று, மாவில் மேவும்
மென்தளிர் தனையே மேனி!
விஞ்சிற்று, வெருவ வென்ற
வில்லையே புருவம்; விண்ணின்
மஞ்சுற்று மகிழும் கான்வாழ்
மயிலன்னாள் மதர்வி ழிக்கன்
றஞ்சிற்று போலு மம்மா!
அரவிந்த மலர்கள் தாமே!

''நூலில்லை யெனவே நோற்றோர்
நுவலினும், நொய்தற் கூறில்
மாலில்லை; மறுகச் செய்யும்
மாற்றுந்தாய் மனமு மில்லை;
'காலில்லை' யென்பார் கூடக்
கதியில்லோ ராகா தென்றும்
'பாலில்லை' யென்ற தட்டுப்
பசியில்லா துணுமு'' ரென்றாள்.

''தாழையும், கமுகும் தங்கித்
தரித்திடா; தகைமை வாய்ந்த
வாழையும் வளரா தேனும்,
வஞ்சம்பொய் வழங்கா வூரில்,
'ஏழையும் கோழை யும்மற்
றில்லை'யென் றெண்ணு வோன்நான்;
ஊழையும் உப்பக் கங்கண்
டுழைப்பவ ருயர்வா'' ரென்றேன்.

வயலாரும் வாழ்வி னோர்தாம்
வரவறி யாவூர் — வாவிக்
கயலாரும் கண்ணாள் கண்ணில்
கண்டது கருணை யாகிக்
குயிலாரும் குரலாள் கூற்றில்
கொண்டது குடிமை யாகி, —
அயலாரும் அயலா ராயும்,
அதுஎன்தா யகமா யிற்றே!

# கல்ப்பாடம்

பட்டியைப் பார்த்து நண்பன்,
பரிவாகப் பசுவைப் பார்த்துக்
கட்டிய கயிற்றைப் பார்த்துக்
காடியைப் பார்த்துக் கன்றுக்
குட்டியைப் பார்த்து விட்டுக்
குந்திப்பால் கறந்து வீட்டை
எட்டியே பார்த்து வைத்தான்,
எழிலணங் கெடுத்துப் பார்த்தாள்!

பாற்பட்ட கையைப் பையப்
பதமான வெந்நீர் கொண்டு
காற்பட்ட கறையும் நீங்கக்
கழுவினன்; கடலைக் காட்டில்
ஏற்பட்ட எதுவோ வொன்றை
ஏந்திழை யியம்பக் கேட்டான்;
மேற்பட்டென் னருகில் வந்து
மெதுவாக அமர்ந்தான் மேலோன்!

விளையாடி விட்டு வந்த
விடலை, தன்வேட்கை நீக்க
வளையாடுங் கையில் தாயார்,
வருக்கையி னினிய வாசச்
சுளையோடு நிற்கக் கண்டு
சுவைத்திட விழைவ தொப்பக்
களையோடு முகங்காண் பித்தான்,
காலத்தைக் கணித்த நண்பன்!

''பல்வகை யாய்நா மின்று
பாரிலே படைக்கும் செல்வம்,
நல்வகை யாகத் துய்க்க
நமக்காக வுள்ள தேனும்
கொல்வகைக் கேது வாகும்
கூடார்கண் கூடிக் கொண்டால்!
சொல்வகைக் கல்விச் செல்வம்
சோகச்சா வதைக்கா தே!

ஒப்புர வொன்ற நின்றென்
னுளங்கொளற் குரிய தோழா!
துப்பொரு துளியில் லோராய்த்
தொல்லைக்கா ளாஞேம்; தோன்றும்
'எப்பொரு ளொத்தன் மைத்தா
யிருப்பினும் இதய மொன்றி
அப்பொரு ளாராய்ந் துண்மை
யறிகெ'னு மறிவோ ராதே!

'பிறப்பிப்பான், நம்மைப் பேணிப்
பெருகவே காப்பான்; பின்னர்
இறப்பிப்பா னிறைவ' னென்றே,
இடைவிடா தினிக்கப் பேசிச்
சிறப்பிப்பான்; செம்மைப் பட்ட
சிந்தனைத் திறன்தே ராது
மறப்பிப்பா னவஞல் தான்நாம்
மாண்பிலா மனித ராஞேம்!

'இம்மையே மறுமை யே'என்
றிருந்துவாழ்ந் தியங்கற் கேற்பத்
தம்மையே தாமீன் றுய்யும்
தன்மைத்தாய், — மக்கட் கெல்லாம்,
அம்மைமற் றப்பன் மூலம்
ஆவதை யறியார், நம்மைப்
பொம்மையைப் போற்ற வைத்துப்
புத்தியைப் புதைக்கச் செய்தார்!

ஆயிரங் காலந் தொட்டோ
ரவரையே, அழியா தின்றும்
மாயிரு ஞாலத் தின்மேல்
மன்னிவாழ் வதனை யாய்ந்தால்,
தாயருந் தந்தை யும்தாம்
தம்மக்க ளாக மாறிப்
போயிருந் துய்த லென்ருய்ப்
புதிர்விடு படுவ தன்ருே?

இரவென்றும், பகலென் றும், நல்
லிளங்காலை மாலை யென்றும்,
வரவொன்றிச் செலவு மொன்றி
வைகலாய்ச் செலும்வாழ் நாளில்,
புரவொன்றப் புரியும் வேலை
புலனொன்றி முடித்தால், நூலைப்
பரிவொன்றிக் கற்ருய்ந் தன்றிப்
பண்பட்டோ ராகோம் நாமே!

போதற்ற போதும், புக்க
புலன்விட்டுப் போகா வாறு,
கோதற்ற கொள்கை கூறிக்
குவலயந் தனையுய் விக்கும்
தீதற்ற குறளில் கூடத்
தெய்வத்தைப் புகுத்தி விட்டார்,
சூதுற்ற வுள்ளங் கொண்ட
சுயநலச் சூழ்ச்சி யாளர்!

நிறைவிணக் கம்செய் யும்நம்
நிகரிலாக் குறளில் நின்ற
'இறைவணக் கம்'மென் கின்ற
இனியநற் பெயரை நீக்கி,
முறைவணக் கம்போய் முற்றும்
மூகராய் மாற்ற நம்மை,
மறைவணக் கம்செய் வோன்தான்
மறுபெய ரிட்டா னன்றே!

கழுத்தினில் தாலி யென்று
கட்டினேன் கணவ னாமா
'றெழுத்தினை யறிவித் தோன்மற்
றிறைவ'னென் பதனை யெற்றிப்
பழத்தினைத் தின்று தோலைப்
பாமரர்க் கீவோன் பைய,
அழித்தனன்; கடவுள் வாழ்த்தென்
றழியாதங் கெழுதி னனே!

'பொறிவாயி லைந்த வித்தான்,
பொய்தீர்நல் லொழுக்க மென்னும்
நெறிவாயில் நின்றார், நின்று
நீடுவாழ் வார்க' ளென்றிங்
கறிவாயில் திறக்கும் நல்லா
சிரியனைக் கடவுள் பக்தித்
தறிவாயில் பிணைத்தான், கற்போர்
தடம்மாறித் தவிக்கு மாறே!

'தேனக மெனத்தித் திக்கும்
திருக்குறள் திருத்தம் தேரா
தூனக மாகி மக்கள்
உடலினைச் சுமப்பா' ரென்று
நானகம் நொந்து தீர்த்தேன்
நன்முத்துப் போன்று கண்ணீர்,
கானகச் சுனைக ளாகிக்
கடலுற்றுக் கலங்கு மாறே!

நூலில்கண் நுழைத்தா ராய்ந்து
நுனியடி நோக்கார்; நோகக்
காலில்கல் தட்டக் கண்டும்
கடுத்தெடுத் தெறியார்; கண்முன்
பாலில்புல் தூசு வீழ்ந்தும்
பார்த்ததை யகற்றார்; 'பச்சை
யாலில்கண் வளரா நிற்கும்
ஆண்டவன் செய'லென் பாரே!

'ஏடென இருப்ப தெல்லாம்
இல்லாத கடவு ளேடாய்,
வீடென இருப்ப தெல்லாம்
வெளிச்சமே யின்றி, வேறு
கேடென இருப்ப தெல்லாம்
கிளையாகி விட்ட' தென்றே
நாடென இருப்ப தெல்லாம்
நகைப்பதும் நம்மக்கண் டன்றோ?

காசினைக் கவரக் கல்லில்
கடவுளைப் படைத்த கையர்,
யோசனை புரிந்து மெய்,பொய்
யுணரவு மொப்பா ராகிப்
பூசனைப் புழுகுக் கொத்த
பொய்க்கதை புனைந்து, கல்வித்
தேசினை மறைத்தார், தேசம்
திசைகெட்டுத் தேம்பு மாறே!

'தாமிர மதனைச் சாமி
தங்கமாய் மாற்று மென்று
சாமர மிரட்டி நாளும்
சாமவே தங்கள் பாடி,
'மாமர மதனை வெட்டி
மருதினை நட்டா' ரென்னப்
பாமரம் பெருக்கி நம்மைப்
பணிவித்துப் பாழ்செய் தாரே!

பூவெனப் பூத்துப் பூங்கா
புதுமணம் பரப்பும் போது
மாவினில் குயிலும் பாடி
மன்னுயிர் மகிழ்வித் தாங்கு
நாவினில் சத்தி யத்தை
நவிலநாம் பயின்றி ருந்தால்
கோவிலே உடலாய்த் தெய்வம்
குடிகொண்ட உளமாம் ஊரே!

வழுத்துறு குடிமக் கள்,தம்
வாழ்வுக்கா யுழைத்து வைகல்
கழுத்தறுப் புக்குள் ளாகிக்
கம்பலை கண்ணீர் தேக்கி,—
யழுத்துறு மவல மெல்லாம்
அகற்றிட வேண்டி னுண்மை
தொழத்தகும் தெய்வ மாகித்
துலங்கிட வேண்டு'' மென்றேன்.

எண்ணம்சொல் லிவ்வா றன்றென்
னிதயத்தி லிருந்து சிந்தப்
'புண்ணிற்கு மருந்திஃ' தென்றே
புகழ்ந்துகொண் டுற்றார் போக,
'மண்ணைக்கொண் டுள்ள மக்கள்
மயக்கற்ற' தென்றான், நண்பன்.
கண்ணுங்கள் ளுண்ட வண்டாய்க்
'கலப்படங் கண்டே' னென்றே!

பூவிதம் செய்யும், பூத்துப்
புலன்மகிழ் விக்கும் போது!
பாவிதம் செய்யும், பண்பு
படிந்துரு வகமாம் போது!
நாவிதம் செய்யும், நற்சொல்
நயம்பட நவிலும் போது!
சீவிதம் செயநான் சென்று
செப்பிய திஃதப் போதே!

# விருந்து

கம்பலை கரைந்து கட்டுக்
கடைவாயில் காலி யாகச்
செம்பில்நீர், செல்விக் குஞ்சைச்
சேர்த்திடை நுடங்கச் சீர்சால்
கொம்பெனக் கொண்டு, கொம்பில்
குயிலெனும் குரலில் கோதை,
'கும்பலா லுணவும் கொள்ளக்
கூடாத குடிலிஃ' தென்றாள்.

'ஈ'யென்று கேட்பார்க் 'கில்லை'
யென்றுதா னில்லத் தீச்சம்
பாயொன்ற இலையும் போட்டுப்
பருகநீர் வைத்துப் பாங்காய்,
வேயொன்று தோளாள், நெஞ்சில்
விருப்பமு மரும்பி நிற்க,
ஆயன்று மோசி யோடும்
அமர்ந்தவா ராளே மங்கே!

எனைவிட்டென் மனைவி, மக்கள்
ஏங்கியே யிருக்க, இங்கென்
மனைவிட்டு வந்து வாய்த்த
மாண்டகு விருந்தில்,— நண்பன்
தனைவிட்டன் றெனக்கு மட்டும்
தகுமென இட்டாள், தங்கப்
பனைவட்டு நையத் தட்டிப்
பசுவின்நெய் கலந்து வந்தே!

'விருந்தென வந்தோர் குந்தி
விருப்பமாய் முதலி லுண்ணப்
பொருந்துவ தினிப்பே' யென்று
புரிபவர் தனைநான் போற்றி
யருந்தினே ருர்வத் தோடும்;
அணங்கவ ளெடுத்தன் போடு
'கருந்தினைச் சோறெ'ன் றிட்டாள்,
கவின்முல்லை கலன்கண் டாங்கே!

பதரையே நெல்போல் பண்ணிப்
பணம்பண்ணும் பாவிக் கேற்பப்
புதிரையே சொல்போல் போட்டுப்
புதுக்கவி புனையேன்; பூவல்
முதிரையே குழம்பு; முன்றில்
முருங்கையே பொரியல்; முன்னாள்
மதுரையே தந்த சங்கம்
மலர்ந்தநூல் சுவையுற் றற்றே!

மாறுகாய்ந் துரிய மண்ணில்
மணியாக விளைவித் துத்தம்
வீறுகா யாது வைத்தே
வெளியாரும் விரும்பு மாறு,
பேறுகா யாது பேணும்
பெண்மணி, பெட்பா யிட்ட
ஆறுகாய்த் தயிர்ச்சோற் றுக்கிவ்
வுலகிலோ ருவமை யுண்டோ?

பற்பலர் பரிந்து பார்த்துப்
பரவசப் படவைக் கின்ற
வெற்பலர் சுனையிற் பூத்த
விரைமலர்க் குவளைக் கண்ணாள்,
'பொற்பலர் பொழுதில், வந்து
பொருந்திய விருந்தில்' தென்னக்
கற்பலர் கவனப் பாங்கில்
கைகமழ்ந் திட்ட தன்றே!

'நம்பினோர் தமைத்தாம் நம்பி
நயந்தோரை வியந்து, நாளைத்
தம்பினோர் தமக்குத் தாமே
தகுந்தமேற் கோள்தா' னென்னும்
தும்பிநேர் விழிமென் தோகை
தொடர்ந்து,கை வாய்து லக்கச்
செம்புநீர் கொண்டு நின்றாள்,
சிறியதோர் துண்டும் சேர்த்தே!

# சிந்தனை

'இசைபாடித் துதிசெய் வோரா
விழிந்தது தமிழ்நா' டென்று
வசைபாடும் வகையாய் வந்த
வஞ்சனை வழியை மாற்றற்
கசைபோடும் பசுவா நானங்
கமைதியா யமர்ந்தே னைந்து
பசைபோடும் பதமாய்ப் பற்றும்
பைந்தமிழ் பாட்டாக் கற்கே!

'பரப்பிடும் பயன்ப டாத
பக்திப்பொய் பரிந்து நீக்கத்
தரப்படும் மருந்திஃ' தென்னத்
தரமான கவிதை யாத்துச்
சிரிப்புடன் மக்கள் சேர்ந்து
செழிப்பாக வாழு மாறாய்ச்
சரிப்படுத் திடவும் கூடச்
சாத்திய மெனச்சங் கித்தேன்.

அழகிய லமையா தேனும்
அறிவிய லமைத்திவ் வூரில்,
பழகிய பண்பால் நண்பன்
பைந்தமிழ் பரப்பற் கொப்பின்,
'எழுகுயி லிசைக்கொத் தேற்ப
எழில்மயி லாடிற்' றென்னும்
ஒழுகிய லாமென் றுள்ளி
யுவகையோ ரூற்றா யிற்றே!

அயலாகா தருமை நண்பன்,
அருந்தமிழ்ப் பயிர்ச்செய் யாயின்,
கயலாகி மிளிருங் கண்ணாள்
கதிரிடுங் களமாய்க் — காணும்
புயலாகிப் பொலிந்தென் னுள்ளம்
பொன்னாகி முழங்கி மின்னி,
வயலாக வூர்க—ளென்வாய்
வானாகிப் பொழிந்தி டாதோ?

'ஆதார' மெனஇன் றென்முன்
அகங்களித் தமரும் அன்பர்
காதாரக் — 'கவின்மி குந்த
கமலமென் மலர்கள் கண்டு
போதார மதுக ரம்போய்ப்
புகுந்திசை பொழிந்த' தென்னத்
தாதாரும் தமிழைப் பாடித்
தளைதவிர்த் திடச்செய் வேனே?

அளிமனங் குளிரச் செய்த
அரவிந்த மனையோர்க் காய், வான்
வெளிமனங் குளிர்ந்து பெய்த
விடுநிலத் திளம்புல் லார்ந்து
களிமனங் கிளரக் காடிக்
கன்றினைக் காணு மாவின்
வளமென வள்ளங் கொள்ள
வழங்கும்பால் மடியா வேனே?

'முத்தினை வித்திற்' றென்ன,
முகிழ்த்துவிண் மீன்கள் மொய்க்க,
மத்திறுற் கடைந்தெ டுத்த
மதுரித மாட்டு வெண்ணெய்
ஒத்தினி துதித்துத் திங்கள்
உலகிரு ளகற்ற லொத்திங்
கித்தின மிவர்த முள்ளத்
திருளறற் கிலங்கு வேனே!

பசித்திடும் பாவல் லார்க்குப்
பாலொடு பழந்தந் தாரப்
புசித்திடப் புரிந்து வந்த
புலனெறித் தமிழ கத்தே,
வசித்திடு மூர்கள் தோறும்
வறுமையை வளர்த்து வாழ்வை
நசித்திடச் செய்யும் பக்தி
நஞ்செடுத் தெறிய நானே!

# வியாபாரம்

கூட்டினி லிருந்து கூவிக்
குறிப்பாகப் பறந்து சென்று
காட்டினி லிரையைக் கொண்டு
கடுகித்தாய்ப் புறவை வந்தஃ
தூட்டவாய் திறக்கும் குஞ்சா
யுவப்பான வுணர்வி லுண்ட
வீட்டினைப் பாங்கு செய்தவ்
வித்தகி வீற்றாள், வந்தே!

சுவையான வுணவுண் பித்தென்
சோர்வினைத் தீர்த்தோர் சொக்கிச்
செவியான தினிக்கத் தேக்கிச்
சிந்தையும் வாங்கி வைக்கக்
கவியேன மெனப்பெய் தீவேன்,
கனிச்சாறாய்க் கருத்தை யின்று;
புவியான துயர்த்திப் போற்றும்
புகழெய்திப் பொலியு மாறே!

''எதிர்காலம் பற்றி யெண்ணின்
இயங்குதற் கியலா வாறாய்ப்
புதிர்கோலம் போலப் போந்தெம்.
புலனையச் சுறுத்து தையா!
கதிர்கால மறிந்து தொய்து
களங்கண்டு கைக்கா சாக்கின்
உதிர்கோலச் சிதர்த்தேங் காயா
யொழியுதின்'' றென்றான், நண்பன்

''எந்திர மயமா யெல்லாம்
இயங்கிடும் கால கட்டம்;
தொந்திர வேக போகத்
தொழில்முறை தனிலே தோன்றி
வந்தது வணிக ராட்சி!
வறிஞர்கள், வயிறு காய்ந்து
சிந்துங்கண் ணீரில், செல்வம்
சேர்த்தவர் குளிப்ப தின்றே!

பண்ணையில் விளைந்த பண்டம்
பாதிக்குக் குறைத்து வாங்கித்
திண்ணையில் குந்தி விற்கும்
திருவாளர், தேசம் தேம்பக்
கண்ணிய மென்ப தைக்கை
கழுவினே ராகிக் காசை
யெண்ணுவ தொன்றே வாழ்வென்
றிறுமாந்தோ ராவ தின்றே!

விலைவாசி விடம்போ லேற்றி
வியாபாரி காசு சேர்க்க,
உலை—வாசி காணு தோராய்
உழைப்பாள ருள்ளம் குன்ற
'அலைவாசி' யெனவே மக்கள்
அலைந்திட' அகம்நோ காது
சிலைவாசி காத்தி ருப்பான்,
சேர்ந்தோர்தம் கைக்கா சுக்கே!

வல்லையே வழக்கா ருக்கி
வாணிகம் செய்து வாழ்ந்தே,
'இல்லையே' யென்னும் சொல்லில்
இருப்பினை யிருத்தி வைத்துத்
தொல்லையே யின்றித் துய்த்துத்
தோற்றத்தில் பெரியோ ராஞேர்,
ஒல்லையே யூரெவ் வொன்ரு
யுறவுகொள் வதையோ ராரே?

கையிலே, 'காலம் காட்டி'
கட்டியும் கருதான் காலம்!
பொய்யிலே பொழுதும் போக்கிப்
பொதுமகள்,—மதுவும் போற்றி,
மெய்யிலே மயக்க மெய்தி
மெத்தையில் வாந்தி செய்யும்
பையலைப் பெற்ற செல்வன்,
படுந்துயர்க் களவொன் றுண்டோ?

தேசுசேர்த் தறியார்; தெள்ளத்
தெரிந்தோரைச் சேரார்; தீனர்
ஆசிசேர்த் தாரு மாகார்;
ஆசையின் வழியில் சென்று
மாசுசேர்த் திருந்து வாழும்
மனிதர், தம் மடிக ணக்கும்
காசுசேர்த் திருந்து மென்னும்,
கடைத்தேற்ற மதுகாட் டாதே!

ஓதொன்றி யுளத்தை யோம்பும்
ஒண்தமிழ் புலவன் கைநூல்
சூதொன்றிச் சுகத்தில் சொக்கும்
சோம்பேறி கொண்ட தொப்பக்
கோதின்றி யுழுது வித்தும்
குடிமகன் நிலத்தைக் கோரி,
வாதொன்றி வணிகன் வாங்க
வயலில்புல் வளர்வ தின்றே!

விலையேற்றி நியதி தப்பி
வியாபாரி வெறுப்பை யூட்டின்
உலையேற்றும் வகையைக் காணா
துழைப்பவ ருள்ளம் பொங்கி
'அலையேற்றிக் கரையைக் கொல்லும்
ஆழ்கட' லெனவே மாறி
மலையேற்றி விடுவர், 'போய்வாழ்
மாவொடு மிருந்தங்' கென்றே.

புறமெலாம் போற்று கின்ற
புகழதூம் புதைந்து போக,
அறமெலாம் ஆற்று கின்ற
அருளதூம் அடக்க மாக,
மறமெலாம் மாற்று கின்ற
மாண்பதூம் மறைந்து, மானத்
திறமெலாம் தேற்ற மற்றுத்
தெளிவதூம் திகைப்ப தின்றே!

பொம்மையை வைத்துப் போற்றிப்
பொழுதைவீண் செய்தி டாது
செம்மையில் சிந்தை வைத்துச்
செய்வது திருந்தச் செய்து,
தம்மைத்தா மாண்டு கொள்ளும்
தரமுள்ள தக்கார்க் கன்றி
இம்மையே, மறுமை யே—மற்
றெதுவொன்று மெய்தி டாதே!

ஆறுகண் டறிவ றிந்தாங்
கடங்கிவாழ்ந் தமைதி காணார்;
ஊறுகண் டேக்க முற்றுங்
குறுவதை யெதிர்த்து வெல்லார்;
பேறுகண் டும்பே றில்லார்,—
பிறந்துண்டிங் கிருந்தி றந்து
நீறுகண் டாரிஃ தன்றேல்,
நிலங்கண்டு புதைந்தா ரன்றே!

# விளைவு

கற்றது கருதார்; கண்ணில்
காண்பதே காட்சி யாய்மெய்ப்
பற்றுத லற்றார்; பையில்
பணம்பற்றிப் பதுக்கிக் கட்சிப்
புற்றதில் புகுவார்; ஆட்சிப்
புலியாகிப் புறத்தில் பாய்வா
ருற்றதி லுணவுப் பஞ்சம்
உறுவது முரிமைப் போரே!

கொடைமுறை குன்றிச் செல்வம்
கொடியவர் கையில் கூடத்
தடைமுறை தவிர்த்து விட்டுத்
தருமங்கள் தலைகீ ழாக்கி,
நடைமுறை நாடா தாட்சி
நலங்கெடச் செய்யின், நண்பா!
கடைமுறை காண்பர், உண்மைக்
கலைமுறை காணா தாரே!

எண்ணவே, இன்பம் தேக்கி
இதயத்தின் உணர்வை யள்ளும்
வண்ணமும், வனப்பும் வாய்த்து
வான்மிசை நிலவு குத்துக்
கண்ணினுக் கொளிய ளிக்கும்
கவின்மதி தேய்ந்த தென்னத்
தண்ணிய மதுரைச் சங்கத்
தமிழ்தேயத் தருமந் தேய்க்கும்,

மாட்சியில் லாத மட்ட
மனிதர்பே ராசை யால்மற்
றாட்சியை மாற்றித் தீரும்
அவசியம் நேரும்; அந்தக்
காட்சியும் உலகம் கண்டு
களித்திடும்; அதற்கும் காலம்
நீட்சியி லில்லை; சால
நெருங்கிக்கொண் டுளது, நேர்ந்தே!

தனதெனக் கொண்ட தெல்லாம்
தமிழனாத் தான்வே றல்லாப்
புனிதமென் றுணரப் பெற்ற
புலவனும புகன்ரு னன்று:
'மனமது செம்மை யானல்
மந்திரம் வேண்டா' மென்று
கனிதனைப் பிழிந்த சாற்றில்
கற்கண்டு கரைத்தாங்'' கென்றேன்.

''பகல்செய வந்தும், பையப்
பருதிவா னவனும் பாரை
யிகல்செயு மிரவுக் கீந்தாங்
கிரக்கமற் றேகு வான்; நீர்
புகல்செய வந்த புத்தேள்!
போகாம லிருந்து, போதம்
மிகல்செய வேண்டு'' மென்றே
மிழற்றினள், மேலோன் தேவி!

''மன்றள்ளி மகிழ்ந்து மாந்தும்
மாண்தரு தமிழ்க்கோட் பாட்டை
யின்றள்ளி யருந்தி னேன்நா''
னென்றுரைத் தெழுந்த நண்பன்,
கன்றுள்ளிக் கரைந்த அன்புக்
காராவின் காடிக் குள்புல்
சென்றள்ளி யிட்டு வந்து
செலவுபெற் றுறங்கச் சென்ருன்.

துரவுகண் டுவந்த வாழைத்
தூறெனத் துணைவி யோடென்
வரவுகண் டுவந்த வள்ளல்
வாழ்வினை வாழ்த்தி, வாய்த்த
புரவுகண் டுவந்த நானும்
போதுற வுறங்கப் போனேன்,
இரவுகண் டுவந்து ழைத்தோ
ரின்பங்கண் டுறங்கு மாறே!

# விடியல்

'சோலையின் சோர்வு நீங்கச்
சுரும்பிசை பொழிக' வென்றோ,
மாலையில் குந்தி யோய்ந்த
மயிலாடி மகிழ்க வென்றோ,
வேலையை விரும்பிக் கொண்ட
விவசாயி விழிக்க வென்றோ,—
காலையைக் கண்டான், ஞாலம்
கவினுறக் கதிரோன் பூத்தே!

உற்றநல் லுடைமை யோரா
துறவோரா துளங்குன் றோதே,
கற்றநற் கவிதைக் காகக்
காலத்தைக் கழிக்கு மென்னைச்
சுற்றமாய்ச் சூழக் கொண்டான்
சுகமாக உறையும் சூழல்
மற்றுமோர் நந்நா ளூற்று
மகிழ்விக்க மலர்ந்த தன்றே!

படுக்கைவிட் டெழுந்து பாங்காய்ப்
பாரெழில் பருகுங் கால்நான்,
குடிக்கத்தீம் பாலும், வாயைக்
கொப்புளித் திடவெந் நீரோ
டடுக்குங்கா லன்னை யாய்க்கொண்
டலம்புங்கா லுடன்பி றப்பாய்,
மடுக்குங்கால் மகளு மாயம்
மாண்பினள் மதிமா றிற்றே!

அகத்தினி லன்ப ரும்பும்
அணங்கினை யகத்தில் வைத்தோன்
முகத்தினைக் காணு தென்கண்
முற்றத்தை யுற்ற தோர்ந்து,
சுகத்தினில் சொக்கிச் சோராச்
சுடர்க்கொடி, சுதந்தி ரத்தைச்
சகத்தினி லுள்ளோர்க் கெல்லாம்
சமன்செய்வாள் சாற்றும் முன்னே;

விடியவே எழுந்து நண்பன்
வெளியில்போய் விட்ட செய்தி,
குடியினுக் குறுப்பாய்க் கொண்ட
குதிரையைக் காணு தோர்ந்தேன்;
படியினில் பலரும் சொந்தப்
பணியினைப் பார்ப்பா ரன்றோ?
நொடியினி லதையந் நங்கை
நுவன்றனள், நோன்பா மாறே:

''உளத்தொளி யின்றி யோரா
துறைகிற எம்ம னோர்க்குக்
குளத்தொளி கொண்டு பூத்த
கோகனம் கொள்வண் டாக்கிக்
களத்தொளிர் காட்சி யாகக்
கவிதையி லமைத்துக் காண
அளித்தொளி செய்யு முங்கட்
காவன செயச்சென் றுள்ளார்!

வண்டினை யழைத்துத் தண்தேன்
வழங்கியே கமலங் காக்கும்;
தண்டினிற் கமலந் தன்னைத்
தயைகூர்ந்து தண்ணீர் காக்கும்;
கொண்டதண் ணீரைக் காக்கும்
குளமெனக் குடிமக் கள்யாம்
கண்டநற் கவிஞ ரும்மைக்
காப்பதும் கடனு'' மென்றாள்.

''கோரையின் குனிவை நீக்கிக்
குச்சியாய் நிறுத்தி னோர்யார்?
பாரையார் பண்ப டுத்திப்
பயனுறச் செய்தோர்? பார்த்திவ்
வூரையார் திருத்தி னோர்? நா
ணுணரநீ யுரையென் றேன''க்
காரையார் குழலாய் வைத்தோர்
கயற்கண்ணிக் கெனக்கண் ணுற்றே!

அடையிலா அரவிந் தத்தில்
அமைந்தலர் குவளை யுண்கண்
இடையிலா மடமா னின்புற்
றியம்பினு ளினிய மாற்றம்:
''தடையிலா தாழ்ந்தா ராய்ந்து
தன்மானத் தமிழர்க் காக
விடையிலாப் புதிர்க ளெல்லாம்
விடுவிக்கும் விதியா மையா!

'''நேயக' மெனவே நாங்கள்
நொந்துகொண் டிருந்த போதே,
'சேயக' மெனவே வந்து
சேர்ந்தநும் 'கவிஞன்' செவ்வித்
'தாயக' மெனவே, தந்து
தலைதனை நிமிர்த்தத் தாங்கும்
நாயக' மெனவே நல்கும்
நல்லதோர் 'அறிஞன்,'' என்றாள்.

இச்சொல்செந் தேனுய்க் காதை
இனிப்பிக்க இறும்பூ துற்றேன்;
'பச்சிளங் குழவி, பையப்
படிநடந் தன்ன பாட்டாய்
அச்சினி லேற்ற, வந்தே
அருவியூர்ந் தாறுற் றாங்கே
மெச்சிடப் பட்ட தோயிம்
மேலோர்கண் சேர்ந்திங்' கென்றேன்!

'''புவிச்செல்வ மனைத்தும்,—போற்றிப்
புகழ்ந்திட வுள்ள செல்வம்
செவிச்செல்வ' மெனவே செப்பும்
சிறந்தோர்சொல் செவியில் கொண்டேன்
'தவச்செல்வ' மெனவந் தென்னைத்
தரித்தவர் தகவாய்த் தந்த
கவிச்செல்வ மானீர்! தங்கள்
கருத்தூரில் கமழ்வ'' தென்றாள்.

'''எல்லையே யின்றி நின்றுங்
கிதயத்தைப் பிழிந்த' தென்னத்
தொல்லையே தோன்று மேனும்,
'துணிவொன்றித் தொடர்ந்து நாளும்
சொல்லையும் சுவையாய்ச் சொல்லிச்
சுயமாய்நற் செயலும் செய்து,
முல்லையாய்க் கமழ மூண்டு
முயலுக!' என்பீர் நீரே.

வேறுசொல் வேண்டா மேனும்,
வேற்றுமை தவிர்த்தல் வேண்டி
மாறுசொல் லாமற் குந்தி
மன்றுற்றுப் பேசி ஞேர்சொல்,
நூறுசொல் கேட்டுள் ளேம்யாம்!
நுணுகியா ராயின், நோற்கும்
பேறுசொல் லுஞ்சொ லுங்கள்
பெருஞ்சொல்தா'' னென்ருள், பேதை!

பொற்பினிற் பூவைப் போன்று
புலன்மகிழ் விப்பாள்; பூண்ட
கற்பினுக் கரசி! காசில்
கவிஞனைக் கனப்ப டுத்தும்
சொற்பொதி பொருளைச் சுட்டிச்
சுவையுறச் சொன்ன சொற்கள்,
அற்புத மெனினு மஃதென்
அகத்தினை யுறுத்திற் றன்றே!

''புறவெனப் பொழுது பூரா
பொருளையே நாடிப் போக்கும்
உறவினர்க் குள், நா 'ஞென்று
வொருகுயி' லெனுமா றுள்ளேன்;
அறிவென அறிந்த வொன்றை
அருந்தமிழ்க் கவிதை யாப்பேன்;
'செறுவெனத் தொறு'வெ னத்தான்
செப்பவொன் றின்றி'' யென்றேன்.

''பங்குனித் திங்கள் நாளில்
பருதியும் நடுவான் பண்ணி
வெங்கதிர் வீழ்த்தி, வேர்த்து
வேகவே செய்யும் வேளை,
தங்கிடும் தளிர்,பூ வேம்புத்
தண்ணிழல் குந்தின், கூவும்
இங்கிதக் குயிலா னீர்,நீர்
எம்மனோர்க் கினியிங் கையா!

குயிலாகி நீங்கள் கூவும்
குரலினுக் கொப்பக் குன்றின்
மயிலாகி நாங்க ளொன்றி
மன்றிடை மாண்பு மன்ன
வொயிலாக ஆடற் குள்ளேம்;
உவக்கவு முலகுண்'' டென்றுள்,
கயலாகி மிளிருங் கண்ணாள்
கனிவுகூர்ந் தெனைக்கண் ணுற்றே!

# சோலை

மடைப்பள்ளிக் குள்ளம் மாண்பு
மான்புக்கு மறைய வே, நான்
'அடைப்புள்'ளென் றமர்ந்து வீணாய்
அகமலுப் படையா தவ்வூ
ரிடைப்பள்ளிக் கருகி லுள்ள
எழில்மிகு மரசா லத்திப்
புடைப்பள்ளி கொண்ட சோலைப்
புறங்காணப் புலனெண் ணிற்றே!

உண்பன வுண்டு டுத்தி
யுறங்கியே கழிக்கும் வாழ்வு
வெண்பனி வீய்வுற் றென்ன
வீணாத லறிந்து, வேட்கைப்
பண்பினில் புகழைப் பற்றும்
பாவையைத் துணையாய்ப் பெற்ற
நண்பனைக் காணே னூரின்
நலங்காணச் சென்றேன் நானே!

பார்நல்ல தாயும், பாரில்
பாங்காகப் பயிர்செய் துண்ணும்
ஊர்நல்ல தாயும், ஊரில்
உள்ளதோர் தெருக்க ளெல்லாம் —
நேர்நல்ல தாயும், நேரா
நெஞ்சென — நெழிந்தி ருக்கும்;
ஏர்நல்ல தாயும், ஈர்க்கும்
எருதேறு மாறுற் றற்றே!

'கோவிலுண்' டென்றான், குந்தும்
குறிப்பொடங் கொருவன்; 'கொம்பில்
வாவலுண் டென்றான், வந்த'
வழியில்நின் றொருவன்; 'வண்ண
நாவலுண்' டென்றான், 'உண்டால்
நாவெலா மினிக்கு' மென்றான்,
ஆவலுண் டுளம சோகம்
ஆகிநான் நின்றே னங்கே!

'அருந்திடக் கனிக ளீயும்
அருமந்த நாவ லாய்நான்
இருந்திட வில்லையே,' என்றே
ஏக்கமென் னிதயத் துற்று
வருந்திட லானேன்; வந்தோர்
வசமாகித் தங்க நேர்ந்தால்
விருந்திட வீடு தோறும்
விரைந்தெதிர் கொள்வா ரூரில்!

வீடுகள், வீதி, கோவில்
வெளியெலாம் பார்த்து விட்டு,
மாடுகள், எருமை, யாடு,—
மயில், குயில் மகிழ்ந்து தங்கிச்
சூடுகொள் வெய்யோன் செய்யும்
சுகக்கேடு தடுத்தாட் கொள்ளும்
கோடுகள் கனி, காய், பிஞ்சைக்
கொண்டவூர்ச் சோலை புக்கேன்!

பழியென்றும், பாவ மென்றும்
பகுத்தாய்ந்து பாரா தோராய்,
'மொழியொன்று, முறையொன்' றென்ன
முதிர்வின்றி வாழும் மக்கள்
வழியொன்றி வந்திவ் வூரில்,
வயணமாய் வளர்ந்த சோலை—
விழியொன்றின், 'வாழ்வின் வெற்றி
விழ'வெனும் விருந்தா கும்மே!

'காலையே கவின்மி குந்த
காலங்கா' ணென்னும் காக்கை!
'வேலையே பூந்தேன் மாந்தி
வெறிகொள' லெனும்பொன் வண்டே!
பாலையே பண்ணைப் பற்றிப்
பாடும்பூங் குயில்; பாட் டார்ந்து,
'சோலையே தரும், சு வர்க்கச்
சுக'மெனச் சுகம்சொல் லிற்றே!

'பொறிவண்டு புன்னைப் பூவில்
புதுமது வருந்திப் போந்து,
'துறவுண்டு துணைவீ! யுன்றன்
தொடர்பினி வேண்டேட' னென்றே
முறிவுண்டு போகும் போது,
முருங்கையின் புதிய பூவில்
நறவுண்டு திரும்பிற்' றென்றே
நகைத்ததோர் நாத வண்டே!

பசுந்தழை வண்ண மேனிப்
பவளவாய்க் கிளிபார்த் தென்னைக்
கசிந்தழைத் 'தையா! காசில்
கவிஞனே! கற்றோர் நெஞ்சில்
நிசந்தழைத் திரங்கச் செய்க!
நெறிமுறை யின்றி யென்னை
நசிந்தழக் கூண்டி லிட்டே
நலிவித்தா' ரென்ற தங்கே!

'பூவது கமழ்ந்து நாளும்
புலன்மகிழ் வித்தற் குண்டு;
நாவிது நறவம் மாந்தி
நாதமாய்ப் பொழிதற் குண்டிங்
கீவது தவிர்க்கா தெம்மை
யென்றுங்கொண் டிருந்தி லங்கும்
காவிது கண்ணிற் கண்ட
கடவு'ளென் றதுகார் வண்டே!

'காக்கையென் றாலும் சற்றும்
கருணையே யில்லாக் காக்கை!
யாக்கையைக் கழுவுங் கால்தன்
னகங்கழு வாத காக்கை!
கூக்குர லிடவே கொத்திக்
குழந்தைகை முறுக்கைக் கொண்ட
போக்கிரிக் காக்கை' யென்றே
புறவுளம் புழுங்கிற் றங்கே!

'பண்பிணைப் பறக்கப் பண்ணிப்
பணத்திணைப் பிறக்க வைத்திங்
குண்பன வுண்டு வந்தாங்
குணர்வற வுறங்கி யோய்ந்து
விண்புக வேண்டு மென்னும்
வீணர்கள், மீண்டும் வந்திம்
மண்புக வேண்டா' மென்றே
மாங்குயில் பாடிற் றங்கே!

'துள்ளாட்ட மாடிக் கூடத்
தொடர்கின்ற குட்டி யோடிவ்
வெள்ளாட்டை மேய விட்ட
விருத்தன்போல் நம்மை மேய்த்திங்
குள்ளாட்டிக் காக்கும் தெய்வம்
உயர்வானிற் காணே' னென்றே
கள்ளீட்டிக் களித்த தும்பி
காமரம் பயின்ற திங்கே!

'மலரியைந் தருந்த வைத்த
மதுவெறித் தும்பி யின்சொல்
சிலரியைந் தேற்றுத் தங்கள்
சிந்தையிற் கொள்வா ரேனும்,
பலரியைந் தெதிர்த்துப் பாழும்
பயமூட்டிப் பகைப்பா' ரென்றே
அலறி'யந் தோ'வென் றங்கோ
ரத்தியி லணில்கத் திற்றே!

'உச்சிப்போ தாகும் போதிங்
குழவர்தந் துறுத்தும் மந்தை
மெச்சிப்போ மாருய் மேனி
மெலிவுதீர்த் திடும்ம ரக்காப்
பச்சைப்பாய்ப் பந்தர், பாரீர்!
பருதியின் பகைமைக் காற்ருேர்
நச்சிப்போந் திருப்பீ' ரென்ருேர்
நாகணம் நவின்ற தன்றே!

'பனி'யென, 'வெயிகாற் றின்பாற்
படுமழை, யிடி,மின், — னெல்லாம்
துனி'யென மனிதன் தூற்றத்
தொடங்குவான், துனியென் ஞேதே
'கனியென, மலர்,கா யென்னக்
காலங்கண் டளித்துக் காக்கும்
இனியன தருக்க ளே'யென்
றிசைத்தது, தேன்சிட் டொன்றே!

'கருமியாய்க் காக்கும் காசே
கண்'ணென எண்ணு வோன்,கண்
ணெருமையா யுறங்கும் காலுற்
றுளங்கொண்ட கனவஃ தொன்று:
தருமியாய்த் தயவு கூர்ந்து
தளர்ந்தாரைத் தாங்கி ஞன்போல்.
பெருமையா யிருந்தும், பேசப்
பேச்சற்ரு' ன்னநான் நின்றேன்.

ஆட்டுக்குத் தீனி வேண்டின்,
'அறுத்துக்கொள்' ளென்னும்; அங்கே
காட்டுக்கு வேலி வேண்டின்,
'கடிந்துகொள்' ளென்னும்; காக்கும்
வீட்டுக்கு விறகு வேண்டின்,
'வெட்டிக்கொள்' ளென்னும்; வீய்ந்த
பாட்டிக்குக் கட்டை வேண்டின்,
'படுத்திக்கொள்' ளெனுமிச் சோலை.

காத்துநான் கண்டு கொண்ட
கருத்தையே தானுங் கொண்டிங்
கேத்தியே குருவி, யென்னை
யிறக்கிற்றென் றேங்கி நிற்கக்
கூத்தெதிர் பார்த்தோ ரொப்பக்
கூடிநின் ரோர்க்குள் நின்று,
கோத்திணைத் திலங்கும் பூப்போல்
குறுநகை கொண்ட நண்பன்,

இரையாது, சிலையாய் நின்றங்
கெனைக்கொளற் கேற்பக் கூப்பும்
வரையாது வழங்கற் காமவ்
வள்ளல்செங் கைப்போ திற்குப்
புரையாது புரையா தம்மா!
புலவர்கள் புகழும் செந்தா
மரை,போது மறையும் போது
மலர்வொன்றிக் குவியும் போதே!

வானகித் தந்தை, வாய்த்த
வையகம் தாயாய், வாழ்க்கை
தானகித் தயைகூர்ந் துற்ற
தரமான மரக்கா வோரம்,
கோனகி வந்து நிற்போன்
குறுநகை கண்டு, ''நண்பா!
தேனகி யினிப்ப துன்றன்
திருமுகச் செவ்வி,'' யென்றேன்.

# உற்றதுரைத்தல்

''கறங்கிடு மருவி, கானல்
கசந்துபோய்க் கடுகி வந்தாங்
கிறங்கிட, 'நொய்ய' லென்றே
யிருகையா லேந்தும் தாய்போல்
பிறங்கிடுங் கரைசார்ந் துள்ள
பெருமைசால் தென மனூர்க்கின்
றுறங்கிடும் பொழுதே நீர், நா
னொருத்தன்போய் வந்தே'' னென்றான்.

''காகமுங் கரையும்; காமர்க்
களிவண்டு பாடும்; கானைக்
கூகையும் பொந்தில் குந்தும்;
குதித்தாடு மாட்டுக் குட்டி!
கோகிலம் குளுமை கூட்டிக்
கூவிடக் குறித்து வந்தென்
தேகமும் மறந்திக் காட்சி
தெவிட்டாது நுகர்ந்தே'' னென்றேன்.

''ஊர்ப்புற முங்க்க வந்திங்
குயர்மரக் காவில் புக்குக்
கூர்ப்புறக் கொண்ட செய்தி
குறிப்புற வுரைப்பீ ரையா!
வேர்ப்புறு மேனி நோக,
விதிர்ப்புறு காலும் நோக
ஏர்ப்புறந் திரிந்தோ ரோர்ந்தின்
றின்புறற்'' கென்றான், நண்பன்.

''களத்தினில் தூற்றிக் கண்ட
கம்பளந் திடுதல் போன்றும்,
குளத்தினில் நீர்மு கந்து
கொள்வது போன்று மன்றே!
வளத்தினி லாண்பெண் கூடி
வயப்படு மின்பம் போன்றென்
னுளத்தினி லுணர்வைச் சொல்லா
லுரைத்திட முடியா தின்றே!

காடெலாம் கடுகி மேய்ந்து
காப்பிடம் வந்து சேர்ந்த
மாடெலாம், இரையை மென்று
மறுமுறை செரிக்கத் தம்மெய்
யூடெலா முறைந்தச் சாரம்,
உணும்பாலா யுதவல் போல், நான்
பாடலாய் வடிப்பேன்; நீவிர்
பருகலாம், மறுநா'' ளென்றேன்.

'பழுத்துறு கனியின் சாறே?
பாகு, பால், தேனோ?' வென்றே
வழுத்துறும் வகைய தான
வெண்தமிழ்க் கவிதை யாத்திவ்
வெழுத்தறி வில்லார்க் கிங்கே
ஏமுறக் கூறற் கேற்ற, —
முழுத்துற வுற்றுய்ந் தோர்ந்த
முதல்தரக் கவிநா னன்றே!

'காய்வெட்டு வாழைத் தாறும்;
கனியாகப் பழுக்க விட்டே
ஒய்விட்டுத் தின்ன, நாளைக்
குங்களுக் களிப்பே' னென்று
தாய்விட்ட மாற்றங் கேட்டுத்
தயங்கிடும் தனையர் தாமாய்,
வாய்விட்டு வருஞ்சொல் லின்றி
வருத்தமா யிருந்தார், நின்றே!

மச்சியம் பாது விட்ட
மறைமிச்ச மில்லை; மாழ்கிக்
குச்சியம் பாது விட்ட
குறைமிச்ச மில்லை; கூறின்,
உச்சியம் போது விட்ட
உருப்பத்தா லோய்ந்தென் னுள்ளம்
எச்சியம் பாது விட்ட
இருப்பினை யியம்பி னேனே.

''காலையில் களிக்கப் பூத்த
கமலம்போல் கவிஞுண் டாகி,
மாலையில் மணக்கும் முல்லை
மலர்போலக் கமழ்வீ ராக!
வேலையில் கழியா வேளை
விரும்பிச்செந் தமிழ்நா லாய்ந்து
சோலையில் நாவ லாய்ச்சொல்
சுவையுடைத் தாக்கிக் கொள்வீர்!

இகத்தெழி லியற்கை யின்ன
திதனியல் பிதுவென் றோரீர்!
அகத்தெழி லமையு மாறு
யறிவுநூ லதுகற் றுயீர்!
முகத்தெழில் முறுவல் கூட
முகிழ்க்காது, முதுமை யுற்றுச்
சகத்தெழில் சார்த்தி டாதே
சாப்பாட்டுக் காய்வாழ் வீரோ?

'நல்லது செய்தோர் துய்த்தல்
நல்லதே! நலம்நா டாதிங்
கல்லது செய்தோர் துய்த்தல்
அல்லதே!' யதுவல் லாமல்,
'இல்லது செய்வோர்க் கென்றும்
இளமாக வேண்டா' மென்னும்
சொல்லது செய்தோன், பண்டைச்
சுயத்தமிழ் கவிஞன் கண்டீர்!

'செங்கதி ரொத்துச் செய்யும்
செயல்திற னுண்மை யெய்தித்
திங்களை யொத்துச் சீர்சால்
செந்தண்மை சேரப் பெற்று,
மங்குலை யொத்து மண்ணில்
மலர்ச்சியைச் செய்து மக்கள்
எங்கணு மொத்தி ருந்திங்
கேற்றங்கொள்' கென்று ளன்றே!

'ஈயென இரத்த லென்றும்
இழி,'வென்று னேற்போ 'ரின்மை
நோ'யென நுவலா முன்னே
நுனுகியோர்ந் தீந்தான்; நோற்ற
சேயெனச் சீமைக் குற்ற
சிறுமையைத் தீர்த்தான், 'சேமத்
தா'யெனுந் தகைமைத் தானேன்
தரணியில் தமிழ னன்றோ?

'ஏரஞ்சி யிளைத்தா' னென்றும்
இயம்பினோ ரில்லை; 'ஏற்ற
போரஞ்சிப் போனா' னென்றும்
புகன்றவ ரில்லை; பொல்லா
தாரஞ்சி யடங்க வாழ்ந்த
ஆற்றல்சால் தமிழன் தன்னைப்
'பாரஞ்சிச் சாவா' னென்றே
பாரதி பாடி வைத்தான்.

'நெஞ்சினி லுரமில் லாதும்
நேர்மையின் திறமில் லாதும்,
அஞ்சியே தமிழர் சாவ
தவனியி லுண்மை யாயின்,
'விஞ்சைய' ரெனஇங் குற்று
விரவினோர் பயந்த வேண்டா
வஞ்சகப் பொய்ப்பு ராணம்
வழங்கிய நஞ்சா லன்றோ?

வாசுகி கயிறாய்த் தேய
வாருதி கடைந்த தென்ன?
கீசகன் கிடைக்க வீமன்
கிழித்துண்டை செய்த தென்ன?
மூசிக வூர்தி யோன்தன்
முகம்மாறு பட்ட தென்ன?
கோசிகன் கதைக ளென்ன,
கொஞ்சமா தமிழ கத்தே!

மாங்காய்க்குப் பன்னீ ராண்டு
மாதவம் புரிந்த காதை,
காங்கேயன் கருவாய் வாய்த்துக்
கங்கையா றீன்ற காதை,
பாங்காகக் காதில் குந்தி
பையனைப் பெற்ற காதை,
ஓங்கியே வுலக ளந்தவ்
வுத்தம னுறங்கும் காதை!

கண்கட்டி வாழ்ந்து வந்த
காந்தாரி குழவிக் கல்லால்
புண்கட்ட வயிற்றின் மீது
புடைப்பது வியாசன் கண்டு,
‘விண்கொட்டி வடியு’ தென்று
விரைந்துதி ரத்தை வாரி
மண்கட்டித் தொட்டி சேர்த்து
மக்களாய் மாற்றுங் காதை!

‘சிதலைசேர்ந் திரும்பைத் தின்று
செரித்த’தென் றுரைப்ப தொப்ப,
முதலைதான் பற்றி மென்று
முழுவதும் விழுங்கித் தீர்த்த
மதலையைப் பதிகம் பாடி
மகனுக்கும் காதை; — யேதும்
பதிலின்றி நம்பிப் பக்தி
பண்ணிப்பா ழானோம் நாமே!

புதுமைக்குப் பொருந்தும் பொய்யாய்ப்
போரறம் புத்தி போதம்;
பதுமைக்குப் பொருந்தும் பொய்யாய்ப்
பாடல்பண் ணுடல்; பற்றும்
முதுமைக்குப் பொருந்தும் பொய்யாய்
மோட்சமும், நரகும்; முற்றும்
பொதுமைக்குப் பொருந்தும் பொம்மைப்
பூசையால் புவிபொன் றிற்றே!

பசித்திடும் வயிறு கொள்ளப்
பருப்புநெய் கலந்து சோற்றைப்
புசித்திடச் செய்தல் போகப்
புலனெறிப் புலவர் சாக,
வசித்திடும் ஊர்கள் தோறும்
வறுமையை வளர்த்து, வாய்மை
நசித்திடச் செயும்பொய்த் தெய்வம்
நமைநாச மாக்கிற் றன்றே!

ஊன்மிக வுடலை யோம்பி
உருவொன்றி னெதிரியில் நின்று,
தேன்மிகு குரலில் தெள்ளத்
தேவதைப் பாடல் செப்பி,
'வான்மிக அருள்வை குந்த
வாசனே!' எனவ ணங்கல்
'ஆன்மிக' மென்பா ரெல்லாம்
அகம்பிர்ம மாவ தோரார்!

தெள்ளவே தெளிந்த தேனும்
திருக்குறள் கற்றுத் தேயா
துள்ளத்தி லுண்மை யொன்ற
வுலகோம்பும் செயல்கள் செய்து
கள்ளத்த னம்,பொய் சூது
கல்லியே வழித்து வீசி
ஒள்ளிய ராயெல் லாரும்
உவப்பதான் மிகமா கும்மே!

நையக மாகி நாட்டில்
நல்லோர்கள் நலிதல் நாடார்,
'பையகம் நிறையக் காசு
பணம்சேர்ப்ப தேபாங்' கென்னும்
வையகப் போக்கை மாற்றி,
வாழ்வாங்கு வாழ வே,நும்
கையகம் மெய்நூ லேந்திக்
கற்பதே கடமை'' யென்றேன்.

வாடிநின் றிருந்த தங்கள்
வதனங்கள் மலர்ந்து, வாய்த்துக்
கூடிநின் றிருந்தோர், 'இன்றிக்
குவலயத் தியல்பை யெல்லாம்
நாடிநன் கறிந்து நாங்கள்
நலமுற நவின்றீ' ரென்னத்
தேடிநின் றிருந்த நண்பன்,
'தெளிவித்தீ ரெனினு மையா!

'ஊரிது, வுவப்பூட் டாநும்
முளத்தினுக் குலைவைத் தீர்த்து;
மோரது வுவப்பை யூட்டி
முகத்தினை மலர்த்தும் முன்னே,
நீரது வுவப்பை யூட்டும்,
நேர்ந்தினிக் குளிப்பீ ராயின்!
வேரிது; விலகி வாரீர்
வீட்டுக்குச் செல்வோ' மென்றான்.

# வேட்கை

புரவல னுடன்நான் சென்று
புசித்தபின் பிரிந்து போகும்
இரவல னெனினு மென்னை
எதிர்பார்த்து நின்றி ருந்த
குரவலர் கொண்ட கூந்தல்
குவளைக்கண் பவளம் கொள்வாய்
பரிவலர்ப் பாவை, 'ஐயா!
பசியலர் விலையா?' என்றாள்.

''எனைவிட்டுப் பிரியா தென்றும்
இருந்தஅப் பசியை நீ, நற்
பனைவட்டிற் பசுநெய் விட்டுப்
பரிமாறி விரட்டி னாய்! நான்
மனைவிட்டு வெளியில் செல்ல,
மரக்காவென் மனப்ப சிக்குப்
புனைவொட்ட விருந்து போட்டுப்
போக்கிற்று, பொன்னே!'' என்றேன்.

நண்பனும் நவின்றான், நச்சு
நகையொடு நயந்து நின்றே:
''வெண்பனி விடியல் வேளை
விரும்பிடும் வெயில்போன் றீர், நீர்
தண்புன லாடி யுண்டு
தமிழ்நுகர் விக்கீ ராயின்,
கண்பனி யுகுப்பா ளின்றிக்
கள்ளிகண் முன்நின்'' றென்றேன்.

''பள்ளியிற் பயிலு மந்நாள்,
'பைந்தமி ழிளம்புல் லார்ந்திப்
புள்ளிமான் துள்ளி யோடிப்
போனதே' னென்னும் பொல்லாக்
கள்ளனின் கையிற் பட்ட
கள்ளிநா'' னென ந கைத்தாள்.
ஒள்ளிய கமலத் துள், பல்
லொளிர்முத்துப் பதிந்த தொத்தே!

'கண்ணென்று தானென் நெஞ்சைக்
களவாடிக் கொண்ட தென்றே?
பண்ணென்று குரல்தா னென்னைப்
பணிந்திடச் செய்த தென்றே?—
உண்ணின்ற வுவகை பொங்கி
உயர்ந்துவீ ழருவி யொப்ப
எண்ணின்றி நகைத்தான் நண்பன்,
இல்லாள்சொல் லினிக்கக் கேட்டே!

முந்தியெங் கும்நான் காணு
மோகன முழுமைக் காட்சி!
செந்துவ ரிதழ்வாய் மானும்,
செல்வனும் சிறுசொல் லாடி
அந்தநாள் பந்தம் கொண்ட
அருமறை வெளிப்பட் டின்றென்
சிந்தையிற் புகுந்து நீங்காச்
சித்திர மாய்த்தங் கிற்றே!

அலைமீதி லலையா யன்றென்
னகமகிழ் வெய்தச் சென்று,
தலைமீது தண்ணீர் மொண்டு
தாமத மின்றிப் பெய்தாங்
கிலைமீது வந்து குந்தி
யிட்டதை யிருத்தா துண்டேன்;
கலைமீது கருத்தை வைத்தேன்,
கைவாயைக் கழுவும் போதே!

அன்னையே யடித்தா லென்ன?
அலறிச்சே யழுதா லென்ன?
புன்னையே பூத்தா லென்ன?
பொறிவண்டு புகுந்தா லென்ன?
'தன்னையே தானு யர்த்தித்
தலையாலே தனைத்தா னீனும்
தென்னையே' எனநான் சித்தம்
தெளிந்துவந் திருந்தேன் தீர்ந்தே!

பரத்தினைப் பார்த்துப் பற்றிப்
பணிவித்து பயனு றுநாம்,
மரத்தினைப் பார்த்து நட்டு
மதர்ப்பாக வளர்த்தி ருந்தால்,
சிரத்தினைத் தாழ்த்தா தென்றும்
செய்நன்றி மறவா தும்நம்
தரத்தினை யுயர்த்தித் தாய்போல்
தாம்காக்கத் தவிர்த்தி டாதே!

பரத்தினைப் பாரா மல்நாம்
பற்பல படிவம் பண்ணிச்
சிரத்தினைத் தாழ்த்தி நின்று
சேர்த்திரு கையும் கூப்ப,—
ஒருத்தன்பின் னொருத்த னய்வந்
தொன்பது நூற்றாண் டொன்றிப்
பிரத்தியான் நாட்டை யாளப்
பிடிபட்ட கரியா னோம்நாம்!

# ஏமாற்றம்

பூவரம் பொன்றிப் பிஞ்சாய்ப்
புடைத்துக்காய், கனியா யீயும்
தாவரம் தவிர்த்து, வேறு
தரித்திடா தன்றென் னுள்ளம்,
தீவிரம் திகழச் சொற்கள்
திருத்தமாய்ச் செறிந்து தேனைப்
பாவரும் பும்போ தங்கப்
பாவையும் சேர்ந்தாள் வந்தே!

வண்மையும் வனப்பும் வாய்ந்த
வைகறைக் கமலம் போன்றே
ருண்மையிவ் வுலகங் கொள்ளற்
குணர்வினை யுரையிற் பெய்யும்
திண்மையில் புலன்தெ ளிந்து
திளைத்திடும் பொழுது, தேராப்
பெண்மையி லெதற்கென் முன்னைப்
பேதுற்று நின்றாள், வந்தே?

சிந்தைநொந் துற்ற செய்தி
செப்பினள் செல்வி: 'சேர்ந்து
மந்திர மாயம் பண்ணும்
மாற்றாரிங் கொருவ ரில்லை;
தொந்தர வுண்டு பண்ணும்
துக்கிரி யில்லை யூர்க்குள்;
எந்திர மனித னைய்நீ
ரியங்கலன் னுற்ற தெந்தாய்?

பெற்றஎன் தந்தை யுற்ற
பேறென வுமையான் பேணற்
குற்றஎன் னுவப்பை முற்றும்
உணவினா லுணர்த்தற் கெண்ணிக்
கற்றஎன் திறம்கை பற்றிக்
காட்டவே சமைத்தும், காணீர்;
மற்றுமென் முயற்சி சற்றும்
மகிழ்விக்க விலையின் றும்மை!

''பெண்ணுங்கால், பிரியம் முக்கால்
பெண்மையி னியல்பென் னும்பார்;
பண்ணுங்கா 'லிதுபா ராட்டப்
படவேண்டு' மெனவே பண்ணி
யுண்ணுங்கா லுரையொன் றின்றி
யுண்டெழுந் ததனை யுள்ளத்
தெண்ணுங்கா லிதயம் புண்ணா
யெனைநோகச் செய்த'' தென்றாள்.

உளமொன்றி யிருந்த என்றன்
ஓர்மையை யுணரா தூற்றுக்
'குளமொன்றி யிருந்த கோலக்
கோகனம் குவிந்த' தென்ன,
வளமொன்றி யிருந்து வாழ்வில்
வருந்தாதாள் வருத்தங் கண்டே
அளிமுன்றி லிருந்த முல்லை
ஆர்தல்விட் டயர்ந்த தொத்தேன்.

''குழந்தையின் குறையைக் கொஞ்சம்
கூர்ந்தோர்ந்து கொள்ளாத் தந்தை
கழிந்ததற் கிரங்கி நொந்த
கதை,காட்சி யாயிற் றம்மா!
இழந்ததுண் டென்னை நான்; மற்
றியல்பெனக் கிதுவென் றெண்ணா
தழ்ந்ததுன் சிந்தை! யாராய்ந்
தாற்றிக்கொள் ளறிவ றிந்தே!

தோமகந் தோய்ந்தி டாத
தூயசொல் தோகை யே! நான்
பாமுகங் காணற் குள்ளம்
பதியுங்கால் பயந்த திலே!
'காமுகன், கவிஞன், பித்தன், —
கருதினே னின'மென் றென்றே
நேமகஞ் செய்த துண்டிந்
நீனிலப்; நிலையிலை!'' தென்றேன்.

என்னிலை யின்ன தென்றன்
றியம்பநின் றேற்றுக் கொண்டாள்;
தன்னிலை தனக்கு நாணித்
தலைதாழ்த்தித் தளியில் தங்கும்
கன்னிலைக் காட்சி யாகிக்
கைகூப்பிச் 'சமிக்க' வென்றுள்
நன்னிலை கண்டு நானும்
நயம்பட, 'நல்ல' தென்றேன்.

குருகினி தோர்ந்து குந்திக்
கொள்ளும்மீன் காண்ப தொப்ப,
அருகினி லமர்ந்திஃ தெல்லாம்
அகங்கொண்ட நண்ப னங்கே,
'கருகின தோற்றம் மாறிக்
கவினுறு மயிலைக் கண்ணால்
பருகின' னெனவே பார்த்துப்
பண்ணினேன், பகடிப் பாங்கே!

## [illegible]

''பிறைபேணப் பெற்ற பேதைப்
பெண்ணெம்பல், பாவம்! பேச்சின்
முறைபேணல் மறந்து விட்டு,
முழுகிப்போய் விட்ட தேபோல்
குறைபேணிக் கூத்தாட் டாடிக்
குவலயத் திருளைப் போக்கும்
இறைபேணு மியல்பை யோரா
தெதிர்த்தெழி லிழந்த'' தென்றான்.

கொழுநனின் கூற்றைக் கேட்டுக்
குறிப்போர்ந்து கொண்ட கோதை,
''உழுநரின் உயர்வு மண்ணா
டுழுகின்ற 'கொழு'வின் சீராம்!
கழனியி னுயர்வு, முற்றும்
கதிர்கொண்ட மணிகள் சீராம்!
துழனி, சங் கீதத் துக்கே
தோற்றுவா யாவ தோரீர்!

பெண்ணின்பாற் பிழையே காணும்
பேராண்மைப் பேச்சா ளர்நீர்
விண்ணின்பால் மதியொப் பீராய்
விளங்கினும், விடிந்து வெய்யோன்
கண்ணிற்கா ணுங்கால், — பாவம்!
கழுவியே வுணவிட் டென்பெண்
உண்ணும்வெண் தட்டா யஃதோர்ந்
தொளிவதை யுணரீ'' ரென்றாள்.

'அம்பினை யெதிர்த்துத் தொட்டாள்
ஆற்றல்சா லம்பொன் றெ'ன்னக்
கொப்பினிற் குயில்போல் குந்திக்
குறுநகை கொண்டாள், ''கூறின்,
தம்பியும் தமய னைத்துத்
தரிசனம் தரினும், 'தண்ணீர்ச்
செம்புசா லாகா' தென்றே
செப்புவ தறியீ'' ரென்றாள்..

''ஆரணங் காஞேர் வாழ்வில்
அறிவறிந் தடங்கா ராய்ச்சொற்
போரணங் குகளாய்ப் போயின்,
புவியெலாம் புன்மை யெய்தத்
தோரணந் தூக்கிக் கட்டித்
துயரினை வரவேற் குந்தூர்க்
காரண மாவா' ரென்பர்
கவிஞர்க'' ளென்ருன், நண்பன்.

''பாட்டியாய்த் தாயாய், வாழ்வில்
பங்கேற்கும் மனைவி யாய்ப்பா
லூட்டியே வளர்க்க வுள்ள
உரிமைசால் மகளா யூஞ்சல்
ஆட்டியே துயிலச் செய்யும்
அரும்பெறல் பேத்தி யாய்த்தம்
வீட்டையே விளக்கும் பெண்தான்
விடிவெள்ளி'' யென்ருள், தேவி!

அகத்தினி லாரா அன்போ
ரலைகட லெனுமா ருர்க்க
முகத்தினில் முல்லை மொக்காய்
மோகன முறுவல் மூசச்
சகத்தினி லறிவ றிந்த
சதிபதி யசதி யாட்டிவ்
வுகத்தினி லிதற்கொப் பென்ன
வுரைக்கவே ருென்றி ராதே!

ஊராரங் கொருவ ரில்லா
தூற்றஎன் ருெருவன் முன்னக்
காராருங் கூந்தல் கன்னி,
கருத்தாருங் காளை யோடும்
சீராரும் சிந்தை யொன்றிச்
சிரிப்பது கண்டு நானும்,
''பாரோரும் பார்க்கத் தக்க
பதி, சதிப் பாங்கிலை'' தென்றேன்,

# எருது பாட்டு

அருவியா யொலித்த அந்த
அகமகிழ் வடங்கி யாறிக்
'''குருவியா யிருப்பார் கூடக்
கோட்பாடு கொண்டோ ராயின்,
பரவியை வல்லா ருய்த்தென்
படுவ'ரென் பதுமெய் யென்றால்,
கருவியா யதற்கு வேண்டும்
கருத்துரைத் தருள்வீ'' ரென்றான்.

ஊரோடி யைந்தி ருக்கும்
உயிர்களி னுணவுக் கென்றே,
சீரோடி யைந்தி ருக்கும்
செடி,கொடி, மரம்,புல், பூடாம்,—
வேரோடி யைந்தி ருக்கும்
வேளாண்மைப் பயிர்க ளெல்லாம்,
பாரோடி யைந்தி ருக்கும்
பரிசினைப் பார்ப்பீ ராய்ந்தே!

வானீந்த நீரை வையம்
வசமாக வாங்கி வைத்துத்
தானீந்து காப்ப தொப்பத்
தம்பதி யான நீவிர்
'தேனீந்த மலர்க' ளென்னத்
தெளிதமிழ் தேர்ந்தெ டுத்துக்
கானீந்த கவினை ஞானக்
கருத்தீந்து காப்பீ ராக!

'வளங்களில் நனியும் நல்ல
வள'மென வாய்த்தி ருக்கும்
குளங்களில், கொக்கும் வாத்தும்
கூர்ந்திரை கொள்ளும் போதும்,
களங்களில் கதிர்மி தித்துக்
கால்நொந்து வந்த காளை
யுளங்களித் தருந்தும் போதும்
உவக்கும்நீ ரொப்பீ ராக!

புழங்காது போடப் பட்ட
பொட்டலில் மழைபொ ழிந்து
முழங்காலை மறைக்க மூண்டு
முளைத்தபுல் முதிரா முன்போய்
ஒழுங்காக வுழுது விட்டங்
குடலோய்ந்த எருது கள்தாம்
மழுங்காது மேயுங் காலம்
மண்புகழ் மலர்வ தன்றே!

'கம்பொடு பயிறாம் கண்டு,
கதிர்கொளக் காய்கள் கொள்ளக்
கும்பிடும் பயிர்க ளுக்குக்
குணமான மண்ணிங் குள்ளேன்;
வெம்பிட வேண்டாம்; வேளை
வீண்செய்யா துழுது வித்தத்
தும்பொடு நுகத்தேர் பூட்டித்
தொடங்குவீர் தொழி'லென் றதே!

செந்தினை விதைத்து மண்ணில்
சிறுபயி ராகிச் சீராய்,
முந்தின களைகள் போக்க,
'முடுக்காக வளர்ந்து, மூண்டு
பந்தனக் கதிர்கள் விட்டுப்
பாங்காக விளைந்தேன்; பார்த்து
வந்தெனைக் கொய்வீ' ரென்று
வைத்தாரை யழைத்தி டாதே!

எதையெதை யெவ்வெப் போதெங்
கெவ்வாறு செய்வ தென்றோ
பதைபதைப் பின்றிப் பாங்காய்ப்
பயன்படப் பரிந்து செய்வீர்!
அதையதை யடைந்து காத்தே
அனுதினம் நுகர்வீ ராயின்,
இதைவிதி முறையா யென்றும்
ஏற்றினி யிதுபோல் வாழ்வீர்!

வாழையும், தென்னை யும்போல்
வாழ்வுக்கு வழங்கி வாழ்ந்து,
பேழையில் முல்லை யாகிப்
பெருமணங் கமழ்வீ ராயின்,
'ஏழை'யென் றியம்பு தற்கிங்
கெவனுமே யிருக்கா னேற்க
வூழையிவ் விதமா யோர்ந்திவ்
வுண்மையை யுணர்ந்து கொள்வீர்.

பாகையே, பழம்,பால் தேனே,—
பல்லாண்டிங் குண்டு வாழ்ந்தோர்
போகையில் பொருந்திப் போதல்,
புகழ்விகழ் வன்றி யில்லை!
ஆகையா 'லில்லை' யென்றெ
தகமகிழ்ந் தளித்தீ ராவீர்!
'ஈகையில் மட்டு மீட்டற்
கியல்வதிப் புகழே' யென்பர்.

'பட்டினி யின்றி வாழ்ந்தான்
பாட்டாளி' யெனல்,பாங் கன்று!
'எட்டுணைக் குறையு மின்றி
என்றென்றும் வாழ்வா னென்றால்,
விட்டது சனியன்; அன்றே
விடிந்தது நாட்டி லொன்றித்
தொட்டதும் துலங்கும்! வீட்டில்
துயரறும், தொல்லை தீர்ந்தே!

உழுதவ னுணவில் லாதும்
உடை,யுறை விடமில் லாதும்
அழுதவ னவா னயின்,
அறிஞர்நெஞ் சனலாய் மாறும்!
எழுதவும் நேரும்; செல்வர்
இழிவுறு போரா'' மென்றேன்,
தொழுதவ ரானர், 'தோன்றாத்
துணைநமக் கிதுதா' னென்றே!

# செய்தித்தாள்

தொண்டனே யாகச் செல்வத்
தோன்றலே யாகத் துய்போல்
வெண்டலை விருத்த ரைக,—
வேனில்நாள் தீர்ந்த தேனும்
உண்டுறு மயர்வு மற்றிவ்
வுலகுக்கே பொதுவென் றோர்ந்தோர்,
திண்டுடன் பாயுங் கொண்டால்
தீர்த்திடா திருப்ப துண்டோ?

விண்படு பறவை யெல்லாம்
விடியப்போ யிரைகண் டார்ந்து
புண்படும் வெயில்வந் துற்ற
பொழுதினில் பொழில்பு குந்து
கண்பட லறியார், என்னைக்
காணவந் தவர்,'க ருத்துப்
பண்படு மிடமிஃ' தென்றே
பாங்காக இருந்தார், பார்த்தே!

மஞ்சினை விட்டு வந்த
மதிமுகக் குவளைக் கண்மான்,
அஞ்சலி லிட்டு வந்தங்
கடைந்தநா ளிதழ்வி ரித்து,
நெஞ்சினை விட்டு வந்த
நிறைவினில் நேர்ப ருத்தி,
பஞ்சு, நூ லாடை யான
பான்மையாய்ப் படிக்க லானாள்!

காட்டிடை கண்ட செய்தி
களத்திடை விண்ட செய்தி,
வீட்டிடை யுண்ட செய்தி
விளம்பாம லண்டிக் கேட்க,
ஓட்டிடை யரசு, கட்சி,
உழைப்பாளர், நகரு ருற்ற
நாட்டிடை நடந்த செய்தி
நகையோடு நவின்று ளன்றே!

கரிசலில் லாத காட்டில்
களங்கமில் லாது ழைத்து
விரசமில் லாமல் வாழும்
விவசாய மக்கள் வேண்ட,
அரசியல், அறிவி யல், மற்
றழல், தொழ லியல்கள், — யாவும்
பரிசிலில் லாமற் பெய்தாள்,
பாமரர் செவியில் பாவை!

கழிமூடி மலர்ந்த கன்னிக்
கமலத்தின் வாய்ச்சொல் தேனை
விழிமூடிப் படுத்த வாறே
விரும்பிநான் நுகர்ந்தெ ழுந்தேன்,
பழிமூடப் பட்ட பார்க்கோர்
பரிகாரம் பண்ணப் பைய
வழிமூடுந் தடைகள் யாவும்
வழித்தெடுத் தெறிய வென்றே!

# விளக்கம்

''நாடுநம் முடைய தாயும்
நலன்நமக் கில்லை; நாட்டில்
ஏடுநம் முடைய தாயும்
இலக்கதி யில்லை; ஏட்டி
னூடுநம் முடைய தாகா
துள்ளதுண் மைக்கு மாறாய்;
மாடுநம் முடைய தாய்ப்பால்
மடியய்யர்க் காகு மாறே!

தெய்வத்தைப் பற்றி யேதும்
தெரியாதோர், தெரியார்க் கேற்பப்
பொய்வைத்துப் புனைந்து ரைத்த
புராணத்துச் சொற்க ளுக்கே
மெய்வைத்து மனிதன் போலும்
மேன்மையாய்ச் சிலைசெய் வித்துச்
சைவத்தும் வைண வத்தும்
சனங்களைப் பிணைத்தார், சார்த்தி!

நாவலந் தீவில் செய்த
நரியுப தேசம் கேண்மின்:
'கோவிலும் வில்வம்; கொண்ட
குண்டுக்கல் தெய்வம்! கொம்பில்
தாவிற்று குரங்கு திர்ந்த
தழைகுண்டுக் கல்மேல் வீழ
மூவுல காளும் வேந்தன்
முசுகுந்த னயிற்' றென்றே!

பெரியவர், அரசர், பெற்றோர்,
பிறரெலா மிருந்த மன்றில்
துரியனின் தம்பி தோதாய்த்
துரோபதைத் துகிலைப் பற்றி
உரியவே அவள் 'கோ விந்தா!
உதவுக' எனும்முன், உடனே
அரியதாய் வளர்ந்த தாமதை
தாயிரம் மீட்டர் நீளம்!

நினைப்புற்று நேராய் மேரு
நின்றகத் தியனை நோக்கி,
'எனைப்பற்றி விந்தி யம்தான்
ஏசிற்றும் மகனே!' யென்ன,
வினைப்பற்றி லான்போய்த் தன்கால்
விந்திய மலைமேல் வைக்கத்
தனைப்பற்றிக் காப்போ ரின்றித்
தாழ்ந்ததாம் தரையா யன்றே.

'நம்பினோர் கெடமாட் டாராம்;
நான்மறைத் தீர்ப்பிது தாம்; நம்
கம்பனார் விடமாட் டாராய்க்
கதையினி லிதைவைத் தாரித்
தம்பிரான் கதையை தாங்கித்
தமிழ்தாழ்ந்த தன்றி, நண்பா!
கெம்பனூர் மக்காள்! தேசம்
கெடச்செய்த திந்தப் பொய்கள்!

நிலையினை, நெறிநின் றெண்ணி
நினைவிற்கொண் டியங்கச் செய்யார்;
சிலையினை வணங்கச் செய்து
சிந்தையை யிருள்செய் வோராய்,
மலையெனப் பெருத்த பொய்கள்
மாணவி, மாண வர்க்குக்
'கலை'யெனும் பெயரால், காதில்
கசக்கிவார்க் கின்று ரின்றும்!

பெண்ணென்ன, ஆணென னத்தாம்
பிறந்தவர் பெருமை யெய்தற்
'கெண்ணென்ன, எழுத்தெ னத்தம்
மிதயத்தில் வைத்தற் கேற்கும்
கண்ணெனும் கல்வி யிற்பொய்
கலப்படம் செய்த தால், நம்
மண்ணினை மாற்று ராள
மாட்சியை யிழந்தோ'' மென்றேன்.

''கற்காலக் கல்லான் கண்டு
கழறிய கருத்தே யாகப்
பிற்காலப் பெரியோன் கண்டு
பேணிய கருத்தே யாக!
சொற்கோல மிட்டுக் கேட்கச்
சுவையாக இருப்பி னும், நாம்
தற்காலத் தவற்றைப் பற்றித்
தரமாய்தல் தவறன்'' றென்றே,

சுடரிதழ் சுருட்டி யெட்டச்
சுடர்க்கொடி யெறிந்தாள், சோர்ந்து.
''படருங்கால், 'பசரி' செய்யும்
பயிர்க்கிடர்! படிப்பில் பொய்கள்
தொடரின்மெய்க் கிடராம்! தூக்கித்
தூரமா யெறிந்து நாட்டின்
இடரிதைக் களைவே'' மென்றான்,
எனதரும் நண்ப னன்றே!

பச்சைப்பொன் வண்ணச் சீலை
பாங்காகத் தரித்துப் பாரோர்
நச்சும்தேன், கனி, காய், நன்னீர்
நல்கியே நலிவு தீர்த்து
'மெச்சுந்தா யாதற் கன்றம்
மேகந்தோய்ந் திருந்த குன்றும்
இச்சித்த' தெனவே வானில்,
இயங்கிறு னினிக்க வெய்யோன்.

நயம்புகு கருத்தை நாடி
நவிலுதல் பருக நல்லார்,
'கயம்புகு மதுக ரங்கள்
கமலங்கண் டிருந்த' தென்னச்
சுயம்புகு முளத்தி னேடும்
சோர்வின்றிக் குந்திச் சொக்கி
'யியம்புக ஐயா! எங்கட்
கெதுவேனு மினியு' மென்ருர்.

''பல்லாண்டு கட்கு முன்னிப்
பைந்தமிழ்ப் பாரி லோருர்!
சொல்லாண்டு கொண்டு வாழும்
சுதந்திர மக்கள்! சோரா
தில்லாண்டு, மனிதப் பண்பா
மியல்பாண்டு மெதிர்ப்போர் மீதில்
வில்லாண்டு, வெற்றி யாண்டு,
விளங்கினர், விதியை யாண்டே!

கழலுடை வேலி முட்சூழ்
கவின் மிகு சீறூ ரில், போர்த்
தொழிலுடை வீர ருண்ணீர்
தோன்றிடத் தொட்ட கூவல்,
எழிலுடைக் கானல் யானை
இரவில்நீ ரருந்த வந்தால்,
குழலிடைக் குரல்கொள் மாதர்
குலைத்தோட்டி நகைப்பார் கூடி!

கன்றொடு காலி காணக்
கதிர்காணத் தருக்கள் சூழ்ந்த
மன்றிடை, வீரர் மல்,வில்,
மறம்மிகு வாள்,வே லேந்தி
வென்றிடும் போர்ப்ப யிற்சி
விதியாகச் செய்வார்; வீரம்
ஒன்றிடு முளத்த ராய்த்தம்
முடலிடை யுறுதி யுற்றே!

சிலைவல்லோன், வாள்,வேல் வல்லோன்
செறுநர்கைப் படையின் றேல்,மற்
கலைவல்லோன் காலை மாலை
கற்பிக்க வும்கை வல்லோன்,
தொலைவில்லோ னொருவன் தங்கள்
தோன்றலாய்ந் தேர்ந்து கொண்டோர்த்
தலைவல்லோ ராகி வாழ்ந்தார்,
தன்னிகர் தானே வோராய்!

மல்லினாற் பொரவந் தோரை
மல்லினால் வெல்வர்; மாய்க்க
வில்லினாற் பொரவந் தோரை
வில்லினால் வெல்வர்; விள்ளாக்
கல்லினாற் செய்த சிற்பக்
கவின்மிகு மெய்யர்; காட்டுப்
புல்லினா லில்லம் வேய்ந்து,
புகழினால் தமைவேய்ந் தோரே!

யாருக்கும் தீங்கெண் ணாநல்
லாற்றல்சால் தோன்ற லென்றிப்
பாருக்குள் பெயர்பெற் றோனின்
பாட்டனு மொருவன்; பண்ணும்
போருக்குள் புலிபோல் பாய்ந்து
பொல்லார்வேல் பட்டுப் பொன்றப்
பேருக்கு நடுகல் லிட்டுப்
பேணினார், பெரியோன் பீடே!

என்பொடு தசையி யைந்த
இயல்பினி லிதயத் தென்றும்
அன்பொடு மமைந்த ஆற்ற
லளவறிந் தடங்கி யாய்ந்து
பொன்படு மணியாய்ப் பூண்ட
புகழ்மிகு தோன்றல் தேவி,
இன்பொடு மிதயத் தேற்றுங்
கிருந்தகோட் பாடி ரண்டே!

அதிகாலை தனில்நீ ராடி
அகத்துறு மாவல் மேவக்
குதிகாலைத் தடவுங் கூந்தல்
கோதையின் முதுகிற் பாவக்
கதிகோலக் கடும்போர் செய்து
களம்பட்டோன் நடுகற் பால்போய்த்
துதிகோலிப் பரவல் செய்தாள்,
'தொட்டது துலக்கு' கென்றே!

'பிறையிலா வானே' யென்னப்
பேறிலாப் பெண்தா னன்றே;
'துறையிலாக் கலமே' யென்னத்
தொடர்பிலாத் துணைவி யன்றே!
கறையிலாத் தோன்ற லன்புக்
கணவனா யுள்ளான்; காணின்
குறையிலாள், எனினும் கொண்ட
கோட்பாடு நிறைகொள் ளற்கே,

பஞ்சரம் விட்டுச் சென்ற
பைங்கிளிப் பாவை. வாயால்
தன்சிரம் தாழ்ந்து வேண்டும்
தனிப்பட்ட வரமஃ தொன்று:
'நெஞ்சுர மற்றோ ருற்றோர்
நித்தமும் நிறைய வந்து

'வெருவரும் போர்மேல் சென்று
வெல்லும்தன் கொழுநற் காகத்
'திருவரம் பற்றி ருக்கும்
தேளெ'னு மரச ஞேடோர்
செருவர வேண்டும்; சென்று
சீமையே காண வென்று
தரவரும் புகழும், நாடும்
தழைத்திட வேண்டு' மென்றே!

'சிறுமையில் லாது சிந்தை
சிறப்புறுஞ் செயலைச் செய்தால்,
மறுமையின் வித்தா' மென்னும்
மனத்திட்ப முற்றம் மாதும்,
திறமையைத் தேசத் தாரும்
தெரிந்துகொண் டொழுகத் தேர்ந்தாள்,
'வெறுமையா யுண்டு றங்கும்
வீண்வாழ்வு வேண்டா' மென்றே!

பண்டைநம் தமிழ்பண் பாடே
பாடலாய்ப் பகர்ந்தி ருந்தும்,
கண்டதைக் கற்ரே ராமல்
கல்தெய்வக் கதைகள் கற்க,—
அண்டைநாட் டார்வந் தாள,
அயல்நாட்டா ராள, நாட்டைக்
கொண்டன ரென்ற வுண்மைக்
குறிப்போர்ந்து கொள்வீ'' ரென்றேன்

''குமரியர், குமரர் கூர்ந்து
கொள்கையாய்க் கொளவே வுள்ள
அமரலக் கியமிஃ தையா!
யாண்டைய'' தென்ருன், நண்பன்.
'''சமரெ'னின், 'சரிவா' வென்னும்.
'சந்தி'யென் ருல்,'போ' வென்னும்
நிமிரிய தமிழர் தங்கள்
நிகரிலாச் சங்க நாள்கள்!

அடுத்துக்காட் டும்ப ளிங்காய்
ஆண்பெண்பாத் திரங்க ளாக்கி,
'எடுத்துக்காட் டிஃதென்' றேற்க
இலங்குமா றியற்றி யீந்தார்.
படித்துக்காட் டிடலாம்; பையப்
பாமரத் தனத்தை மாற்றற்
கிடித்துக்காட் டிடலாம், நண்பா!
'இலக்கிய மிதுதா' னென்றே!

'அறநானூ றதன்பே' ரென்றால்,
'அற்புத' மென்ப ரான்றோர்;
'மறநானூ' றென்றால், 'மன்னி
மலருக' என்பார்; மற்றும்
'திறநானூ' றென்றால், 'கற்றுத்
தெளியலா' மென்பார்; தேசம்
'புறநானூ' றெனப்பே ரிட்டுப்
போற்றிடும் நூலிஃ தொன்றே!

அவசிய மான இந்த
அரும்பெரும் புறநா னூறே
கவசமாய்க் காக்க வுள்ள
கவிச்செல்வ மிதைக்கை விட்டுத்
திவசமுந் தெய்வ மும்,தேர்
திருவிழாத் தேர்ந்து, மக்கள்
செவிசுயப் பொருள்சேர்க் காது
சீரழிந் தாரிங்'' கென்றேன்.

மாசிம்மி யில்லா மாண்பின்
மனத்திட்ப முள்ள மங்கை
ராசம்மா ளிதனைக் கேட்டு,
ரசிகையாய் மகிழ்ந்து ரைத்தாள்:
''காசும்மைக் கவரா தையா!
கவர்ந்தது கவிதை! யுங்கள்
நாசெம்மை! நாடின் நாளை
நமர்செம்மை யாவா'' ரென்றாள்.

# விசாரம்

உய்வதை யோர்ந்து கொண்டவ்
வூராருக் குணர்த்தி யூக்கிச்
செய்வதைச் சிறக்கச் செய்யும்
செம்மலும் செப்ப லுற்றான்:
''வைவது சிலராய், வாழ்த்தி
வணங்குதல் பலரா யுள்ள
தெய்வதம் பற்றிக் கொஞ்சம்
தெளிவிப்பீ ரையா!'' வென்றே.

''ஆண்டவ னருகன், கர்த்தன்,
அல்லாவென் றழைக்கப் பெற்று
மாண்டகு பொதுமைப் பேரால்
மற்றைய மதங்கள் பேசக்
காண்டகு பொருள்கட் கேற்பக்
கதைகட்டிப் பெயர்கள் சூட்டி,
வேண்டவே தியர்செய் வித்தார்
வெற்றுப்பொய்ச் சிலைவெவ் வேறே!

உயிரென்றிங் குள்ள யாவும்
உண்டாக்கிக் காத்த ழிக்கும்
செயிரொன்று மில்லாத் தெய்வம்
'சிவனயன் திருமா' லென்பர்;
'அயிரொன்று மிவற்றி லில்லை,
அஞ்ஞானிக் கன்றி' யென்பர்;
பெயரென்று பெறும்பொ ருள்,பின்
பிரம்மமா வதுயெவ் வாறே?

மண்ணினில் தோன்றி யுள்ள
மரஞ்செடி, விலங்கு, புட்கள்,
திண்ணிய மக்க ளென்னத்
திகழுமிச் சீவ ராசி,
எண்ணிடும் பிறப்பி றப்பா
யியங்க,நீர் நெருப்புங் காற்றும்
நண்ணியே யிரண்டற் றென்றி
நமக்குள்ளு மிருப்ப தன்றோ?

எண்ணோராச் சீவ ராசி,—
இயங்குவ இருப்ப வென்றிம்
மண்ணூரத் தோன்றி, நின்று
மறைவன வாகப் பண்ணல்,
தண்ணீரும், நெருப்புங் காற்றும்
தாம்தவிர்க் காஇவ் வுண்மை
விண்ணோராய்த் தமையெண் ணும்மிவ்
வேதிய ரறிந்தா ரன்றே!

'பரப்பிர்ம' மெனப்பே ரிட்டார்,
பரந்தியங் கும்காற் றிற்கே!
'பரஞ்சோதி' யெனப்பே ரிட்டார்,
பரந்தெரி நெருப்பி னுக்கே!
'பரந்தாம' னெனப்பே ரிட்டார்,
பரந்துபெய் வான்நீ ருக்கே!
பரமர்த்த மறியா ராய்நாம்
பணிந்துபா ழாய்ப்போ னோமே!

விருப்பமும் வெறுப்பு மின்றி
விளக்கி டின் வெளியு முள்ளும்
நெருப்பொடு நீரும் காற்றும்
நிலமுங்கா ரணங்க ளாகி,
உருப்பெறு மூலத் தாதா
லுடலுயி ராண்பெண் ணென்னப்
புரப்புறத் தமைத்தா மீன்று
புறந்தந்து,— போகும் வாழ்வே!

'காற்று,நீர், நெருப்புக் கான
காரணப் பொருளைக் காணின்,
மாற்றருஞ் சக்தி வாய்ந்த
மாந்தர்கண் காண மாட்டா,—
நூற்றுக்கும் மேல்,—வெவ் வேறும்
நுண்ணணு வினைக்க' மென்பர்;
ஏற்றஇவ் வணுவெ னுஞ்சொற்
'கிறை'யெனும் பெயரு முண்டே!

'ஒளிவிட்ட மின்,மின் காந்த
வெளி,வளி யணுவென் றோயா
தளவிட்டுக் கூறற் காகா
வளவின தாகி, வான
வெளிவிட்டு வேறு யொன்றாய்
விரைந்தவா றியங்கு' மென்ப
திளவட்ட மானோர் கூட..
இன்றிதை யறிவார் கற்றே!

இணக்கமும் பிணக்கு மாகி
யிருக்கும் நீர், நெருப்பும், காற்றும்
கணக்கிலாச் சீவ ராசி
காரண மாதல் கண்டார்.
பணிக்கரா யிருந்து முண்மை
பகராமற் பதுங்கி யுண்ண,
வணக்கினார், நம்மைச் சைவ
வைணவ ராக்கி வைத்தே!

நீருக்கும் நெருப்பி னுக்கும்
நேர்த்தியாய்க் கோவில் கட்டி
ஊருக்குள் ளிரண்டு பண்ணி
உயிருக்கோர் விலையில் லாதும்,
பாருக்கு மாசுண் டாகப்
பாவபுண் ணியம்பா ராதும்,
போருக்கு வித்திட் டார்கள்
பொய்யர்கள் புராணப் பொய்யால்!

தன்னலர், தமைப்பின் பற்றும்
தனிகர்கள், தரணி யாளும்
மன்னரோ டொன்றி, மற்ற
மனிதரை மடக்கிக் கூடித்
தின்னுதற் கமையச் செய்த
தெய்வம்,தேர், திருவி ழாவென்
றின்னமும் நமைவி டாராய்
ஏமாற்று கின்று ரிங்கே!

வெய்யிலும், மழையும், காற்றும்
வேதனை விளைவித் தாலும்,
மெய்யினில் மெலிவு மேவ
மிடிமையா லடிமை யாய்மற்
றுய்யுமா றின்றி நொந்தே
உழைப்பவ ரிறக்க, வுண்டிங்
கய்யர்கள் சிறக்க வைக்கும்
அநியாயக் கல்சிற் பங்கள்!

இயற்கையைப் பற்றியேதும்
எண்ணாரை யேய்ப்ப தற்காய்ச்
செயற்கையாய்ச் செய்து வைத்தார்
‘சிவனையன் திருமா' லென்றே;
‘முயற்கொம்பு, நரிக்கொம்' பென்னும்
மூடர்வாய்ச் சொற்கள் போன்றே,
உயற்குத வாத்தெய் வங்கள்
உண்டெனல் குதிரைக் கொம்பே!

வில்லினை, வேலென் றானை
விவரமில் லாதா னென்போம்;
புல்லினைப் பூடென் றானைப்
புலனிலாப் பொடிய னென்போம்;
சொல்லினிற் பொருள்கா ணாதான்,
சுவர்க்கத்தைக் காண வைத்த
கல்லினைக் ‘கடவு' ளென்று
கழறுவோர்க் கிவர்மே லோரே!

‘ஊழுங்கா லூக்கம் முக்கால்
உடையோரா யுண்மை யோம்பி.
வாழுங்கால் வழுத்தச் செய்து
வைத்தநற் செயல்பா டன்றித்
தாழுங்கால் புணையொன் றில்லை
தரணியில் மக்கட்' கென்றே.
வீழுங்கால் வினவி னோர்க்கு
விளக்கினாள், விரும்பி ஔவை!

'எஞ்ஞான்றும் உருவாய்த் தெய்வம்
இருந்ததே யில்லை' யென்று
விஞ்ஞானம் விவரித் தின்று
விளக்கமாய் விளம்பிற் றேனும்,
மெய்ஞ்ஞான மெதுவென் றோரார்
மேதினி நலன்நா டாதார்
அஞ்ஞானம் பரப்பு கின்றார்,
ஆரிய நூல்கற்'' றென்றேன்.

''பயிர்ப்பகை யாகும், பற்றிப்
படர்ந்திடும் பதவல்; பாரில்,
பெயர்ப்பகை யாகும், பேராப்
பேராசை; பிணிக்கப் பட்டோர்த்
துயர்ப்பகை யாகும், தூய்மை
துலக்கிடும் சுதந்தி ரம்;தம்
உயிர்ப்பகை யாகும், உள்ளத்
தொளியின்மை யென்றான், நண்பன்.

''மருளுக்குள் ளாக்கற் கான
மறையவர் நூல்கள் கற்றும்,
இருளுக்குள் ளாகா மல்நீர்
இலங்கிடும் அறிவை யெய்தி
அருளுக்குள் ளாயெங் கட்கும்
அளித்தீரின் றையா!'' வென்றே,
தெருளுக்குள் ளானேன் தேவி
தித்திக்கச் செப்பித் தீர்த்தே,

வீட்டுக்குள் விரைந்து சென்றாள்;
வேட்டாளின் குறிப்ப றிந்து,
காட்டுக்கன் றோட்டிச் செல்லாக்
காராட்டில் கறந்தான் பாலே!
ஈட்டியிட் டிருந்த தீனி
எடுத்ததன் முன்னு லிட்டான்;
நாட்டுக்குள் 'நல்லோ' னென்ன
நற்பெய ரெடுத்த நண்பன்!

# சொற்கலகம்

'ஏட்டுப்பா லிருந்த தெல்லாம்
எடுத்தெமக் கீந்தீ' ரென்றே,
வீட்டுப்பா லிருந்து வந்த
வேல்விழி விழைந்'திங் கின்றிவ்
வாட்டுப்பால் கலந்த தேனீர்
அருந்துக!' வென,நான் 'நீயென்
பாட்டுப்போ லிருந்திந் நாட்டில்
பாராட்டப் படுக!' என்றேன்.

விலக்கிட வுள்ள தெல்லாம்
விலக்கியே, விரும்பு மாருய்த்
துலக்கிட வுள்ள தெல்லாம்
துலக்கிடும் தோன்றல் சொன்ஞன்:
'குலக்கொடி' குறுக்கி டாத
குணவதி துணிவி ஞல்தா
னிலக்கொடிங் குள்ளே ஊனயா
லிங்கைய னெனநா' னென்றே!

'பூமாற்றிப் பூத்த' தென்னப்
பொலிமுகப் பாவை சொன்ஞள்:
''நாமாற்றி யுரையா டாத
நல்லவ ரெனநான் நம்பின்,
ஏமாற்று கின்ரு ரையா!
எனையிவர் துதிகள் செய்தே!
தாமாற்றும் பணியெல் லாமென்
தலைமீதில் தள்ளி'' யென்றே.

''பதிசெய்வ தனைத்தும் பார்த்துப்
பங்குபற் றிக்கொள் கின்ற
விதிசெய்து கொண்டென் மீது
வீண்பழி சுமத்த வேண்டாம்!
'மதிசெய்த மாதே! நீபெண்;
மனையொடு மகிழ்ந்தி ரெ'ன்ருல்
நிதிசெய்து மிழந்தோ ரென்ன
நிலத்தைநீர் செய்வாய் நீயே!

‘‘‘தானுவை தச்சில் தாங்கித்
தமிழ்செய்தித் தாள்வந் தாச்சு!
மானேவா! மக்கள் குந்தி
மகிழ்ச்சியாய் மாந்திச் செல்லத்
‘தேனீவ’ தெனவே வோதித்
தெளிவிப்பா யினிநீ’ யென்றே,
நானேவாய் விட்ட ழைத்தேன்;
நயக்கநீ படித்தா’’ யென்றான்.

‘‘இடங்களுக் கேற்ப ஏற்றம்
இறக்கமென் பதுவே யின்றி,
மடங்களில், மணவி ழாவில்
மறையவ ருளரல் போல்நீர்,
‘தடங்கலில் லாமற் செல்லும்
தனிப்பேருந் தெ’னவா சித்துக்
கடங்கழிப் பீர்!கேட் பார்தம்
கருத்தினிற் படியா’’ தென்றாள்.

எனைவின வினர்போன் ‘றுண்மை
எவர்சொலி’ லெனநோக் கித்தம்
நினைவினில் நிலைத்து நின்று
நீள்மனை யெதிரொ லிக்க,
‘நனைவினை புரிந்து முல்லை
நாவிதழ் நடுப்பூத்’ தென்னப்
புனைவென லின்றி யுள்ளம்
பூரித்தார், நகைத்தப் போதே!

‘பித்தர்தம் செயலெ’ன் பேனே,
‘பேரின்பப் பெருக்’கென் பேனே,
‘சித்தசுத் தியினல் சேர்ந்த
செழுமையின் சிறப்பென்’ பேனே!
இத்தரை யரிதிற் பெற்ற
இல்லற நிறைவாங் கொல்லோ?
உத்தமச் சதிப திக்கோ
ருவமைநா னுரைக்கி லேனே!

'ஏற்றத்தாழ் வின்றிப் பேசற்
கிரண்டற இணைந்த நெஞ்சம்
மாற்றந்தா னின்றி வாழ்வில்
மனைமாட்சி கமழ்தல் மன்னிப்
போற்றுத லுற்றிந் நாட்டில்
புகழுற்றுப் பொலிக' வென்றே
நேற்றுந்தா னின்றுந் தானென்
நினைவொன்றி நின்ற தன்றே!

மலைவாயில் புக்கான் வெய்யோன்;
மாலையை மகிழ்ச்சி யாக்கத்
தலைவாயில் புக்காள், இல்லத்
தலைவியும்; தணலாய்ப் பற்றி
உலைவாயில் புக்கா னெங்கள்
உணவுக்காய் நெருப்புத் தேவன்!
கலைவாயில் கட்டிக் கானல்
கவின்வாயில் புக்கேன், நானே!

# நிரல்நிறை

காடுமே டெல்லாம் நீடிக்
கடுகிப்புல் லார்ந்து வந்த
ஆடுமா டெல்லாம் நாடி
அடைப்பிடம் சேரக் கோழி
கூடுமூ டெல்லாம் கூடிக்
குஞ்சொடு குரல டங்கத்
தேடுமீ டெல்லாம் தேடித்
தீர்ந்ததன் றூரின் பாடே!

''சாவினில் வாழ்வி னில்தம்
சதமென நமைச்சார்ந் துள்ள
ஆவினம், அன்று மின்றும்
அரும்பெருஞ் செல்வம்! ஆன்றோர்
பாவினம் அடுத்த செல்வம்!
பரிவாக அவற்றைப் பார்த்துத்
தீவன மிட்டுக் கட்டித்
திளைத்திடச் செய்க, நண்பா!

காட்டுக்கு வேலி கோலிக்
காத்துழ வுரமி டாதார்,
பாட்டுக்குப் பட்ட கூலி
பாங்காகப் பகிர்ந்தி டாதார்,
மாட்டுக்கு மதர்த்துத் தின்ன
மறுதீனி போடா தார், தம்
வீட்டுக்குத் துன்பம் நேர
வித்திட்டோ ராவார்'' றென்றேன்.

''மாடொரு செல்வம்; மற்றிம்
மனையொரு செல்வம்; மன்னும்
காடொரு செல்வம்; காட்டின்
கனின்பயிர்ச் செல்வ மேனும்,
நாடொறும், வாழும் மக்கள்
நலமோர்ந்து நடக்கச் செய்யும்
ஏடொரு செல்வம்! ஏட்டை
இயற்றுவோ ரெமது செல்வம்!

எங்களுக் காக வேநீ
ரெழுதும்நூ லென்று முள்ளோர்
தங்களுக் காகித் தாழ்வைத்
தவிர்த்திடும் தமிழர் நாட்டில்!
திங்களு முங்கட் கொவ்வாத்
தேசீயச் செல்வம் நீரே!
உங்களைக் காப்ப தொன்றே
வுளத்திலுண் டின்றெங் கட்கே!

குறையொன்று மின்றி நீரிக்
குவலயத் தினிதி ருந்து
நிறையொன்று மரிய நூல்கள்
நேர்த்தியா யியற்றி யீயும்
முறையொன்று செய்தே னுங்கள்
முன்னனு மதிபெ ருதே!
'இறை'யென்று வைத்தே மெங்கள்
இதயத்தி லுமையா'' மென்ருன்.

புகழ்ந்திட வில்லை, 'நீதான்
புரவலன் புலவர்க்' கென்றே;
மகிழ்ந்திட வில்லை, மற்றிம்
மகத்தான சொற்கள் கேட்டும்!
இகழ்ந்திட வில்லை, 'ஏற்கேன்
இந்தவுன் னுதவி' யென்றும்!
திகழ்ந்திட, அன்றென் நெஞ்சு
திறந்திது செப்பித் தீர்த்தேன்:

"'கயன்மிகு நதிக ளாகிக்
கால்வாயால் குளங்கள் கண்டு
வயன்மிகு மளவில் செந்நெல்
வாரியாய் வழங்கு மாறே,
புயன்மிக வுயர்ந்த குன்றில்
பொலிந்திடப் பொழிந்த' தென்னப்
பயன்மிகு பாட லால்நாம்
பண்பாட்டுப் பண்ணை காண்போம்!

பண்ணாக நேர்ந்தால் நீயும்,
பாட்டாகித் தீர்வேன் நானும்!
கண்ணாக நேர்ந்தால் நீயும்,
கவிஞகித் தீர்வேன் நானும்!
மண்ணாக நேர்ந்தால் நீயும்,
மலராகித் தீர்வேன் நானும்!
விண்ணாக நேர்ந்தால் நீ, நான்
வெய்யோனாய்த் தீர்வே'' னென்றேன்!

''என்மனே யுறுஞ்செல் வத்தில்
ஏற்பவை யினிமே லுங்கள்
நன்மனே யுறுமி∴ துண்மை!
நலிவுநீத் திருந்து, நீங்கள்
வின்முனேக் கணேக ளென்ன,
விளம்பிடும் விளக்க மாம்நற்
சொன்முனே, இழந்த எங்கள்
சுயத்திறன் மீட்கு'' மென்ருன்.

நிரம்பிற்று வயிறும், நெஞ்சும்!
நினேவினி லிருந்த தெல்லாம்
உரம்பற்ற வுற்ருர் காதில்
உயர்வுறப் பெய்தல் தீர்ந்து,
வரம்பற்ற சாந்தி யெய்தி
வயணமாய் விழிகள் மூடப்
பெரும்பற்ரு யுறக்கம் பற்றிப்
பிணேத்திடப் படுத்தே னன்றே

ஊழையுப் பக்கங் காண
வுழைப்பவர்க் குரிய வூரில்,
கோழியும் விடிவு கூறிக்
கூவக்கேட் டெழுந்து சென்று
சாலையில் பரிக்குத் தீனி
சரிவரப் போட்டு வந்த
தோழனென் புறப்பாட் டிற்குத்
துணேயாக லுற்ரு ஞேர்ந்தே!

வண்டியைப் பூட்டி வந்து
வாசலில் நிறுத்த நண்பன்,
கெண்டையங் கண்ணாள் கண்ணில்
கிளரொளி முத்தாய்க் கோக்க
மண்டியே, ''எனை நீ ருங்கள்
மகளெனக் கொள்க!'' வென்றாள்;
துண்டினால் நானென் கண்ணீர்
துடைத்தாங்கு புறப்பட் டேனே!

'ஆதியச் சூழ்ச்சி யாவும்
அன்றுதொட் டின்று காறும்
பாரியல் பாகப் பார்த்துப்
பரிதவித் தேன்நான்; பாவம்!
நேரியர் தம்மைக் கொன்று
'நீச'ரென் றிகழ்வார்!' என்றே
சூரியன் சொல்லிக் கீழ்வான்
சுடரொளி செய்தா னன்றே!!